விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 28 திங்கட்கிழமை (12.07.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 205

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

## வடக்கு-கிழக்கு இணைக்கப்படவேண்டும் கூட்டமைப்பின் கோரிக்கைக்கு முஸ்லிம் காங்கிரஸ் எதிர்ப்பு!

(கொழும்பு)

**பிரிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைக்கப்பட இந்தியா உதவி செய்யவேண்டுமென்ற கூட்டமைப்பின் கோரிக்கைக்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி எதிர்ப்பு தெரிவித்துள்ளது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் சார்பில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிஸ் இவ் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.**

(20ஆம் பக்கம் பார்க்க)

## புனர்வாழ்வு முகாமிலுள்ள பல்கலைக்கழக மாணவர் உட்பட இருவர் இன்று விடுதலை பெறுவர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து, இராணுவத்திடம் சரணடைந்து தற்போது பம்பைமடு புனர்வாழ்வு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளில் இருவரை உடனடியாக விடுதலை செய்யுமாறு புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் பிரதிஅமைச்சர் விஜித முனி சொய்சா, புனர்வாழ்வு ஆணையாளருக்குப் பணித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்த பிரதி அமைச்சர் விஜித முனி சொய்சா நேற்றுக்காலை யாழ்.பத்திரிகையாளர்களை சந்தித்தார். (19ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் பாரியாருடன் நடிகை அசின் யாழ்.வந்தார்

(யாழ்ப்பாணம்)

தென்னிந்திய நடிகை அசின், இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாரியார் திருமதி சிராந்தி ராஜபக்ஷ மற்றும் திருமதி சுதர்சினி பெர்ணாண்டோ பிள்ளை உள்ளிட்ட குழு வினர் நேற்று பிற்பகல் யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டனர்.

தென்னிந்திய திரைப்பட நடிகை அசின் மற்றும் சல்மான்கான் ஆகியோரின் நிதியுதவியில் நவீனமயப்படுத்திய யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் கண் சத்திர சிகிச்சை நிலையத்தினை பார்வையிடுவதற்காக இக்குழுவினர் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தனர்.

இவர்களின் நிதியுதவியினால் யாழ்ப்பாணம் கண் சத்திரசிகிச்சை நிலையத்திற்கு புதிய லென்ஸ்களும், இந்தியா விலிருந்து புதிதாக கண் சிகிச்சை வைத்தியர்களும் வரவழைக்கப்பட்டனர். (20ஆம் பக்கம் பார்க்க)



## அணிசேரா நாடுகளின் ஒத்துழைப்புடன் நிபுணர்கள் குழுவை கலைக்கத்திட்டம் உதவி கோரி கடிதம் அனுப்பி வைப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் நிபுணர்குழுவை கலைப்பதற்கு அணி சேரா நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ள அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பான் கீ மூனின் நிபுணர்கள் குழுவை கலைப்பதற்கு அணி சேரா நாடுகளின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளும் நோக்கில் கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்தக் கடிதத்தின் ஊடாக எதிர்பார்த்தளவு வெற்றி கிட்டவில்லை எனவும் இதனால் இலங்கை அரசாங்கம் மீண்டும் அணி சேரா நாடுகளின் (19ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர்களை தாக்கவில்லை கடற்படை அறிவிப்பு

(கொழும்பு)

தமிழக மீனவர்கள் 50 பேர் மீது நேற்று முன்தினம் இரவு இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்தினர் என்கிற குற்றச்சாட்டில் எவ்விதமான உண்மையும் இல்லை என்று இலங்கைக் கடற்படைப் பேச்சாளர் கப்டன் அதுல செனவிரட்ண தெரிவித்தார்.

இக் குற்றச்சாட்டுத் தொடர்பாக கடற்படையினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டமையை அடுத்து அப்படி ஒரு சம்பவமும் இடம் பெற்றிருக்கவில்லைஎன்று உறுதிப்படுத்திஉள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-5)

## வேலணையில் மருத்துவமாது மர்ம மரணம் சிங்கள டாக்டர் மந்திகைக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வேலணை அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றிய குடும்பநல உத்தியோகத்தரின் மர்ம மரணத்தையடுத்து வேலணை வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாக இருந்த டாக்டர் பிரியந்த செனவிரட்ன மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மருத்துவ மாது சடலமாக மீட்கப்பட்டதையடுத்து டாக்டர் செனவிரட்ன அங்கிருந்து வெளியேறியிருந்தார்.

சங்கானை வைத்தியசாலைக்கு அவர் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்ட போதிலும் அதற்கு சங்கானை வைத்திய சாலைப் பணியாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து அவர் மந்திகை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

டாக்டர் செனவிரட்னவை மந்திகை வைத்தியசாலைக்கு மாற்றம் செய்யப்பட்டமைக்கு வைத்தியசாலைப் பணியாளர்கள் எதிர்ப்புத் தெரிவிக்க ஆயத்தமானபோது,

அவர் பாது (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் பிரதி அமைச்சர் விஜிதமுனி சொய்ஸா

(யாழ்ப்பாணம்)


தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் உரிய தரப்பினருடன் தொடர்பு கொண்டு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் பிரதியமைச்சர் விஜிதமுனி சொய்சா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் யாழ்.அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மிகவும் பின்தங்கிய மாவட்டமாக மொனராகலை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நான் யாழ் மாவட்ட மக்களின் பிரச்சினைகளை நன்கறிவேன். தெல்லிப்பழை மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நடமாடும் சேவையின்போது மக்களால் பல்வேறு பிரச்சினைகள் தெரிவிக்கப்பட்டது.

யுத்தத்தின் (20ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**







யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதியின் பாரியார் சிராந்தி மற்றும் நடிகை அசின் ஆகியோர் வரவேற்கப் படுவதையும் அவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளருடன் கலந்துரையாடு வதையும் நோயாளர்களைப் பார்வையிடுவதனையும் படங்களில் காணலாம்.

# வேலணையில் குடும்பநல மருத்துவ மாதுவின் மரணம் குறித்து உரிய விசாரணை வேண்டும்

## திருமதி விஜயகலா மகேஸ்வரன் எம்.பி கோரிக்கை

வேலணை மத்திய மருந்தகத்தில் குடும் நல மருத்துவ மாதுவாக கடமையாற்றிய கைதடி தெற்கைச் சேர்ந்த தர்சிகா சரவணை (வயது 27)மர்மமான முறையில் மரணமடைந் துள்ளமை குறித்து உரிய முறையில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஐக்கியதேசியக் கட்சியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வேலணை மத்திய மருந்தகத்தில் குடும்ப நல மருத்துவ உத்தியோகத்தராக கடமை யாற்றிய இந்த இளம் பெண் அங்கு பணியாற் றிய வைத்தியரான பிரியந்த செனவிரட்ண என்பவரால் துன்புறுத்தப்பட்டு வந்ததாகவும்



சனிக்கிழமை காலை இவரது சடலம் வைத் திய சாலையிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இதுகுறித்து உரிய விசாரணைகள் நடத் தப்பட்டு சம்பவத்துடன் குறித்த மருத்துவர் தொடர்புபட்டிருந்தால் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இது குறித்து பாரபட்சமற்ற விசாரணை நடத்தி குற்றவாளிக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும். இந்தச் சம்பவமா னது வேலணைப் பகுதியில் பெரும் பதற் றத்தை ஏற்படுத்தியுள்ளமையால் இது குறித்து பொலிசார் தமது கடமைகளை சரிவர செய்ய வேண்டும். பெண்கள் பாதுகாப்பாக கடமை புரிவதற்கு உரிய சூழல் குடாநாட்டில் ஏற்படுத் தப்படவேண்டியது அவசியமாகும். (ந)

# மட்டக்களப்பு அம்பாறையைச் சேர்ந்த எவரும் அழைத்துச் செல்லப்படவில்லை

## கூட்டமைப்பைக் குற்றஞ்சாட்டுகிறார் பிள்ளையான்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் இந்தியா சென்றவேளை மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் இருந்து யாரா வது ஒரு உறுப்பினரையாவது அழைத்துச் சென்றிருக்கவேண்டும். கட்சித் தலைவர்கள் மட்டும் தான் சென்றார்கள் என்று கூறு கின்றார்கள் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது.ஒரு கட்சியிலிருந்து இரண்டு உறுப் பினர்களும் சென்றுள்ளார்கள்.

கிழக்கு மாகாணத்தில் பல்வேறு பிரச் சினைகள் தேவைகள் உண்டு அவற்றை தீர்க்க அனைவரும் ஒன்றிணைந்து செயற் பட வேண்டும் இவ்வாறு கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள் ளார்.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை மாநகரில் கலாசார மண்டபம் அமைப்ப தற்கான பணிகளை ஆரம்பிப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலகத்தில் நேற்று இடம் பெற்றது. இதற்கு கல்முனைப் பிரதேச செயலா ளர் என்.லவநாதன் தலைமை தாங்கினார் இக் கூட்டத்தை கலாசார மண்டப அபிவிருத்திக் குழு ஏற்பாடு செய்திருந்தது. இதில் முதலமைச் சர் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது,

யுத்தம் காரணமாக இன்று வடக்கு,கிழக்கு மாகாண மக்கள் பலவற்றை இழந்த நிலை யில் இருக்கிறார்கள். போராட்டம் ஆரம்பித்த வேளையில் தமிழ் மக்களிடம் கல்வி பொருளா தாரம், காணிகள், வளங்கள் எல்லாம் நிறை யவே இருந்தது. இன்று யுத்தம் முடிவடைந் துள்ள நிலையில் தமிழர்கள் பலவற்றையும் இழந்து நிற்கிறார்கள்.

இன்றைய சூழ்நிலையில் எங்களுக்கு அரசியல் பலம் கட்டாயம் வேண்டும். அரசி யலைப் புறக்கணிக்க முடியாது. நாங்கள் கதைத்துப் பேசி ஒற்றுமையுடன் செயற்பட் டால் தான் எமது மக்களுக்கு ஏதாவது செய்ய முடியும்.

கடந்த தேர்தலில் போட்டியிட்டோம். எங் களுக்கு ஆசனம் ஒன்று கிடைத்திருந்தால் நாடாளுமன்றத்திலும் எமது மக்களுக்காக கதைத்திருக்க முடியும். எமது மக்களுக்கான பல விடயங்கள் இன்னும் நிறைவேற்றப் படாமல் உள்ளது. (ச-5)

## அரச உத்தியோகத்தர் சங்க உறுப்பினர்கள் தெரிவு

வடக்கு, கிழக்கு மாகாண அரசாங்க உத்தி யோகத்தர் சங்கத்தின் யாழ் மாவட்ட செயற் குழு உறுப்பினர்கள் தெரிவு நேற்று இடம்பெற் றது. மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத் தில் யாழ் மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இக்கூட்டத்தில் பின்வருவோர் செயற்குழு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கணேசன் கம்ஸநாதன் (தலைவர்), சி.குல ராசா (செயலாளர்), பா.சுரேஸ்குமார்(உபதலை வர்),வீ.விமலாம்பிகைபாகன்(உப செயலாளர்), செ.கவிதா (பொருளாளர்), க.லஸ்கேஸ்வரன் (அமைப்பாளர்), செயற்குழு உறுப்பினர்கள் யோ.றொசினா, கோ.மதியழகன், செ.தர்மராசா, ஆ.சிவானந்தராசா, க.அன்பழகன், ஐ.துரை சிங்கம், கா.வரதலட்சுமி, இ.சிவநேசன், அ.ஜேர்ச், இ.றமேஸ்குமார். (ச)

## டெங்கு நோயினால் வைத்தியர் பலி

(கொழும்பு)

டெங்கு நோயின் தாக்கத்திற்குள்ளான வைத்தியர் ஒருவர் பதுளையில் உயிரிழந் துள்ளார். டாக்டர் லக்மாலி விஜேரட்ன டெங்கு நோய்க்காக பதுளை பொது வைத்தியசாலை யின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று அவர் உயிரிழந் துள்ளார்.

தற்போது நாடெங்கிலும் டெங்கு நோய் காரணமாக 19ஆயிரத்த 722 பேர் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. கொழும்பு தேசிய வைத்தியசாலையில் காய்ச்சலுக்காக பெரும் எண்ணிக்கையிலா னோர் சிகிச்சை பெற்று வருகின்றனர் இதற்கு டெங்கு நோயே காரணமாக இருக்கலாம் என சந்தேகிக் கப்படுகின் றது.(ச-5)

## மின்தடைபற்றிய அறிவித்தல்

மின் விநியோக மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் நடைபெறவிருப்பதால் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி,கோப்பாய்,இருபாலை,கல்வியங் காடு,நல்லூர்,அரியாலை மற்றும் தென்மரா ட்சி பிரதேசம் முழுவதும் மின் விநியோகம் தடைப்படுமென இலங்கை மின்சாரசபை யின் சுன்னாகம் மின் பொறியியலாளர் அலு வலகம் அறிவித்துள்ளது.

அத்துடன் பருத்தித்துறை பிரதான வீதி அகலமாக்கும் பணிகளுக்காக மின்சார விநியோக தூண்களை இடமாற்றம் செய்ய விருப்பதால் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணி முதல் மாலை 7 மணிவரை புன்னாலைக்கட்டுவான், அச் செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு மற்றும் வடமராட்சிப் பிரதேசம் முழுவதும் மின் விநியோகம் தடைப்படும் எனவும் நாளை செவ்வாய்க்கிழமை மின் வெட்டு அமுல்படுத்தப்படாது எனவும் அவ் அலுவலகம் மேலும் அறிவித்துள்ளது. (6)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மேற்கு இறுப்பிட்டி பெருக்கடி என வழங்கும் அருள்மிகு ஸ்ரீ நாக புவனேஸ் வரி அம்பாள் தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஸ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும்.நாளை மறுதினம் புதன்கிழமை யாக பூசையும் மறுநாள் பக்தர்கள் எண்ணைக் காப்புச் சாத்தலும் இடம் பெறும். 16 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 7 மணிக்கு ஸ்தூபி அபிஷேகத் தைத் தொடர்ந்து மகா கும்பாபி ஷேகம்இடம்பெறும்

## நெல்சிப் திட்டமிடல் குழுக் கூட்டம்

வலிகாமம் வடக்கு பிரதேச நெல்சிப் திட்டமிடல் குழு கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச சபை தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் வலி.வடக்கு பிரதேச சபையினால் மக்கள் பங்கேற்புடன் தயாரிக்கப்பட்ட நான்கு வருட நெல்சிப் வேலைத்திட்டம் தொடர்காக கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

எனவே நெல்சிப் பிரதேச திட்டமிடல் குழு உறுப்பினர்கள் அனைவரும் மேற்படி கூட்டத் தில் தவறாது கலந்துகொண்டு ஆலோசனை களையும் அனுமதியினையும் வழங்குமாறு வலிவடக்கு பிரதேச சபை (காங்கேசன்துறை) செயலாளர் இ.அருணகிரி அறிவித்துள்ளார். (ச)





தரம் 5 மாணவர்களுக்கான மாவெரும் புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டிக் கருத்தரங்கு – 2010

24ஆம், 25 ஆம் திகதிகளில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் "வித்யா கீர்த்தி சிறி சம்மான" மட்டுநகர் ந.சந்திரகுமார் ஆசனம் மற்றும் ஒழுங்கமைப்பு செய்தல் பொருட்டு 15.07.2010க்கு பின் பதிவுகள் மேற்கொள்ளப்படமாட்டாது.

மேலதிக தொடர்புகளுக்கு :-

Mathuram Institute
Dutch Road, Irupalai Kopay South.

0779122918,
0775581626

(1842)

# இன்று ஒரு தகவல்

## ஆறுவகைப் பயம்

எதிர்காலத்தை நினைத்தால் எனக்கு ரொம்பப் பயமாக இருக்கிறது சேர் என்று சொல்பவர்கள் பலர் இருக்கிறார்கள்.

பயப்படாத மனிதர்கள் என்று எவருமே கிடையாது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான பயம்.

இருந்தாலும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது மனிதனுக்கு ஆறுவிதமான பய உணர்வுகள் வரலாம்.

எல்லா விதமான பயமும் இந்த ஆறுவகைக்குள் அடக்கம். அந்த ஆறுவகைப் பயமும் ஆறு எதிரிகள் போன்றவை.

அவற்றைப் புரிந்து கொண்டால் வாழ்க்கையில் வெற்றியடைவது சுலபம்.

சரி அந்த ஆறுவகைப் பயமும் என்னென்ன?

- முதலில் வறுமை பற்றிய பயம்
- இரண்டாவது பழிச்சொல் பற்றிய பயம்
- மூன்றாவது உடல் நலப் பாதிப்பு பற்றிய பயம்
- நான்காவது காதல் தோல்வி பற்றிய பயம்
- ஐந்தாவது முதுமை பற்றிய பயம்
- ஆறாவது மரணம் பற்றிய பயம்

பயப்படுவதென்பது ஒரு மனநிலைதான். இந்த மனநிலையைக் கட்டுப்படுத்த முடியும். திசை திருப்ப முடியும்.

இப்ப வறுமை பற்றிய பயம் என்று முதலில் சொன்னோமே. அந்தப் பயத்தின் அறிகுறிகள் என்ன தெரியுமா?

எதிலும் அக்கறையில்லாமல் இருப்பது.

ஒரு குறிக்கோளில்லாமல் இருப்பது.

வறுமையைச் சகித்துக் கொள்வது.

வாழ்க்கையில் கிடைப்பது எதுவாக இருந்தாலும் ஆட்சேபனை இல்லாமல் ஏற்றுக் கொள்வது.

மனதாலும் உடம்பாலும் சோர்ந்து போய் இருப்பது. ஆர்வம்-முனைப்பு-கற்பனைத் திறன் எதுவுமில்லாமல் இருப்பது.

அடுத்தது பழிச்சொல் பற்றிய பயம். அதாவது அடுத்தவர்கள் நம்மைக் குறை சொல்லி விடுவார்களோ என்ற பயம்.

இதற்கு அறிகுறி என்ன தெரியுமா?

புதியவர்களைச் சந்திப்பதற்குப் பயப்படுவது. முடிவெடுக்க முடியாமல் குழம்புவது. பிரச்சினைகளைத் தவிர்க்க விரும்புவது.

தாழ்வு மனப்பான்மை... வரவுக்கு மீறி செலவு செய்து இமேஜை உயர்த்திக்கொள்வது குறிக்கோளில்லாத வாழ்க்கை. இதெல்லாம் அதற்கு அறிகுறிகள்.

மூன்றாவது பயம் உடல்நலம் பாதிப்பு பற்றிய பயம். அதாவது நோய் பற்றிய பயம்.

ஒரு உண்மை என்ன தெரியுமா?

டாக்டரைச் சந்திப்பதில் 75 சதவீதம் பேர் தங்களுக்கு நோய் வந்து விட்டது என்ற கற்பனையில் இருப்பவர்கள் தானாம். இந்த பயத்தின் அறிகுறிகள் என்ன தெரியுமா?

வியாதிக்கான அறிகுறிகள் தன்னிடம் தெரிவதாக நினைத்துக் கொள்வது. வியாதியைப் பற்றியே பேசிப்பேசி மனதை அங்கேயே வைத்துக்கொள்வது.

நோய் சம்பந்தமான செய்திகளைப் படித்து நமக்கு இப்படி ஆகிவிடுமோ என்று வேதனைப்படுவது இதெல்லாம் தான்.

நான்காவது காதல் தோல்வி பற்றிய பயம். இது மிகவும் வேதனையானது. உடம்பையும் மனதையும் சீரழித்து விடும். ஆண்களை விடப் பெண்கள் தான் இந்தப் பய உணர்வில் அதிகமாகப் பாதிக்கப்படுபவர்கள்.

ஐந்தாவது முதுமை பற்றிய பயம். ஆறாவது மரண பயம். வயதான காலத்தில் எப்படிச் சமாளிப்பது? சுதந்திரமாக சுயமாகச் செயற்பட முடியாதே... இந்த நினைப்பு.

அதன்பின் மரணபயம். இது எல்லோருக்கும் பொதுவானது தான். தவிர்க்கமுடியாத பயத்தை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் வேண்டும்.

உழைத்துப் பணம் சேர்க்க வேண்டும். உற்சாகமாக மனதை வைத்துக் கொள்ள வேண்டும். மனதைக் கட்டுப்படுத்த தெரிந்து கொண்டால் போதும். எல்லாம் சரியாக வந்து விடும்.

நம்ம ஆள் ஒருத்தன் சொன்னான்:

"சேர்... எனக்கு வறுமை பற்றிய பயம் தான் இருந்தது. ஒரே இரவில் 30 ஆயிரம் ரூபா தயார் பண்ணிவிட்டேன். இப்ப எனக்கு இன்னொரு பயம் வந்து விட்டது" என்றான்.

"என்ன பயம்?" என்றார்கள்.

"பொலிஸ் கண்டுபிடித்து விடுமோ என்ற பயம்" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சாவகச்சேரி நகரசபையினால் உள்ளூராட்சி நிகழ்வுகள்

உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளை மக்கள் மயப்படுத்தும் நோக்கில் உள்ளூராட்சித் திணைக்களத்தால் தேசிய மட்டத்தில், கொண்டாடப்படும் இத்தினத்தை முன்னிட்டு, சாவச்சேரி நகர சபையினரால் சில நிகழ்வுகள் இன்று முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, சுகாதாரமும் சிரமதானமும் ஆரம்பநாளில் நடைபெற்று, மறுநாள் செவ்வாய்க்கிழமை கல்வி, நூல்நிலைய அபிவிருத்தி, விளையாட்டுநிகழ்வுகளின் கீழ், முன்பள்ளி சிறார்களுக்கான வினோத உடைப் போட்டியும் முன்பள்ளிக்கான நடமாடும் நூலக சேவையும் சாவகச்சேரி பிரதான நூலகத்தில் புத்தகக் கண்காட்சியும் இடம்பெறவுள்ளது.

14 ஆம் திகதி சுற்றாடல் பராமரிப்பை முன்னிட்டு சாவகச்சேரி நகரில், மரநடுகை ஊக்குவிப்பை, நகரசபை உத்தியோகத்தர்கள் மேற் கொள்வர். மறுநாள் வியாழக்கிழமை அபிவிருத்தி செய ற்றிட்டங்கள் மூலம் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கும் நிகழ் வில், நுணாவில் கொல்லங்கிராய் வீதி புனரமைத்தலும் மயானம் துப்புரவு செய்தலும் இடம்பெறவுள்ளது.

16 ஆம் திகதி மக்கள் பயன்பாட்டு நிகழ்வையொட்டி பொதுமக்களுக்கான சைக்கிள் உரிமைத் தகடுகள் வழங்கலும் மறுநாள் சனிக்கிழமை தகவல் தொழில்நுட்ப தினம் சாவகச்சேரி பொது நூலகத்தில் பிற்பகல் 2 மணி தொடக்கம்4 மணி வரை இணையத்திற்கும் நூலகத்திற்கும் இடையேயுள்ள தொடர்புகள் பற்றிய நூல்களின் காட்சிப்படுத்தலும் விளக்கங்களும் நடைபெறவுள்ளன.

18 ஆம் திகதி இறுதிநாள் நிகழ்வாக, நகரசபை அலுவலக மண்டபத்தில் காலை 9மணிக்கு போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில் வழங்கலும் பாடசாலை மாணவர்களின் பல்சுவை கலை நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது என்று சாவகச்சேரி நகரசபையின் செயலாளர் செல்வி.வி.சிவக்கொழுந்து அறிவித்துள்ளார். (6-29)

## மட்டக்களப்பில் மீள்குடியேற்றம் பூரணப்படுத்தப்படவில்லை

மட்டக்களப்பு மாவட்டத்தில் அனைத்து அகதி முகாம்களும் மூடப்பட்டுள்ள நிலையில் தொடர்ந்தும் 93 குடும்பங்கள் அகதிகளாக உறவினர் நண்பர்களின் வீடுகளில் தங்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிரான் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 37 குடும்பங்களைச் சேர்ந்த 212 பேரும் செங்கலடி பிரிவைச் சேர்ந்த 53 குடும்புங்களைச் சேர்ந்த221 பேரும் இன்னமும் மீள்குடியமர்த்தப்பட வில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இது வரை 36 ஆயிரத்து 123 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 23 ஆயிரத்து 907 பேர் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (6-4)

# எச்.என்.பியின் புதியகிளை இன்று கிளிநொச்சியில் திறப்பு




(கிளிநொச்சி) ஹற்றன் நஷனல் வங்கியின் 191 ஆவது வாடிக்கையாளர் சேவை நிலையம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 11.35 மணிக்கு கருணா நிலையம், ஏ-9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் திறந்து வைக்கப்படவுள்ளதாக ஹற்றன் நஷனல் வங்கியின் வலையமைப்பு முகாமைத்துவ பிரதிப் பொது முகாமையாளர் திருமதி கிருஷாந்தி தம்பையா தெரிவித்துள்ளார். (6)

# பஸ்சேவை சீரின்மையால் மாணவர்கள் பாதிப்பு

கொக்குவில், இணுவில், சுன்னாகம், மல்லாகம் ,மாகியப்பிட்டி, அளவெட்டிப் பகுதிகளிலிருந்து அதிகளவு மாணவர்களை ஏற்றிக்கொண்டு யா/மகாஜனாக் கல்லூரியை வந்தடையும் 768 இலக்க பஸ்சேவை சீரில்லை என்று பாடசாலை மாணவர்களால் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு மாதத்தில் இவ்வழி பஸ்ஸிற்கு 135 பருவகாலச் சீட்டுக்கள் பாடசாலையினூடு பெறப்படுகின்றதாகவும் இரண்டாம் தவணையிலிருந்து 768 இலக்க பஸ் ஒருசில நாட்களே பாடசாலைக்கு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக பல புகார் கடிதங்கள் உரிய அதிகாரிகளுக்கு சமர்ப்பித்தும் இதுவரை எவ்வித முன்னேற்றமும் இல்லை எனக் குறிப்பிடப் படுகிறது.

உரிய அதிகாரிகள் இதனைக் கருத்திற் கொண்டு சிறந்த போக்குவரத் துச் சேவையை வழங்குமாறு பாடசாலைச் சமூகத்தினர் கேட்டுக் கொள்கின்றனர். (6)

# இராசி பலன்

*12.07.2010*
*(ஆனி 28, திங்கட்கிழமை)*
*பிரதமை முன்னிரவு 11.37 மணிவரை*
*புனர்பூசம் பிற்பகல் 3.44 மணிவரை*
*இராகுகாலம் 7.29-8.59 மணிவரை*
*சுபநேரம் 11.59-1.29 மணிவரை*
*அமிர்தசித்தம்*

| | |
|---|---|
| மேடம் | மனச்சஞ்சலம், தொழிலில் ஆர்வம், ரோகநிலை, சுபசெலவு. |
| இடபம் | மனோ தைரியம், இஷ்டசித்தி, உறவினர் வருகை, வாக்கு மேன்மை. |
| மிதுனம் | உஷ்ணவியாதி, போசன சுகக் குறைவு, முயற்சி தாமதம், அதிக செலவு. |
| கடகம் | பிறர் உதவி, நல்லமுயற்சி , ஆழ்ந்த சிந்தை, வெகுமானம். |
| சிங்கம் | மனச்சோர்வு, எதிர்பாராத நன்மை, பிரயாணம், சுபசெலவு. |
| கன்னி | தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, சயனசுகம், மனமகிழ்ச்சி. |
| துலாம் | ஆரோக்கிய நிலை, முயற்சி பலிதம், நல்லசெய்தி, நண்பர்கள் உதவி. |
| விருச்சிகம் | உத்தியோக பங்கம், அஜீரணக் கோளாறு, முயற்சி தாமதம், வீண் பயம் |
| தனுசு | உடல்நலக்குறைவு, காரிய தாமதம், எதிர்பாராத பகை, போசன சுகம். |
| மகரம் | தேகநலம், செல்வாக்கு, குடும்ப மகிழ்ச்சி, முயற்சி கைகூடும். |
| கும்பம் | காரிய நன்மை, ஜனவசியம், விருந்துபசாரம், சத்துருஜெயம். |
| மீனம் | பணக்குறைவு, காரியஇடையூறு, குடும்பக் கவலை, உடல் நலக் குறைவு. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 | 50 |
| உருளைக்கிழங்கு | 50 | 70 | 50 |
| பச்சைமிளகாய் | 160 | 160 | 130 |
| தக்காளி | 70 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 50 |
| கோவா | 80 | 80 | 70 |
| கரட் | 150 | 140 | 130 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 40 | 40 | 30 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 90-100 |
| பெரிய வெங்காயம் | 50 | 70 | 40 |
| பாகற்காய் | 120 | 120 | 50 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | 70 | 70 | 70 |
| பயற்றங்காய் | 100 | 120 | 70 |
| லீக்ஸ் | 140 | 130 | 120 |
| பீற்றூட் | 60 | 100 | 60 |
| கறிமிளகாய் | 120 | 140 | 110 |
| முருங்கைக்காய் | 100 | 180 | 150 |
| போஞ்சி | 80 | 100 | 90 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 | 20 |
| தேசிக்காய் | 10 | 100 | 110 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 25 | 25 |




யா/மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சட்டத்தரணி நா.அரியபுத்திரன், பாடசாலை அதிபர் திருமதி ச.சிவகுமார் ஆகியோர் உரையாற்றுவதையும் திருமதி ச.அரியபுத்திரன் மாணவியொருவருக்கு பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அனலைதீவு நயினாகுளம் அருள்மிகு ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 12.05 மணிக்கு கொடியேற்றதுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் மகோற்சவம் நடைபெறவுள்ளது.

இவ்உற்சவத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை சப்பறமும் 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை பகல் 10 மணிக்கு தீர்த்திருவிழாவும் நடைபெறவுள்ளது. (6-4)

✠✠✠

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டச்சுவீதி ஸ்ரீபழனி ஆண்டவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 17 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சத்தில் எதிர்வரும் 26ஆம்திகதி திங்கட்கிழமை வேல்பவனியும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறவுள்ளது. (4-29)

## அலங்கார உற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சங்கத்தானை நரசிம்ம வைரவர் ஆலய அலங்கார உற்சவம் நேற்று சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 21 ஆம் திகதி புதன் கிழமை பூங்காவனத் திருவிழா இடம் பெறவுள்ளது. (4-29)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் தேவஸ்தான மணவாளக் கோல அலங்கார உற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து .25 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது. (6-4)




## மெய்வல்லுநர் போட்டிகளில் முதன்மை வீராங்கனையாக தெரிவு



வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் நடாத்திய மெய்வல்லுநர்ப் போட்டிகளில் 15 வயதுப் பெண்கள் பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த செல்விதசங்கீதா உயரம் பாய்தல், ஈட்டி எறிதல் ஆகிய நிகழ்ச் சிகளில் முதலாம் இடத்தை யும் நீளம் பாய் தல் நிகழ்ச்சியில் 2ஆம் இடத்தையும் பெற்று முதன்மை வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (6)

# டெங்கு ஒழிப்பு திட்டத்தின் கீழ் பல்வேறு நடவடிக்கைகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் டெங்கு ஒழிப்பு திட்டத்தின் கீழ் நகரசபை வாகனத்தில் ஒலிபெருக்கி மூலம் மக்களிடையே சென்று பல்வேறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

துப்புரவு செய்யப்படாத பற்றைக் காணிகளை வெட்டி துப்புரவு செய்யும்படியும், அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளாதவர்கள் மீது சுகாதார திணைக்களத்தின் உதவியுடன் உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும் சாவகச்சேரி நகர சபை சுகாதார பரிசோதகரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய சாவகச்சேரி நகரசபை யின் சுகாதார தொழிலாளர்களின் ஒத்துழைப்புடன், இவ்வெல்லைக்குட்பட்ட பல பிரதேசங்களிலும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. (6-29)

# வீட்டுத் திட்டத்திற்கு தெரிவான பயனாளிகளின் விபரம்

(கொழும்புத்துறை)

யாழ்.மாவட்ட வடகிழக்கு மீள் நிர்மாணத் திட்டத்தின் கீழ் அரியாலை தென் மேற்கு கிராம சேவையாளர் பிரிவு,கொழும்புத்துறை கிழக்கு கிராம சேவையாளர் பிரிவுகளில் வீட்டுத் திட்டத்திற்குத் தெரிவான பயனாளிகளின் பெயர்ப் பட்டியல் யாழ்.அரசாங்க அதிபரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் அரியாலை தென்மேற்கு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்டவர் விபரம் வருமாறு,

திருச்செல்வம் அருள்ராஜ் ஜெயந்திரன், நடராசா தேவகுமாரன், சின்னவி கணபதிப்பிள்ளை, தவத்துறை லோகநாயகி, கண்ணதாசன் பாலினி, அதிகரன் சுகந்தினி.

கொழும்புத்துறை கிழக்கு பயனாளிகளின் பெயர் விபரம் வருமாறு,

எஸ்.நவரெட்ணம், கே.வெற்றிவேல், கந்தசாமி குணரெத்தினம், ஜெகராஜ் சிங்கம் தங்கமலர், எஸ்.செல்வக்குமார், பெனவந்தூர் ஜெயக்குமார், எஸ். அகிலேஸ்வரன், எஸ். பேனாட், நவரட்ணம் மங்கையற்கரசி, எ. வெனிற்ரஸ், விஸ்வலிங்கம் துரைராசா, நல்லையா மரியநாயகம், நடராசா சிவராசா, பி.மகாலிங்கம், ஞானப்பிரகாசம் டெலஸ், எஸ்.சிவகுமாரன், சவரிமுத்து அல்பிரட், விஜயரெட்ணம் கேமபால, என். சண்முகராசா, யேசுதாசன் தஸ்பன் அன்ரனி, அந்தோனிப்பிள்ளை அனுசியஸ். (6-51)

# யாழ்.பிரதேச செயலகத்தால் பெண்களுக்கான உதவிகள்

(கொழும்புத்துறை)

ஆதரவற்ற பெண்களுக்கு உதவி செய்யும் நோக்கில், யாழ், பிரதேச செயலகத்தால், அந்தந்த கிராமசேவையாளர் பிரிவுகளுக்கு விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்பட்டுள்ளன.

குறிப்பாக விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், கணவன் காணாமல் போய் உள்ளோர், கணவன் தடுப்பு முகாமில் உள்ள ஆதரவற்ற பெண்கள் ஆகியோர் தமது பிரிவுக்குட்பட்ட கிராமசேவையாளரிடம் படிவங்களைப் பெற்று, அதனைப் பூர்த்தி செய்து, தமக்குரிய கிராம சேவையாளரிடம் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-51)

## விஞ்ஞானக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.விஞ்ஞான சங்கத்தின் " ஏ" பிரிவின் அனுசரணையுடன் போருக்கு பிந்திய அபிவிருத்தி தொடர்பில் சூழலும் அது சார்ந்த சட்டமும்" எனும் கருப்பொருளி லான இலவச கருத்தரங்கு நாளை செவ்வாய்க் கிழமை மாலை 3.30 மணிக்கு பௌதிகவியல் துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கருத்துரையை யாழ்.பல்கலைக் கழக சட்டத்துறை உதவி விரிவுரையாளர் கு.குருபரன் நிகழ்த்தவுள்ளதால் ஆர்வலர்கள் அனைவரும் இதில் கலந்து கொள்ளுமாறு யாழ்.விஞ்ஞான சங்கத்தின் 'ஏ' பிரிவின் செயலாளர் கலாநிதி கு.வேலாயுதமூர்த்தி கேட்டுக்கொள்கின்றார். (6-4)

## நினைவு தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அமரர் அமிர்தலிங்கம், அமரர் யோகேஸ்வரன் ஆகியோரின் 21 ஆவது நினைவு தினம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.மாவட்ட தலை மைச் செயலகத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரமுகர்கள் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளதுடன் நினைவஞ்சலி உரைகளும் மலரஞ்சலி நிகழ்வும் நடைபெறவுள்ளது. (6)

## மாணிக்கவாசகர் குருபூசைத்தினம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் மாணிக்கவாசகர் குருபூசைத்தின நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை வித்தியாலய அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் விசேட பூசை வழிபாடுகள் பஜனையுடன் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது. (6-4)

## வாழும் கலை பயிற்சி அறிமுக உரை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்சரின் வாழும் கலை பயிற்சி மையத்தினால் சுதர்சனக்கிரியா, மூச்சுப்பயிற்சி, தியானம், எளியயோகா ஆகியவை உள்ளடக்கிய அற்புதமான பயிற்சிக்கான அறிமுகவுரை இன்று திங்கட்கிழமை மாலை 5.15 மணிக்கு யாழ் இந்து கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பயிற்சிகள் நாளை செவ்வாய்க் கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் ஞாபக சக்தி அதிகரிக்க, நிகழ்காலத்தில் வாழ, மனதை ஒரு நிலைபடுத்த, வேலைகளில் முழுக்கவனம் செலுத்த ,ஆஸ்மா ,இரத்தக் கொதிப்பு, நீரிழிவு நோய்களில் இருந்து விடுபடுவதற்கான பயிற்சியாக இது அமையவுள்ளதால் அனைவரையும் இதில் கலந்து கொண்டு பயனடையுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (6-4)

## புலமைப் பரிசில் வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மதுரன் கல்வி நிலையத்தினால் நடத்தப்படும் மாபெரும் புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 24 ஆம் 25 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி முதல் மாலை 3.30 மணிவரை யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடை பெறவுள்ளது.

ஜனாதிபதி விருதுபெற்ற மட்டுநகர் ந.சந்திரகுமாரால் இக் கருத்தரங்கு நடாத்தப்படவுள்ளதாகவும் மாணவர்கள் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-4)

## ஆங்கில தினப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கல்வி வலயங்களுக்கு இடையேயான மாவட்ட மட்டத்திலான ஆங்கில தினப் போட்டிநிகழ்வுகளில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான நாடக உரையாடலும் மட்டம் 1, 2 சேர்ந்தவர்களுக்கான குழுப் பாடல்களும் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் போட்டியில் கலந்துகொள்ள தகுதி பெற்றுள்ள பாடசாலைகள் உரிய நேரத்திற்கு சமுகமளித்து போட்டியில் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (4)

# அமைச்சர் விமல் வீரவன்சவின் உடல் ஆரோக்கியத்தில் முன்னேற்றம்

## தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலைய பணிப்பாளர்

(கொழும்பு)


ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட மூன்று பேர் கொண்ட விசாரணைக்குழுவை கலைக்கக் கோரி சாகும் வரையில் உண்ணாவிரதத்தை மேற்கொண்ட நிலையில் நேற்று முன்தினம் தமது உண்ணாவிரதப் போராட்டத்தை நிறைவு செய்து கொண்ட தேசிய சுதந்திர முன்னணித் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸவின் உடல் ஆரோக்கியத்தில் தற்போது முன்னேற்றம் ஏற்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் முதல் இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அமைச்சர் விமல் வீரவன்சவிற்கு தேவையான வைத்திய சிகிச்சைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருவதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் லக்ஸ்மன் ஹுலுகல்ல தெரிவித்தார்.

எனவே அவர் மிக விரைவில் பழைய நிலைமைக்கு திரும்புவார் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (6)

# ஷிராந்தி ராஜபக்ஷ, நடிகை அசின் உள்ளிட்ட குழுவினர் வவு. விஜயம்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர் நேற்று காலை வவுனியா பொது வைத்தியசாலைக்கான விஜயமொன்றை மேற்கொண்டனர்.



ஆளும் கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சினி பெர்னாண்டோப்பிள்ளை மற்றும் தென்னிந்திய நடிகை அசின் ஆகியோரும் இக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

தமிழ்க் கலாசார முறைப்படி வரவேற்கப்பட்ட ஷிராந்தி ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர் வவுனியா பொது வைத்திசயசாலையின் சத்திரசிகிச்சைக் கூடத்தைச் சென்று பார்வையிட்டதுடன் அங்குள்ள குறை நிறைகளையும் கேட்டறிந்துகொண்டார்கள். அத்துடன் கண் வைத்திய சிகிச் சைப் பிரிவுக்குச் சென்றும் அங் குள்ள நோயாளர்களைப் பார்வை யிட்டதுடன் பரிசுப் பொருட்களையும் ஷிராந்தி ராஜபக்ஷ வழங்கினார் என்று தெரிவிக்கப்படுகிறது. (6)

# ஐ.நா.வின். நடவடிக்கைகளினால் ஈராக்கிற்கு நேர்ந்த நிலையே இலங்கைக்கும் நேரும்

## தேசிய சுதந்திர முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கைகளினால் ஈராக்கிற்கு நேர்ந்த கதியே இலங்கைக்கும் நேரும் என தேசிய சுதந்திர முன்னணி குறிப்பிட்டுள்ளது.

ஈராக்கில் இரசாயன ஆயுதங்கள் காணப்படுவதாகத் தெரிவித்த ஐக்கிய நாடுகள் அமைப்பு இதேபோன்றதொரு நடவடிக்கையை மேற்கொண்டதாகவும் பின்னர் அமெரிக்கத் துருப்பினரை நிலை நிறுத்தி பாரிய அழிவுகளை மேற்கொண்டதாகவும் கட்சி சுட்டிக் காட்டியுள்ளது.

எவ்வாறெனினும் ஈராக்கில் இரசயான ஆயுதங்கள் எதுவும் கண்டு பிடிக்கப்படவில்லை என தெரிவித்துள்ளதுடன் இலங்கை தொடர்பான ஆலோசனைக் குழுவும் இவ்வாறான ஓர் சதி முயற்சியே எனவும் இதனால் நாட்டுக்கு எவ்வித நன்மையும் கிடையாது எனவும் குறிப்பிட்டுள்ளது.

நாட்டிற்கு சமதானத்தை ஏற்படுத்திக் கொடுத்த படைத்தளபதி ஜனாதிபதி உள்ளிட்ட படையினரை சர்வதேச நீதிமன்றில் ஆஜர் படுத்தும் முயற்சியாக இந்த ஆலோசனைக் குழுவினை நோக்க வேண்டுமென சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (6)

# அரசாங்கத்தின் பலவீனம் காரணமாக சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்துள்ளன

## ஜே.வி.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் பலவீனம் காரணமாக சர்வதேச நாடுகளின் அழுத்தங்கள் அதிகரித்துள்ளதாகவும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக மக்களை அணி திரட்டும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் ஜே.வி.பி. அறிவித்துள்ளது.



அரசாங்கத்தின் பலவீனங்கள் தொடர்பில் மக்களை தெளிவுபடுத்தும் கருத்தரங்குகள் நாடு முழுவதிலும் நடத்தப்படவுள்ளதாக அக் கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச அழுத்தங்களின் போது அரசாங்கத்தின் இரட்டை வேடம் குறித்து நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தப்படவேண்டுமெனவும் இலங்கையின் வெளியுறவுக்கொள்கைகளில் காணப்படும் பலவீனங்களே சர்வதேச நாடுகளின் அழுத்தங்களுக்கு பிரதான காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டுக் கொள்கை வகுப்பின் போது இழைக்கப்படும் அதே தவறுகளே வெளியுறவுக் கொள்கை வகுப்பின் போதும் இழைக்கப்படுவதாகவும் ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலான அரசாங்கத்தின் நிலைப்பாட்டின் போதும் சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் தொகைப் பெற்றுக்கொள்ளும் போது பின்பற்றப்படும் நிலைப்பாட்டிலும் பாரிய வேறுபாடு காணப்படுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (6-4)

## மாணிக்கவாசகர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் யா/ இளையதம்பி இந்து வித்தியாசாலையின் அனுசரணையுடன் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை இடம் பெறவுள்ளது. (6)

# சார்க் பொலிஸ் படைப்பிரிவு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது

(கொழும்பு)

சார்க் பொலிஸ் படைப்பிரிவு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச பொலிஸ் சேவையான இன்டர் போலின் அமைப்பினை ஒத்த பொலிஸ் சேவையொன்று உருவாக்கப்படவுள்ளது.

சார்க்போல் என்ற பெயரில் இந்த பொலிஸ் சேவை உருவாக்கப்படவுள்ளதாகவும் எல்லை கடந்த குற்றச்செயல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கும் 8 நாடுகள் இந்த பொலிஸ் சேவையில் அங்கம் வகிக்க உள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

அண்மையில் பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் நகரில் நடைபெற்ற சார்க் உள்துறை அமைச்சர்களின் மாநாட்டின் போது பிராந்திய பொலிஸ் அமைப்பது குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6)

# தனியொரு மனிதரான பான் கீ மூன் போர்க்குற்றம் பற்றி பேச முடியாது

## வவுனியாவில் பிரதமர் தெரிவிப்பு

(வவுனியா)

ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் இலங்கைக்கு எதிரான போர்க்குற்றம் பற்றிப் பேசுகின்றார் என்றும் தனியொரு மனிதராகிய அவர் அவ்வாறு பேச முடியாது என்றும் பிரதமர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்துள் ளார்.

வவுனியா அரச செயலகத்தில், அரச உயரதிகாரிகள், அரச அதிகாரிகள் மத்தியில் உரையாற்றுகையிலேயே இதனை அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ,

பான் கீ மூன் தனியொரு மனிதனாக இருந்து அவர் எங்கள் நாட்டின் மீது போர்க் குற்றம் பற்றிப் பேசுகின்றார். எங்களுடைய நாடு ஆயிரக்கணக்கான வருடங்கள் வரலாற்றுப் பெருமை மிக்கது. அவர் அவ்வாறு போர்க்குற்றம் பற்றி ஒருநாட்டிற்கு எதிராகப் பேச முடியாது. எங்களுக்கு எதிராக தனி மனிதரான அவரால் எப்படி பேச முடியும்?

எங்களுக்கு எதிராக போர்க்குற்றம் சுமத்துகின்ற அவர் நாளை அமெரிக்காவுக்கு எதிராகப் பேசக்கூடும். பாகிஸ்தானில் எவ்வளவு பேர் உயிரிழக்கின்றார்கள். அவர் பாகிஸ்தானுக்கு எதிராகவும் அவர் போர்க்குற்றம் சுமத்துவாரா? போரைப் பற்றிப் பேசுகின்றார். உயிரிழப்பு இல்லாமல் யுத்தம் செய்ய முடியுமா?

நிலைமை இப்படி இருக்கும் போது, தனியொருவரோ அல்லது ஒன்று இரண்டு பேரோ போர்க்குற்றம் பற்றிப் பேசுவதில் என்ன பிரயோசனம் இருக்கின்றது. அவர்கள் குறிப்பிடுகின்ற போர்க்குற்றத்திற்கு சாட்சிகள் எதுவும் கிடையாது. அரசசார்பற்ற நிறு வனத்தினர் புலிகளோடு ஒன்றாகச் சாப்பிட்டு, குடித்து ஒன்றாக இருந்தார்கள். அவர்கள் தான் இந்தப் போர்க் குற்றத்திற்குச் சாட்சியம். அவர்கள் ஒஸ்லோவுக்குத் தெரிவித்தார்கள் போர்க்குற்றம் நடைபெற்றது தொடர்பாக. ஒஸ்லோ இவருக்குப் போர்க்குற்றம் நடந்துள்ளது என்று அறிவித்தது. உண்மையில் போர்க்குற்றத்தைக் கண்டது யாருமில்லை. யாருக்கு யார் சொன்னது என்ப தும் தெளிவில்லை.

இந்தநிலையில் தனியொரு மனிதர் ஒரு நாட்டின் மீது அவ நம்பிக்கையை ஏற்படுத் தும் வகையில் போர்க்குற்றம் பற்றிப் பேசமுடி யாது. நாங்கள் அந்த தனி மனிதரை எதிர்க்கி றோம். நாங்கள் ஐ.நாவை எதிர்க்கவில்லை. எமது நாட்டைப் போன்ற பெருமை மிக்கது ஐ.நா. அமைப்பு. அதற்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6)

## இதய அஞ்சலி

அன்னை மடியில் 03.02.1982 — ஆண்டவன் அடியில் 10.07.2010

அமரர்

**மகேஸ்வரன் சுதாகர் (தீபன்)**



எம் ஆருயிர் நண்பனின்
திடீர் மறைவைக் கேட்டு மிகவும்
அதிர்ச்சியும் மீளாத் துயரும் கொண்டுள்ளோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நொதன்ஸ் என்டர்பிறைஸ்,
பஸ்நிலையம் முன்பாக, சுன்னாகம்.
T.P:- 021 2240346

பிரிவால் துயருறும்
நண்பர்கள்

(சி/632)

# கணக்கீடு I-II

## 02 மணித்தியாலங்கள்

முதலாம் வினா கட்டாயமானது. எல்லாமக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.

01. சங்கர், கோபி,ராசன் இலாபநட்டங்களை 2:1:1 என பகிரும் பங்காளர்கள் உடன்படிக்கையின்படி பங்காளர்கள் ஆண்டு சம்பளமாக தலா ரூபா 100000 பெறுவர்.

2009.ஜனவரி 01 இல் கோபி பங்குடமையிலிருந்து ஒய்வு பெறுவதாக அறிவித தார். கோபிக்கு சேரவேண்டிய தொகை கொடுத்து தீர்க்கும் வரை ஆண்டுக்கு 6% சதவீதவட்டியில் ஒரு கடனாக பிரதிபலிக்கப்படும். கோபி ஓய்வு பெறும் பொருட்டு பின்வரும் சீராக்கங்கள் மூதன கணக்கினூடாக மேற்கொள்ளப்படும்.

- பங்குடமையின் நன்மதிப்பினை ரூபா 420000 மாக மதிப்பிடுதல் எனினும் நன் மதிப்பு கணக்கு தொடர்ந்து பராமரிக்கப்படமாட்டாது.
- நடைமுறையல்லா சொத்தினை மீளவிலைமதித்தல். மீளவிலைமதித்தல் பெறுமதியினை தொடர்ந்து ஏடுகளில் பிரதிபலித்தல் மீளவிலை மதித்தலால் ரூபா 600000 மிகை உருவானது.

2009 யூலை 01 இல் நாகா ரூபா 512500 காசுடன் ,1/4 பங்கு இலாப நட்டத்துடன் அனுமதிக்கப்பட்டார். இத் தொகையில் அவரது நன்மதிப்புக்குரிய தொகையும் அடங்கும். இத்தினத்தன்று ரூபா 450000 என நன்மதிப்பு மதிப பிடப்பட்டது. முன்னர் போலவே நன்மதிப்புக்கணக்கு பராமரிக்கப்படமாட்டாது.

நாகா சேர்ந்த பின்னர் ஒப்பந்தத்தில் பின்வரும் மாற்றங்கள் மேற்கொள்ளப் பட்டது.

- சீராக்கிய நிலையான மூலதனத்திற்கான வட்டி 5 சதவீதம்
- பங்காளர்கள் ஆண்டுச்சம்பளமாக தலா ரூபா 140000 பெறுவர்.
- புதிய பங்காளர் நாகா ஆண்டு மொத்தவருமானமாக ரூபா 300000 குறையாது பெறுவார் என சங்கர்,ராசன் உத்தரவாதமளித்தல் மேற்கூறிய விடயங்கள் (நாகாவின் காசு அறிமுகம் தவிர) சீராக்கு முன்னர் 2009.டிசம்பர் 31 இல் முடிவுற்றதினத்தில் உள்ளபடியான பரீட்சை மீதி வருமாறு,

| விபரம் | | வரவு | செலவு |
|---|---|---|---|
| பங்காளர் மூலதன கணக்கு | -சங்கர் | | 655000 |
| | கோபி | | 435000 |
| | ராசன் | | 377500 |
| காசு அறிமுகம் (2009.யூலை 01)இல் | -நாகா | | |
| பங்காளர் நடைமுறைகணக்கு | 2009.01.01இல் | | |
| | -சங்கர் | | 130000 |
| | -கோபி | 60000 | |
| | -ராசன் | 25000 | |
| பங்காளர் எடுப்பனவுகள் | -சங்கர் | 80000 | |
| | -ராசன் | 72000 | |
| | -நாகா | 68000 | |
| விற்பனை | | | 396900 |
| கொள்வனவுகள் | | 2342000 | |
| கொடுத்த அலுவலக சம்பளமும் கூலியும் | | 560000 | |
| 2009.01.01இல் தொக்கு | | 380000 | |
| நடைமுறையல்லாசொத்து(கிரயம்) | | 2800000 | |
| திரண்ட தேய்வு (2009.01.01) | | | 1000000 |
| நன்மதிப்பு | | 120000 | |
| வியாபார கடன்படுனர் | | 475000 | |
| வியாபார கடன்கொடுனர் | | | 3060000 |
| வங்கி நிலுவை | | 403000 | |
| | | 7385000 | 7385000 |

மேலதிக தகவல்

1. 2009 டிசம்பர் 31 இல் உள்ளபடியான கையிருப்பு ரூபா 400000
2. 2009. டிசம்பர் 31 இல் அட்டுறு அலுவலக சம்பளம் ரூபா 40000
3. நடைமுறையல்லாசொத்திட்கு மீளவிலைமதித்தல் பெறுமதியில் 10% சதவீதம் பெறுமான தேய்விடுக.
4. ஆண்டிறுதி கடன்படுனரில் ரூபா 15000ஐ அறவிடமுடியாக்கடனாக பதிவழிக்க, என்ஜிய தொகையில் 10% சதவீதமாக ஐயக்கடன் ஏற்பாடாக மேற்கொள்க.
5. பகிர்வதற்கு முற்பட்ட தேறிய இலாபம் கால அடிப்படையில் எழுந்தன என கொள்க

தேவைப்படுவது

1.2009 .12.31.இல் முடிவுற்ற வருடத்திற்கான வியாபார இலாபநட்டகணக்கு, பகிர் கணக்கு (உத்தரவாத சீராக்கல் உள்ளடங்கலாக) பங்காளர் நடை முறை கணக்கு (நிரல்வடிவில்),
பங்காளர் மூலதன கணக்கு (நிரல்வடிவில்) 2009.12.31 இல்முடிவுற்ற தினத்தில் உள்ளபடியான ஐந்தொகை.

(20 புள்ளிகள்)

02.அ. ரூபிகா நிறுவனத்தின் 2010 மே மாதம் இடம்பெற்ற கொடுக்கல் வாங் கல்கள் வருமாறு,

மே.06.இல் பட்டியல் இலக்கம் 53 இன்படி ஜீவன்யாவிட்கு விற்பனை (மொத்தம்) ரூபா 60000 (10% சதவீத வியாபார கழிவு) அனுமதிக்கப்பட்டது.

மே.13.இல கிரயப்பட்டியல் இலக்கம் A-51 இன்படி சுலானி ஸ்டோர்ஸிடம் கொள்வனவு 10% சதவீத வியாபாரகழிவு நீக்கி ரூபா 49500

மே.24. இல் பட்டியல் இலக்கம் 54 இன்படி கல்யாணி ஸ்டோர்சுக்கு விற்பனை (மொத்தம்) ரூபா 30000(10% சதவீத வியாபாரகழிவு) அனுமதிக்கப்பட்டது.

நிறுவனம் சகல கொள்வனவு, விற்பனை என்பவற்றின் தேறிய தொகையில் 10% சதவீத பெறுமதிகூட்டிய வரி தாக்கல் செய்கின்றது.

தேவைப்படுகிறது.

1.விற்பனை தினசேரி (பொருத்தமான நிரல்களுடன்) (03 புள்ளிகள்)
2. பெறுமதி கூட்டிய வரிகணக்கு (02 புள்ளிகள்)

ஆ. தயாபரன் நிறுவனத்தின் 2010 யூன் 30இல் காசேட்டின் படி வங்கி மீதி (பாதகம்)ரூபா 72000 காட்டியது. இத் தினத்திலான வங்கி கூற்றுமீதியும் இணங்கவில்லை.பின்வரும் காரணங்கள் இணங்காணப்பட்டன.

1. பின்வருவன யூன் மாத வங்கிக்கூற்றில் காணப்பட்டிருந்த போதும் காசேட்டிலா் காணப்படவில்லை.
   - வங்கி அறவிட்ட சேவைகட்டணம் ரூபா 11800
   - வாடிக்கையாளர் சுமன் நேரடியாக வங்கிக்கு மேற்கொண்ட வைப்பு ரூபா 15400
   - கொடுப்பனவு மறுக்கப்பட்ட காசோலை ரூபா 42000,அதற்கான மறுப்பறி வித்தல் கட்டணம் ரூபா 28000
2. விற்பனை திரும்பல் தினசேரியின் கூட்டுத் தொகை ரூ8400 விற்பனை திரும்பல் கணக்கிட்கு ரூபா 4800 என வரவு வைக்கப்பட்டிருந்தது.
3. வழங்குனர் சுமந்திரனிட்கு செலுத்திய காசு ரூபா 33800 தவறுதலாக காசு கொள்வனவாக ஏடுகளில் சீராக்கப்பட்டிருந்தது.

தேவைப்படுவது

1) திருத்துவதற்கான குறிப்பேட்டுபதிவுகள் (03 புள்ளிகள்)
2) தொங்கல் கணக்கு (02 புள்ளிகள்)

(10 புள்ளிகள்)

04. சில்மியா ஸ்தாபனம் பொதுபேரேட்டில் கட்டுப்பாட்டு கணக்கினை பராமரிக்கும் நிறுவனமாகும். 2010. மார்ச் 31 இல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கில் ரூபா 108850 காட்டியது. இத்தினத்தில் தயாரிக்கப்பட்ட கடன்படுனர் பேரேட்டு நிலுவை ரூபா 68000 காட்டியது. கடன்படுனர் பேரேட்டு பட்டியல் மொத்தத்தின் பகுப்பாய்வு வருமாறு,

கடன்பட்டோர் பேரேட்டு பட்டியல்

| | |
|---|---|
| கே.கண்ணன் | ரூபா 25 000 |
| அசோகன் | 28 000 |
| எஸ்.குமரன் | 15 000 |
| | 68 000 |

வேறுபாட்டிற்கான காரணங்கள் வருமாறு

1. வாடிக்கையாளன் அசோகனுக்கு விற்பனை பட்டியல் இலக்கம் A -54, ரூபா 24 800 எவ்வேடுகளிலும் பதியப்பட்டிருக்கவில்லை.
2. வாடிக்கையாளர் எஸ்.குமரனிடம் வசூலித்த காசு ரூபா 10400 அவர் கணக்கில் சரியாக செலவு வைத்த போதிலும் காசேட்டின் கடன்பட்டோரிடம் சேகரித்த பணநிரலுக்குள் உள்ளடக்கபபட்டிருக்கவில்லை.
3. வாடிக்கையாளர் கே.கண்ணன் திருப்பியனுப்பிய பண்டங்கள் ரூபா 4060 விற்பனை திரும்பல் தினசேரியில் ரூபா 4600 என பதியப்பட்டிருந்தது.
4. காசேட்டின் வரவுபக்க கழிவுநிரல் ரூபா 2350 அதிகமாக கூட்டப்பட்டிருந்தது.
5. விற்பனை தினசேரியின் 05ஆம் பக்க கூட்டுத்தொகை ரூபா128500 தவறு தலாக 6ஆம் பக்கத்திற்கு 152800 என மீதி முன்கொண்டு செல்லப்பட்டி ருந்தது.

6.வாடிக்கையாளர் நீலன் வகையற்றவரானமையினால் அவரின் நிலுவை ரூபா8500 அறவிடமுடியாதென தனிப்பட்ட நபர்கணக்கில் பதிவழிக்கப்பட் டிருந்தது. இது தொடர்பாக வேறு எப்பதிவும் ஏடுகளில் இல்லை.

தேவைப்படுவது

1.திருத்துவதற்கு அவசியமான குறிப்பேட்டு பதிவுகள் (06 புள்ளிகள்)

2.திருத்திய கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு (02 புள்ளிகள்)

3.திருத்திய கடன்பட்டோர் பேரேட்டுபட்டியல் (02புள்ளிகள்)

(10புள்ளிகள்)

05. மதுரங்க சகோதர நிறுவனத்தின் 2009 டிசம்பர் 31 இல், முடிவுற்ற ஆண் டிற்கு ஒழுங்குமுறையாக கணக்கேடுகள் எதுவும் பராமரித்து வரவில்லை. 2009 01 இலும் 2009 டிசம்பர் 31 இலும் நிறுவனத்தின் சொத்துக்களும், பரிப்புக்களும் வருமாறு,

| விபரம் | 2009 ஜனவரி 01இல் | 2009 டிசம்பர் 31இல் |
|---|---|---|
| நிலம் (கிரயம்) | ரூபா 1850000 | ரூபா 2780000 |
| கட்டடம் (கிரயம்) | 2000000 | 2000000 |
| ஒப்படைப்பு வாகனம் (கிரயம்) | 1670000 | 92000 |
| கட்டட திரண்டதேய்வு | 800000 | ? |
| ஒப்படைப்பு வாகன திரண்டதேய்வு | 600000 | 580000 |
| வணிக கடன்படுனர் | 535000 | 624000 |
| வணிக கடன்கொடுனர் | 578000 | 569000 |
| வணிக கையிருப்பு | 550000 | 428000 |
| காசும், வங்கி நிலுவையும் | 373000 | ? |

மேலதிக தகவல்

1. 2009.12.31 இல் வங்கிக் கூற்று நிலுவை ரூபா 306000 ஆகும். இத்தொகை காசேட்டின் படி வங்கி நிலுவையிலிருந்து பின்பவரும் காரணங்களினால் வேறுபட்டது.
   - கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூபா 84000
   - வங்கியில் தீர்வையாகாத காசோலை ரூபா 78000
   - வாடிக்கையாளர் ரன்ஜித் வங்கிக்கு நேரடியாக வைப்புச் செய்ததொகை ரூபா 81000
   - நிலையியல் கட்டளையின் படி வங்கி செலுத்திய மதுரங்கவின் தனிப்பட்ட ஆயுட்காப்புறுதி ரூபா. 18000

2.நடப்பாண்டிற்கான கட்டடதேய்வு ரூபா 100000,ஒப்படைப்பு வாகன தேய்வு ரூபா 180000 வாகன முடிவுறுத்தலால் பெற்ற இலாபம் ரூபா 50000 ஆகும். வாகன முடிவுறுத்தலால் பெற்ற பணம் முழுவதும் மதுரங்கவின் தனிப்பட்ட வங்கிக்கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. கணக்காணடில் வேறு ஆதனங்கள் எதுவும் கொள்வனவோ அல்லது விற்பனையோ செய்யப் பட்டிருக்கவில்லை.

# விடுதலைப்புலி உறுப்பினர் பலத்த பாதுகாப்புடன் கோயிலில் வழிபாடு

(கொழும்பு)

வெடிபொருட்கள் கடத்தல் வழக்கில் கியூ பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த திலீபன் கடந்த வெள்ளிக்கிழமை காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோவிலில் பொலிஸ் பாதுகாப்புடன் சிறப்பு வழிபாட்டில் கலந்து கொண்டார்.

தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு வெடி பொருட்கள் கடத்தியதாக 2008ஆம் ஆண்டு ஜனவரி மாதம் திலீபன் என்பவரை சென்னை அருகே கியூ பிரிவு பொலிஸார் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட இவர் பூந்தமல்லி சிறப்பு முகாமில் இவர் அடைக்கப்பட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு பொலிஸ் வானில் காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோவிலுக்கு திலீபன் அழைத்து வரப்பட்டார். அவருக்கு பாதுகாப்பாக டி.எஸ்.பி.சாம்பசிவம் தலைமையில் 10 பொலிஸார் உடன் வந்தனர்.

பொலிஸார் திலீபனை நேரடியாக பக்தர்கள் வெளியே வரும் வாசல் வழியாக கோவில் உள்ளே அழைத்துச் சென்றனர்.

கோவிலுக்குள் சென்ற திலீபன் கருவறைக்கு முன்புள்ள அறையில் அமர்ந்து அம்மனுக்கு சிறப்பு வழிபாடு நடத்தியதுடன் கோவிலில் உச்சிக்கால பூசை அபிஷேகத்திற்கு பணம் செலுத்தியிருந்தார். அபிஷேகம் முடிந்ததும் அம்மனுக்கு பட்டுப் புடைவை சாத்தி வழிபட்டார்.

வழிபாடு முடிந்து புறப்படும் போது கோவில் ஸ்தாபகர்களிடம் தாலிக் கயிறு இருந்தால் அம்மன் பாதத்தில் வைத்து தரும்படி கோரினார். அவர்களும் இரண்டு தாலி கயிறுகளை அம்மன் பாதத்தில் வைத்து பூசை செய்த பின் அவரிடம் வழங்கினர்.

தாலிக்கயிறு மற்றும் பிரசாதத்தை திலீபன் பயபக்தியுடன் பெற்றுக்கொண்டதுடன் பகல் 12.30 மணிக்கு திலீபன் அங்கிருந்து புறப்பட்டு சென்றார். திருமணத் தடை நீங்க வேண்டும் என்பதற்காக திலீபன் கோவிலுக்கு வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (6)

# இலங்கை அரசினால் பலவந்தமாக நாடுகடத்தப்பட்ட பணியாளர்கள்

(கொழும்பு)

கனேடிய நாட்டுப் பணியாளர் ஒருவரையும் பாகிஸ்தான் நாட்டுப்பணியாளர் ஒருவரையும் இலங்கை அரசாங்கம் பலவந்தமாக நாட்டை விட்டு வெளியேற்றியுள்ளது.

வன்முறையற்ற அமைதிப்படை நிறுவனத்தின் பணிப்பாளராகப் பணியாற்றிய கனேடியரான ஈஸ்தோம் என்பவரும் அதே நிறுவனத்தில் பணியாற்றிய பாகிஸ்தானியரான அலி அஹ்மட் என்பவருமே இவ்வாறு நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டதாக சிங்கள ஊடகம் தெரிவித்துள்ளது.

இவர்கள் இருவரையும் வெளியேற்றுமாறு படைத்துறைப் புலனாய்வுத் துறையானது குடிவரவு குடியகல்வு திணைக்களத்துக்கு அறிவித்ததை அடுத்து அவர்கள் இருவரின் விசாவை இரத்துச் செய்த பின்னர் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

அத்தோடு இவர்கள் இருவரும் மீண்டும் இலங்கைக்கு வரமுடியாதவாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி நிறுவனமானது ஆயுதந்தாங்காத தொழில் ரீதியான பொதுமக்கள் அமைதிகாக்கும் படையாகும்.

உலகம் முழுவதிலுமுள்ள சண்டை நடக்கின்ற பிரதேசங்களில் பணியாற்றுவதற்காக இந்நிறுவனம் அந்தந்த இடங்களுக்கு அழைக்கப்படுகிறது இதன் சர்வதேச தலைமைச் செயலகம் புருசல்ஸில் உள்ளது. (6)

# ஐக்கிய நாடுகள் அமைப்பின் சிலசக்திகள் எதிர்ப்பு போராட்டத்தை பெரிதுபடுத்தியுள்ளன

## பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அமைப்பின் சில சக்திகள் அண்மையில் நடைபெற்ற எதிர்ப்பு போராட்டத்தை பெரிது படுத்தியுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாடுகளுடன் சிறந்த உறவுகளைப் பேண வேண்டும் என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை எனவும் அதற்காக இலங்கை அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையை பலவீனப்படுத்தும் நோக்கில் சில சக்திகள் பிரச்சினைகளை பெரியளவில் வெளிப்படுத்த முயற்சிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஐக்கிய நாடுகளின் அபிவிருத்திக் காரியாலயம் போராட்டங்களினால் மூடப்படவில்லை எனவும், சில காலங்களுக்கு முன்னரே குறித்த அலுவலகத்தை பாங்கொக்கிற்கு இடம் நகர்த்த தீர்மானிக்கப்பட்டிருந்ததாகவும் அவர் கூறினார்.

தமிழீழ விடுதலைப்புலிகளை தோற்கடித்த காரணத்தினால் சில மேற்குலக நாடுகள் இலங்கை மீது காழ்ப்புணர்ச்சி கொண்டு செயற்பட்டு வருவதாக சுட்டிக்காட்டியுள்ளதுடன் இலங்கையின் உண்மை நிலைமையை கொழும்பில் உள்ள இராஜதந்திரிகள் உலக நாடுகளுக்கு வெளிப்படுத்துவார்கள் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஜே.என்.பி.யின் போராட்டங்கள் தொடர்பில் கொழும்பு இராஜதந்திர பிரதிநிதிகளுக்கும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸிற்கும் இடையில் விசேட சந்திப்பொன்று நடைபெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளதோடு 30 ஆண்டுகள் காலமாக கொடிய யுத்தத்தை வெற்றிக்கொண்ட இலங்கை தன்னை ஆசுவாசப்படுததிக்கொள்ள சர்வதேச சமூகம் சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பொதுமக்களின் இழப்புக்களை தவிர்க்கும் நோக்கில் இலங்கைப் படையினர் இழப்புக்களை எதிர்நோக்கியதாகவும் தற்போது ஆப்கானிஸ்தான் ஈராக் மற்றும் சோமாலியாவில் நடைபெற்று வரும் யுத்தங்களுடன் ஒப்பீடு செய்யும் போது இலங்கையில் பாரியளவு பாதிப்புக்கள் இடம்பெறவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கதிர்காம உற்சவத்திற்கு இம்முறை பெருமளவான பக்தர்கள்

(கொழும்பு)


வரலாற்று சிறப்பு மிக்க கதிர்காம உற்சவத்தை முன்னிட்டு இந்த வருடம் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொள்வார் கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டில் ஏற்பட்டுள்ள சுமூக நிலையை அடுத்து வடக்கு -கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த ஏராளமான அடியார்கள் பாத யாத்திரையாக கதிர்காமம் வந்த வண்ணம் உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பபட்டுள்ள நிலையிலும் முக்கியமாக போக்குவரத்துக் காக ஏ-9 நெடுஞ்சாலை திறக்கப்பட்டமையுமே இதற்குக் முக்கியமான காரணம் எனத் தெரியவருகிறது. (6-4)

# 12.07.2010

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



# நிகழ்வுகள்

- 1641- போர்த்துக்கல்லுக்கும் நெதர்லாந்துக்கும் இடையில் பாதுகாப்பு ஒப்பந்தம் ஏற்படுத்தபட்டது.
- 1690- இங்கிலாந்தின் மூன்றாம் வில்லியமின் படைகள் போயின் என்ற இடத்தில் இரண்டாம் ஜேம்சின் படைகளை வென்றனர்
- 1691- இங்கிலாந்தின் மூன்றாம் வில்லியமின் படைகள் அயர்லாந்தில் ஒகிறிம் என்ற இடத்தில் பெரும் வெற்றி பெற்றனர்.
- 1799- ரஞ்சித் சிங் லாகூரைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து பஞ்சாபின் ஆட்சியைப் பிடித்தான்.
- 1806-16 ஜெர்மன் மாநிலங்கள் புனித ரோமப் பேரரசில் இருந்து விலகி ரைன் கூட்டமைப்பு என்ற புதிய அரசை நிறுவினர்
- 1892- மொண்ட் பிளாங்க்கில் ஏரி ஒன்று பெருக்கெடுத்ததில் 200 பேர் கொல்லப்பட்டனர்.
- 1898- செனான் தனிமம் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1932- நோர்வே வடக்கு கிறீன்லாந்தை தன்னுடன் இணைத்துக் கொண்டது.
- 1975- சாவோ டொமே மற்றும் பிரின்சிப்பி போர்த்துக்கல்லிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1979- கிரிபட்டி பிரித்தானியாவிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1993-ஜப்பானில் 7.8 அளவு நிலநடுக்கம் மற்றும் சுனாமி தாக்கியதில் 202 பேர் கொல்லப்பட்டனர்.
- 2006-இஸ்ரேலிய இராணுவத்தினர் இருவரை ஹிஸ்புல்லா இயக்கத்தினர்கடத்தினர். இதனை அடுத்து இஸ்ரேல் லெபனான் மீது தாக்கியதில் பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்படடனர். ஆகஸ்ட் 14 இல் யுத்தம் முடிவுக்கு வந்தது.


## பிறப்புகள்

- கி.மு.100 ஜூலியஸ் சீசர் ரோமானியத் தலைவன்
- 1854-ஜோர்ஜ் ஈஸ்றமன் ஒளிப்படச்சுருளைக் கண்டுபிடித்தவர் (இ.1932)
- 1904- பாப்லோ நெருடா நோபல் பரிசு பெற்ற சிலிக் கவிஞர் (இ.1973)

## இறப்புகள்

- 1536- எராஸ்முஸ் டச்சு எழுத்தாளர் மெய்யியலாளர் (பி.1466)
- 2006- உமர் தம்பி தமிழ் கணிமைக்கு சிறந்த பங்களிப்புக்களை வழங்கியவர் (பி.1953)

**1918 -ஜப்பானின் கவாச்சி என்ற போர்க்கப்பல் ஹொன்ஷுவில் மூழ்கடிக்கப்பட்டதில் 621 பேர் கொல்லப்பட்டனர்.**



# கொழும்பு தமிழ்ச் சங்கம் நடாத்தும்

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சை

**தரம்-13** | **முன்னோடிப் பரீட்சை** | **ஆனி 2010**

### கணக்கீடு-I-I நேரம் : 1 மணி

01. கணக்கீட்டின் முதன்மை நோக்கமொன்றாக குறிப்பிடக்கூடியது
1.முயற்சியொன்றின் நிதிபெறுபேறுகளை நம்பகத்தன்மையுடனும், பொருத்தப்பாட்டுடனும் தயாரித்து சமர்ப்பித்தல்.
2.குறித்ததினத்தில் முயற்யொன்றின் நிதிநிலமைகளை கணிப்பிடுதல்
3.கம்பனியின் முகாமை இயக்குனர்களுக்கு முகாமை தீமானங்களை மேற்கொள்வதற்கு தொடர்ச்சியாக தகவல் வழங்குதல்
4.2007ஆம் ஆண்டு 07ஆம் இலக்க கம்பனிச்சட்டத்திற்கு கட்டுப்பட்டு நிதியறிக்கைகளை தயாரித்தல்.
5.நிறுவன களவுகள்,மோசடிகளை கட்டுப்படுத்தல்

02.பின்வருவனவற்றுள் நடைமுறைசொத்து அதிகரிப்பதற்கும்,நடைமுறையல்லாத சொத்து குறைவடைவதற்கும் காரணமாக அமைவது,
1.நடைமுறையல்லாத சொத்துக்களின் பெறுமானதேய்வு
2.முதலீடுகளின் சந்தை பெறுமதி அதிகரித்தல்
3.உரிமையாளரின் மேலதிக மூலதன அறிமுகம்
4.உரிமையாளரின் பண்டப்பற்று
5.முதலீடுகள் விற்பனை

03.கொடுக்கல் வாங்கல்களும், நிகழ்வுகளும் செலவு,சொத்து மூலதனம்,கடன், வருமானம் என வேறுபடுத்துவது பின்வருவனவற்றுள் எக்கணக்கீட்டு தொழிற்பாடாக கருதப்படும்
1.சுருக்குதல்
2.வியாக்கியானம்
3.பகுப்பாய்தல்
4.வகைபடுத்தல்
5.கட்டுப்படுத்தல்

04. பின்வருவனவற்றுள் பரீட்சை மீதியொன்று இணங்காமைக்கு காரணமாக அமையாதது,
1.காசேட்டின் பெற்றகழிவு நிரலின் கூட்டுத்தொகை அதிகமாக கூட்டப்பட்டிருத்தல்
2.விற்பனை கணக்கு குறைவாக கூட்டப்பட்டிருத்தல்
3.வரவுத்தாள் ஒன்று வெளிதிரும்பல் கணக்கில் மட்டும் செலவு வைக்கபட்டிருந்தமை
4.செலவுத்தாள் முற்றாக ஏடுகளில் தவறவிடப்பட்டிருத்தல்
5.கொள்வனவு கணக்கு வரவு மீது பரீட்சைமீதிக்கு மாற்றப்படாதிருத்தல்

05. பிரதாப்பிடம் பாவகைக்கென ரூபா 60000 கிரயமுடைய இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டு இதற்கான பகுதிக்கொடுப்பனவாக ரூபா 36000 காசோலை செலுத்தப்பட்டது. இக் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய மூலஏடாக அமைவது,
1.கொள்வனவு தினசேரியும், காசேடும்
2.பொது குறிப்பேடும், காசேடும்
3.பொது குறிப்பேடும்,கொள்வனவு திரும்பல் தினசேரியும்
4.பொது குறிப்பேடும்,கொள்வனவு தினசேரியும்
5.கொள்வனவு தினசேரியும்,கொள்வனவு திரும்பல் தினசேரியும்.

06. தனிவியாபாரியொருவரின் உரிமைத்துவத்தை மிகச்சரியாக பிரதிபலிக்கும் கூற்று
1.மூலதனம் + தேறிய இலாபம் -எடுப்பனவுகள்
2.மூலதனம்+ தேறிய இலாபம்+ எடுப்பனவுகள்
3.மூலதனம்+ தேறிய நட்டம்+ எடுப்பனவுகள்
4.மூலதனம்- தேறிய நட்டம்+ எடுப்பனவுகள்
5.மூலதனம் -தேறிய இலாபம்+ எடுப்பனவுகள்

07.2009ஆகஸட் 01 இல் ஒரு வருட நட்ட ஈட்டு தவணைக்கட்டணமாக செலுத்தப்பட்ட ரூபா 84000ஆம் முழுவதும் 2009 டிசெம்பர் 31 இல் முடிவுக் கணக்கில் ஒரு செலவாக பிரதிபலிக்கப்பட்டமையானது பின்னர் இடம்பெற்ற கணக்காய்வின் போது இனங்காணப்பட்டு திருத்தப்படுமாயின்,
1. தேறிய இலாபம் ரூபா 49000 ஆலும்,நடப்பு சொத்து ரூபா 49000 ஆலும் அதிகரிக்கும்
2.தேறிய இலாபம் ரூபா 49000ஆலும்,நடப்பு சொத்து ரூபா 49000 ஆலும் குறைவடையும்
3.தேறிய இலாபம் மட்டும்ரூபா 49000ஆல் அதிகரிக்கும்
4.நடப்பு சொத்து மட்டும் 49000 ஆல் குறைவடையும்
5.நடைமுறைபொறுப்பு ரூபா 49000 ஆலும்,நடைமுறைசொத்து ரூபா 35000 ஆலும் அதிகரிக்கும்.

08. 2010மார்ச் 31 இல் பியந்த ஸ்டோர்ஸின் களஞ்சிய சாலையில் உள்ளபடியான கையிருப்புக்கள் மட்டும் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது. கணக்காய்வின் போது பின்வருவன இனங்காணப்பட்டன.

வழு I மார்ச் 20 இல் கிரயப்பட்டியல் கிடைக்கப்பெற்று கொள்வனவாக பிரதிபலிக்கப்பட்ட ரூபா 18000 பெறுமதியான பண்டங்கள் 2010.ஏப்ரல் 23 இலேயே களஞ்சியத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.
வழு II கிரயத்தில் 20% சதவீத இலாபம் சேர்த்து ரூபா 36000 பட்டியல் பெறுமானமுடைய பண்டங்கள் வாடிக்கையாளர்களுக்குவிநியோகிக்கப்படாதிருந்தது.

மேற்கூறிய வழு I ,வழு II என்பவற்றை திருத்துவதனால் இலாபத்தில் ஏற்படும் தாக்கம்.

| | வழு I | | வழு II | |
|---|---|---|---|---|
| 1. | அதிகரிக்கும் ரூபா | 18000 | அதிகரிக்கும் ரூபா | 30000 |
| 2. | அதிகரிக்கும் | 18000 | அதிகரிக்கும் | 36000 |
| 3. | அதிகரிக்கும் | 18000 | குறையும் | 36000 |
| 4. | அதிகரிக்கும் | 18000 | குறையும் | 30000 |
| 5. | குறையும் | 18000 | அதிகரிக்கும் | 30000 |

09.பிரசாத் கம்பனி மாதம் ரூபா 10000இற்கு நிறுவனத்தின் ஒரு பகுதியை வாடகைக்கு விட்டிருந்த ஒப்பந்தம் 2009 ஆகஸ்ட் 31இல் காலவதியானது. இத்தினத்தில் மாதம் ரூபா 12000 படி மீண்டும் ஒப்பந்தம் 02 வருடங்களுக்கு புதுப்பிக்கப்பட்டு 02 வருடங்களுக்குரிய தொகை முற்பணமாக பெற்றுக கொள்ளப்பட்டது.2010 மார்ச் 31இல் முடிவடையும் கணக்காண்டு இலாபநட்ட கணக்கிலும், அத்தினத்திலான ஐந்தொகையிலும் பிரதிபலிக்கும் தொகையினை பிரதிபலிப்பது,

| | இலாபநட்டக்கணக்கு | | ஐந்தொகை | |
|---|---|---|---|---|
| 1. | செலவாக ரூபா | 134000 | பரிப்பாக ரூபா | 204000 |
| 2. | வருமானமாக | 134000 | பரிப்பாக | 204000 |
| 3. | செலவாக | 134000 | சொத்தாக | 204000 |
| 4. | வருமானமாக | 134000 | சொத்தாக | 204000 |
| 5. | செலவாக | 204000 | பரிப்பாக | 134000 |

வினா இலக்கம் 10,11 என்பவற்றுக்கு விடையளிக்க கீழ் வரும் தரவுகளை பயன்படுத்துக.

| ஆதன வகை | கொள்விலை (ரூபா) | மதிப்பிடப்பட்ட ஆயுட்காலம் | என்ஜிய பெறுமதி | பாவித்த காலம் | விற்ற தொகை | இலாபம் நட்டம் |
|---|---|---|---|---|---|---|
| ஒப்படை வாகனம் | 2000000 | 06 | 200000 | ? | 1040000 | (60000) |
| அலுவலக சாதனம் | 800000 | ? | 50000 | 03 | 400000 | 50000 |

10.ஒப்படை வாகனம் பாவித்த காலமாக அமைவது,
1.1 வருடம் 2.4 வருடம் 3. 3 வருடம்
4. 4 வருடம் 5. 7 வருடம்

11.அலுவலக சாதனத்தின் மதிப்பிடப்பட்ட ஆயுட்காலமாக அமைவது,
1.3 வருடம் 2. 4 வருடம் 3. 5 வருடம்
4.6 வருடம் 5. 7 வருடம்

12.கடன்படுனர் மீதியில் குறித்த சதவீதமொன்றை ஐயக்கடன் ஏற்பாடாக மேற்கொள்கையில், வாடிக்கையாளர் நேரடியாக வங்கிக்கு வைப்புச் செய்தமை அறியக்கிடைக்குமாயின் கீழ்வருவனவற்றுள் ஏற்படும் தாக்கம்,

| | வங்கிமேலதிக பற்று நிலுவை | ஐயக்கடன் ஏற்பாட்டு நிலுவை |
|---|---|---|
| 1. | குறையும் | குறையும் |
| 2. | குறையும் | மாற்றமில்லை |
| 3. | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 4. | குறையும் | அதிகரிக்கும் |
| 5. | அதிகரிக்கும் | மாற்றமில்லை |

13. பொருத்தப்பாட்டுக்கமையவும், நம்பகத்தன்மையுடனும் நிதியறிக்கைகளை பிரதிபலிக்கும் நோக்குடன் நடைமுறையல்லா சொத்துக்களை நடைமுறை சந்தை விலைகளில் பிரதிபலிப்பானது.கீழ்வரும் எக் கணக்கீட்டு எண்ணக் கருவினை மீறும் செயலாகும்.
1.தொடர்ந்திருக்கும் எண்ணக்கரு
2.கால அளவீட்டு எண்ணக்கரு
3.கொள்கைமாறாமை எண்ணக்கரு
4.வணிக அலகுசார் எண்ணக்கரு
5.வரலாற்றுகிரய எண்ணக்கரு

**வினா இலக்கம் 14, 15 என்பவற்றுக்கு விடையளிக்க கீழ் வரும் தரவுகளை பயன்படுத்துக.**

| | |
|---|---|
| உற்பத்திக்கு தயாரான மூலப்பொருள் இருப்பு ரூபா | 958000 |
| கணக்காண்டின் துவக்க மூலப்பொருள் இருப்பு | 124000 |
| கணக்காண்டின் இறுதி மூலப்பொருள் இருப்பு | 158000 |
| மூலப்பொருள் (கிலோகிராம்)ஒன்றின் விலை | 200.00 |
| அலகொன்றை உற்பத்திசெய்ய 02 கிலோகிராம் ப்யன்படுத்தப்படுகிறது | |
| தயாரிப்பு கூலி அலகொன்றுக்கு | ரூபா 60 |
| பிற ஆலை மேந்தலை கிரயம் | 480000 |

14. பூர்த்தி செய்த அலகுகளின் எண்ணிக்கை மொத்தஉற்பத்திக் கிரயம்

| | பூர்த்தி செய்த அலகுகளின் எண்ணிக்கை | மொத்தஉற்பத்திக் கிரயம் |
|---|---|---|
| 1. | 4000 அலகுகள் | ரூபா 1524000 |
| 2. | 2000 அலகுகள் | 1524000 |
| 3. | 2000 அலகுகள் | 1400000 |
| 4. | 4000 அலகுகள் | 1520000 |
| 5. | 5000 அலகுகள் | 1524000 |

# உலகின் மிகச்சிறிய அமைச்சரவையை கொண்ட நாடென்ற சாதனையை இலங்கை எட்டியுள்ளது

## மங்கள சமரவீர தெரிவிப்பு



(கொழும்பு)

உலகின் மிகச் சிறிய அமைச்சரவையைக் கொண்ட நாடு என்ற உலக சாதனையை இலங்கை பெற்றுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கையின் புதிய அமைச்சரவையில் இரண்டு அமைச்சர்களே கடமையாற்றுவதாகவும் ஏனையவர்கள் அவர்களின் கைப்பொம்மைகளாக செயற்பட்டு வருவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

அரசாங்கத்தின் மொத்த செலவில் 63 வீதம் ராஜபக்ஷ குடும்பத்தாருக்காக ஒதுக் கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளதுடன், கடந்த நான்கு ஆண்டுகளாக இலங்கையின் சட்ட ஒழுங்கு பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்ற போர்வையில் பல்வேறு அடக்கு முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டதாகவும் சுயாதீன ஆணைக் குழுக்கள் நியமிக்கப்படாமையினால் சர்வதேச ரீதியில் பாதிப்பு ஏற்படக்கூடும் என 2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி தாம் ஜனாதிபதிக்கு எழுத்து மூலமாக அறிவித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். (6)

# இலங்கை இந்திய ஒப்பந்தங்களை இரத்து செய்ய வேண்டும் - வைகோ

தமிழக மீனவர் அடித்துக் கொல்லப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து இந்தியா இலங்கை ஒப்பந்தங்களை இரத்துச் செய்ய வேண்டும் என்று வைகோ தெரிவித்தார்.

நாகை மாவட்டம் வேதாரண்யம் அருகே உள்ள வெள்ளப்பள்ளம் மீனவக் கிராமத்தை சேர்ந்த மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கடந்த 7 ஆம் திகதி நடுக்கட லில் வைத்து தாக்கினர்.

இதில் வெள்ளப்பள்ளத்தை சேர்ந்த செல் லப்பன் என்ற மீனவர் இறந்தார்.

இந்த நிலையில் ம.தி.மு. க. பொதுச்செயலாளர் வைகோ வெள்ளப்பள்ளம் கிராமத்துக்கு நேற்று முன்தினம் வந்தார். அங்கு உயிரிழந்த செல்லப்பன் வீட்டுக்கு சென்ற அவர் செல்லப்பனின் மனைவி ருக்மணி மற்றும் உறவினர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி ரூ.25 ஆயிரம் நிதி உதவி வழங்கினார்.

பின்னர் வைகோ செய்தியாளர்களிடம் பேசுகையில், இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களை மனிதாபிமானமற்ற முறையில் துப்பாக்கியால் சுடுவதும் அவர்களை தாக்கி சித்திரவதை செய்வதையும் வாடிக்கையாகி விட்டது. இதுவரை 1000 ற்கும் மேற்பட்ட அத்துமீறல்கள் நடந்துள்ளன.

இறந்த செல்லப்பன் மகள் மலர் கொடிக்கு அவரது தகுதிக்கேற்ப தமிழக அரசு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும். இலங்கை இந்திய ஒப்பந்தங்களை இரத்து செய்ய வேண்டும். சமீபத்தில் நாகை கீச்சான் குப்பத்தை சேர்ந்த 18 மீனவர்கள் நடுக்கடலில் வைத்து தாக்கப்பட்டு சித்ரவதைக்கு ஆளாகியுள்ளனர்.

அதேபோல் அக்கரைப்பேட்டை நாகூர் பகுதி மீனவர்கள் 118 பேர் தாக்கப்பட்டுள்ளனர்.

இதுதவிர தற்போது இலங்கை இராணுவத்தில் சீனர்கள் இணைந்து அட்டகாசம் செய்கிறார்கள். சீனர்கள் வருகையால் இந்தியாவுக்கு குறிப்பாக தமிழகத்துக்கு பெரும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இலங்கை அரசை கண்டித்து வருகிற 16 ஆம் திகதி எனது தலைமையில் வேதாரண்யத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளோம் என்றார். (6)

# தமிழகம் சென்ற இலங்கை அகதி திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்

(சென்னை)

இலங்கையில் இருந்து தமிழகத்துக்கு விமானத்தில் வந்த இலங்கைத் தமிழ் அகதி ஒருவர் மறுபடியும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

ஈரோடு அருகே பவானிசாகர் முகாமில் இருந்த சந்திரலோகு (வயது-32) கடந்த ஆண்டு இலங்கை சென்றார். அவருடைய மனைவி, குழந்தை ஆகியோர் இந்தியாவில் உள்ளனர்.

இலங்கையில் இருந்து தன் குடும்பத்தினரைப் பார்க்க நேற்று முன்தினம் இரவு விமானம் மூலம் சந்திரலோகு சென்னை வந்தார்.

ஆனால் அவரை இறங்க விடாமல் தடுத்த குடியேற்றத்துறை அதிகா ரிகள் திரும்பவும் இலங்கைக்கு அனுப்பிவிட்டனர்.

அவர் விடுதலைப்புலிகள் அமைப்புடன் தொடர்புகொண்டவர் என்று தமிழக கியூ பிரிவு பொலிஸார் தெரிவித்ததாகவும், அதன் அடிப்படையில் சந்திரலோகுவை திருப்பி அனுப்ப மத்திய அரசு பணித்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன்படிநேற்று பிற்பகலில் விமானம் மூலம் அவர் திருப்பி அனுப்பப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிலமாதங்களுக்கு முன்பு விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபகாரனின் தாயார் பார்வதி அம்மாள் சிகிச் சைக்காக சென்னை வந்த போது இதே போல திருப்பி அனுப்பப்பட்டது குறிப்பிடத்தக்கது. (6)

# புதிய கடற்படை முகாம் அமைக்கத் திட்டம்

(கொழும்பு)

வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மாங்கேணி கஜுவத்தையில் புதிதாக கடற்படை முகாம் அமைக்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. கஜுவத்தை காணி மரமுந்திரிகை கூட்டுத் தாபனத்திற்கு சொந்தமானதாகும். இக்காணியில் 1200 ஏக்கரை ஒதுக்கித் தருமாறு கடற்படையினர் வாகரை பிரதேச செயலாளரைக் கோரியுள்ளனர்.

இதனை அடுத்து இக்கோரிக்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட்டுள்ள்தாயினும், முடிவு எதுவும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்த விடயம் கடந்த மாதம் 28 ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்திலும் முன் மொழியப்பட்டதாயினும் அங்கும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

இதேவேளை கஜுவத்தை சந்தியில் பெருமளவு கட்டடப் பொருட்கள் கடற்படையினால் கொண்டு வந்து குவிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (6)

## இணுவில் கந்தசுவாமி கோவில் மஹோற்சவம்



www.inuvilkanthan.com

### பூங்காவன திருவிழா

### உலகப் பெருமஞ்ச நாயகன்

பல்லவி

உலகப் பெருமஞ்ச நாயகன் – சங்கத்
தலைவன்! கன்னித் தமிழின் காவலன்

சரணம்

பணிபவர்தம் நெஞ்சம் – எல்லாம்
பரவசம் செய் தேவன் – ஆளும்
இணுவைக் கந்தசாமி கோவில்
எங்கள் தேவலோகம் !
(உலகப் பெரும்)

வானளவும் கோபுரங்கள்
வண்ணம் பொழில்சூழல் – சூரன்
சேனைதமை அன்றுங் கொன்ற
வேலன் எங்கள் நிழல்
(உலகப் பெரும்)

உருகிடவே பக்தர் உள்ளம்
உவந்தருளும் கண்கள் –ஏந்தக்
கருகிடவே பழவினைகள்
காக்கும் மலர்க் கால்கள்!
(உலகப் பெரும்)

பாலன் ஆண்டி கிழவனாக
காளை குருவாக இன்பக்
கோலம்பல கொள்ளிணுவைக்
குமரசாந்தி தாராய்

இணுவை சா.வோ.பஞ்சாட்சரம்

### பூங்காவனம்

பூங்கா வனத்திலே
புதுப் பொலிவாகவே
மங்கள நாயகன்
மண மாலைகள் மாற்றியே

இரு மண வாட்டியை
இணை கரம் பற்றியே
திரு மணம் முடித்த
திரு மால் மருகனே

ஏறி மயில் மீதிலே
எழுந்தருள வருமழகை
கூறிடவே வார்த்தையின்றி
இருகரமே கூப்புகின்றோம்

சண்.ஜெகன்

### இணுவைக் கந்தனின் திருக்கல்யாணக் காட்சி

அரவிந்த மலரிலே ஆறுருவாய் தவழ்ந்தவனே
அன்னையின் அணைப்பில் ஒருருவாய் திகழ்ந்தவனே
வேறுருவாய் சென்று வள்ளியைக் கவர்ந்தவனே
மாறுருவாகி மணமகனாய் காட்சி தந்தாய்

மன்னுமதி இணுவையிலே மகத்தான கோயில் கொண்டு
மங்கையர் இருவர் மணவறையில் வீற்றிருக்க
மணிமகுட மணிகள் நாற்றிசையும் ஒளிபரப்ப
மணமாலை மணி பதக்கம் நெஞ்சிலே பளபளக்க
மணமகனாய் மங்கையர் இருவர்க்கு மாங்கல்யம் பூட்டி
கல்யாண வேலவனாய் காட்சி தந்த கலியுகனே

பக்தர் குழாமும் பாடி ஆடிக்கூடிவர
பச்சை மயிலேறி மணமகனாய் பவனிவர
மங்கள வாத்தியங்கள் எத்திசையும் ஒலிபரப்ப
சங்கின் ஒலியும் சேர்ந்தொலிக்கும் இணுவையில்
மணக் கோலக்காட்சி மாண்புறு திருக்காட்சி

இணுவையூர் செல்வம் பவான்

# பயங்கரவாதிகளை ஒப்படைக்க பாகிஸ்தான் அதிபர் மறுப்பு

மும்பை தாக்குதல் வழக்கில் தொடர்புடைய குற்றவாளிகளை இந்தியாவிடம் ஒப்படைக்க முடியாது என பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி சர்தாரி திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

சீனாவிற்கு சுற்றுப்பயணம் சென்றுள்ள சர்தாரி, மும்பை தாக்குதல் குற்றவாளிகளை இந்தியாவிடம் ஒப்படைக்க முடியாது எனவும், இந்தியா – பாகிஸ்தான் இடையே கைதிகளை பரிமாறிக்கொள்ளும் ஒப்பந்தம் ஏதும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் பாகிஸ்தானில் நடைபெற்று வரும் மும்பை தாக்குதல் வழக்கு விசாரணைக்கு பிறகு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (6)

# கிளிநொச்சி வாடிக்கையாளர் நிலையம்



191

## உன்னத சேவைக்காக இணைந்துள்ள குழுவினர்

கிளிநொச்சி மக்களே, இன்று முதல் உங்கள் சகல வங்கி அலுவல்களையும் கவனிக்கவிருக்கும் இந்த வெற்றி அணிக்கு நல்வரவு கூறுங்கள்.

இன்று திறந்துவைக்கப்படும் எமது 191ஆவது வாடிக்கையாளர் நிலையத்தின் அச்சாணியாக விளங்கும் இத் தொழில் நிபுணர்கள் உங்களுக்கு அதிசிறந்த வங்கிச் சேவைகள் கிடைப்பதை உறுதிப்படுத்துவார்கள்.

HNB கிளிநொச்சி, கருணா நிலையம், A9 வீதி, கிளிநொச்சி
எங்கள் வங்கிச் சேவைகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: 021-2285343, 021-2285344 அல்லது 021-2285348


HNB




S.P.N. Motors
உங்களது நன்மதிப்புப் பெற்ற
Safari Motor Cycle தற்போது விற்பனையில்
எஸ்.பி.என் மோட்டர்ஸ்
171, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

181 வது மைல்கல்

# திருநெல்வேலி



அக்காலத்தில் யாழ்குடா நாடு நெற்பயிர் செய்கையில் செழுமை மிக்க விவசாய பூமியாக மிகவும் பிரசித்தி பெற்று விளங்கியது. நெற்பயிர் செய்கையின் பிரசித்தத்தின் காரணத்தினால், “நெல்” என்ற சொற் பதத்தை ஆதாரமாகக் கொண்டு திரு-நெல்-வேலி என்ற பெயர் பெற்றதாக கூறப்படுகிறது. தற்காலத்தில், மரக்கறி செய்கையில் வளமிக்க விவசாய பூமியாக செழித்து விளங்கும் போதிலும் இன்றும் திருநெல்வேலி எனும் பெயர் கொண்டே அழைக்கப்படுகிறது. வெறுமனே மரக்கறி பயிர்ச்செய்கைக்கு உகந்த பூமியாக மட்டுமல்லாமல், உயர்கல்வித்துறை முன்னேற்றத்திற்கும் விவசாய கல்வித்துறை முன்னேற்றத்திற்கும் உதவும் பல்கலைக்கழகத்தினையும் பண்ணை கல்லூரியினையும் கொண்ட பொற்பூமியாகவும் விளங்குகிறது.

இப்பிரதேச வேளாண் தொழிலாளர்களினதும், கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கல்விமான்களினதும் நிதியியல் தேவையினைப் பூர்த்தி செய்வதற்காக, கொமர்ஷல் வங்கியின் புதிய கிளை இன்று திருநெல்வேலியில் வைபவரீதியாக திறந்து வைக்கப்படுகிறது. இலங்கையிலுள்ள வங்கித்துறையில் காணப்படும் அனைத்து நவீனத்துவ சேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

கொமர்ஷல் வங்கியின் இப்புதிய கிளை பலாலி வீதி, திருநெல்வேலி என்ற முகவரியில் 2010 ஜூலை 12ம் திகதி திங்கட்கிழமை மு.ப 11.27 மணிக்கு சுபவேளையில் திறந்து வைக்கப்படுகிறது. இவ்வைபவத்தில் கலந்து சிறப்பிக்கும்படி அனைவரையும் அழைக்கிறோம்.

---

தொலைபேசி (முகாமையாளர்) 021-2220001, (பொது) 021-2220002, 2220003 (ஃபக்ஸ்) 021-2220004



OgilvyAction

COMMERCIAL BANK

# ஒரு நாட்டில் இரு தேசிய இனங்கள் இதுவே, எங்கள் நிலைப்பாடு

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஒத்த நோக்கும், இலக்கும், கருத்தும் கொண்ட எம்மிடையே கவலையுடன் காணப்பட்ட கருத்து முரண்பாட்டில் முக்கியமானது "இரு தேசம் ஒருநாடு" என்பதற்கும் தமிழ்த் தேசிய இனம் என்ற சொற்பதங்களுக்கிடையேயான மிக நுண்ணியமான வேறுபாடே.

இந்த விடயத்தை தமிழரசுக் கட்சியின் மதிப்பார்ந்த தலைவனாக விளங்கிய அமரர் அமிர்தலிங்கம் ஊடாக, அவரது சிரார்த்த தினத்தையொட்டி ஆராய்வது பொருத்தமானது எனக் கருதப்படுகிறது. தமிழ் பேசும் மக்களின் அரசியல் வரலாற்றில் ''தமிழ் பேசும் தேசிய இனம்'' என்ற வார்த்தைப் பிரயோகம், தமிழரசுக் கட்சியின் அங்குரார்ப்பண நாளில் இருந்தே பாவனையிலிருந்து வருகிறது.

18.12.1949இல் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் முதலாவது கூட்டத்தில் கட்சியின் அமைப்புத் தீர்மானத்தை பிரேரித் துப் பேசிய தந்தை செல்வநாயகம் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

''.......... தமிழ் பேசும் தேசிய இனம் பெரிய தேசிய இனத்தால் விழுங்கப்பட்டு அழியாதிருக்க வேண்டுமானால் இவ்வித சமஷ்டி ஏற்படுவது அவசியமாகிறது'' இதே போல் தந்தை செல்வநாயகம் அவர்களால் பிரேரிக்கப்பட்டு ஏகமனதாக ஏற்றுக் கொள்ள மேற்குறிப்பிட்ட பிரேரணையின் இறுதிப் பகுதி பின்வருமாறு உள்ளது.

''...........இந்நாட்டு தமிழ் பேசும் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ''சுயாட்சி'' என்ற இலக்கை அடைவதற்கு இடையறாது உழைக்க உறுதி பூண்ட, தமிழ்பேசும் மக்களின் தேசிய நிறுவனமாக இயங்குவதென்று தீர்மானிக்கிறது''

"இந்தச் சந்தர்ப்பத்தில் Nation என்ற சொல்லுக்கும் Country என்ற சொல்லுக்கும் Oxford Advanced learnres Dictionary தரும் விளக்கத்தைப் பார்ப்பது மிகவும் பொருத்தமானது.

Nation: A large Community of People use sharing a Common history,culture and language and living in a particular territory under one government.

Country:An area of land that forms a politically independent unit

இவற்றின் மூலம் Nation என்பது மனித சமூகம் சார்ந்தது என்பதும் Country என்பது நிலம் சார்ந்தது என்பதும் தெளிவு. ஆகவே தான் இந்த நாட்டில் இருதேசிய இனங்கள் இருப்பதை வலியுறுத்தியே two nations in one country என்று 1991செப்டெம்பர் மாதத்தில் விடுதலைப் புலிகளின் சார்பில் முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா அவர்களைச் சந்தித்த போது எடுத்துக் கூறினேன். அவ்வாறு தெரிவித்ததை விடுதலைப்புலிகளின் உயர் தலைமைக்கும் அறிக்கையிட்டேன். இது தந்தை செல்வா அவர்களினதும் அமரர் அ.அமிர்தலிங்கம் அவர்களினதும் கருத்துக்களின் வெளிப்பாடே.

தந்தை செல்வா அவர்கள் தமிழரசுக் கட்சியின் முதலாவது அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசும் போது"தமிழ் பேசும் தேசிய இனம்'' என்று தமிழினத்தையும் ''பெரிய தேசிய இனத்தால்'' என்று சிங்கள இனத்தையும் குறிப்பிடுகிறார். இதன் மூலம் இலங்கையில் இரு தேசிய இனங்கள் two nations இருப்பதை அப்போது தெளிவாக கூறியிருக்கிறார். இதனுடன் அமரர் அ. அமிர்தலிங்கம் அவர்கள் பாராளுமன்றத்தில் ஆற்றிய வரலாற்றுச் சிறப்பு மிக்க உரைகளிலும் இந்தக் கருத்து மிகவும் தெளிவாக உள்ளது.

29.04.1982 இல் புதிய பாரா ளுமன்ற கட்டட திறப்பு விழாவின் போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அமரர் அமிர்தலிங்கம் அவர்களின் பேச்சின் போது பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "............ அதன் பின்பு படிப்படியாக சிங்கள மக் களுடைய கைக்கு அரசியல் அதிகாரம் மாறி ,1948 ஆம் ஆண்டு அவர்களுடைய ஆட்சி அதிகாரம் ; பூரணத்துவம் பெற்றது. தமிழ் தேசிய இனத்தைப் பொறுத்தவரையிலே, அந்த நிலைமை இன்னும் ஏற்படவில்லை''

இதற்கு முன்பாக 03.08.1978 இல் புதிய அரசியலமைப்பு சம்பந்தமாக எதிர்க்கட்சி தலைவர் அமரர் அ.அமிர்த லிங்கம் அவர்கள், அப்போதைய சபாநாயகராலேயே மிகவும் புகழ்ந்து பாராட்டப்பட் ஆங்கில உரையில் பல சந்தர்ப்பங்களில் இந்தச் சொற்களை மிக இலாவகமாக பயன்படுத்தியுள்ளார்.

Two Nations என்ற சொற்களை 16 தடவைகளும் Tamil Nation என்ற சொற்களை 9 தடவைகளும் Sinhalese Nation என்ற சொற்களை 5 தடவைகளும் பாவித்துள்ளார். இவற்றுள் அவர் மேற்கோள் காட்டிப் பேசிய, 04.02.1976 இல் பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்பட்டிருந்த பதினொரு தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரேரணையும், 14.05.1976 இல் வட்டுக்கோட்டை தீர்மானமும், 03.10.1972 இல் பாராளுமன்ற ஆசனத்தை இராஜினாமா செய்து மீண்டும் தெரிவுசெய்யப்பட்டபோது தமிழரசுத் தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள் ஆற்றிய உரை, அரசியலமைப்பு தெரிவுக்குழுவில் பங்குபற்றுவதில்லையென தமிழ் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் தீர்மானம் என்பனவும் உள்ளடக்கப்பட்டன.


அமரர் அமிர்தலிங்கம் அவர்கள் தமிழினம் ஒரு தனித்துவமான தேசிய இனம் distinctnation என்பதை வலியுறுத்தி உள்ளார். மேலும் அவரது பேச்சில், nationhood என்பதனையும் பின்வருமாறு வரையறை defined செய்துள்ளார்.

" We are a separate nation entitled to the right of self determination I cannot undertake a lecture in political theory at this stage and the elements that go to constititute nation hood. To say the least a nation has been defined as a terriorially evolved community of people united by language, religion, common tradition and culture and the will to live together as a nation "

இதன் மொழியாக்கம் :

நாம் சுயநிர்ணய உரிமையுடைய தனித்துவமான தேசிய இனம். தேசிய இனத்துவம் பற்றிய ஒரு விரிவுரையை இச் சந்தர்ப்பத்தில் மேற்கொள்ள நான் விரும்பவில்லை. ஆகக் குறைந்தது பிராந்திய ரீதியாக உருவாகி மொழியால், மதத்தால்,பொது பழக்க வழக்கங்கள் மற்றும் கலாசாரம் ஆகியவற்றுடன் ஒரு தேசிய இனமாக வாழ திடசங்கற்பம் கொண்ட மக்கள் சமூகத்தை தேசிய இனமாக வரையறை செய்யலாம்.

இந்த வரையறையின் மூலம் அமரர் அமிர்தலிங்கம் அவர்கள் Nation என்ற சொல்லுக்கு தேசிய இனம் என்ற கருத்தை வெளிப்படுத்தியுள்ளமை மிகத் தெளிவு. என்வே நாம் மேலே கூறியதுபோல ஒரே நோக்கத்தையும் இலட்சியங்களையும் இலக்காகக் கொண்ட நாம், நுண்ணிய பொருட்கோடலில் பிரிந்து நிற்பது பொருத்தமானதல்ல என்பதுடன் துரதிர்ஷடமானதும் கூட: தமிழின பிதாமகன்களான தந்தை செல்வநாயகம் மற்றும் அமரர் அ.அமிர்தலிங்கம் ஆகியோரின் கருத்துக்கு அமைய இரு தேசிய இனங்கள் ஒரு நாடு என்ற நிலையை நாம் ஏற்றுக்கொண்டு செயற்பட வேண்டிய காலகட்டத்தில் நிற்பதை அமரர் அ.அமிர்தலிங்கம் அவர்களின் நினைவாக எல்லோரையும் வேண்டுகிறோம்.



அமரர் அ.அமிர்தலிங்கம் அவர்கள் தனது உரையின் இறுதிப் பகுதியில் பின்வருமாறு எச்சரிக்கையாகவே குறிப்பிட்டிருப்பதை நாம் கவனத்திற்கெடுத்து செயற்பட வேண் டும்.

" We don't want our future generations to be totally annihilated in this Country and to cease to exist as a seperate enity"

**சீ.வீ.கே.சிவஞானம்**
**முன்னாள் யாழ். மாநகரசபை ஆணையாளர்**

இதன் மொழியாக்கம்:

" எமது எதிர்கால சந்ததி இந்த நாட்டில் இல்லாதொழிக்கப்பட்டு தனித்துவமற்றதாக இருப்பதை நாம் விரும்பவில்லை"

இந்த விடயத்தை அமரர் அ.அமிர்தலிங்கம் நினைவாக நாம் முன் வைப்பதற்கான முக்கிய காரணம், நாம் வார்த்தைப் பொருட்கோடல்களில் பிரிந்து, பிளவுபட்டு நிற்கையில் இந்த அரசாங்கம், சிறுபான்மை இனம் என்று ஒன்றில்லை, எல்லோரும் ஒரே இனம் என்ற கருத்தை ஆழமாக விதைத்து வரும் அதேவேளை எமது மண்ணிலேயே எம்மினத்தின் தனித்துவத்தை மறைத்து அழித்துவிடும் வகையில் "One Nation -One Country" ஒரு இனம் ஒரு நாடு என்ற வாசகங்கள் திரும்பிய இடமெல்லாம் காட்சியளிக்கின்றன. இதைக் கவனத்திற் கொண்டு செயற்படுமாறு சகலரையும் விநயமாக வேண்டிக் கொள்கிறோம்.

## ஜி.எஸ்.பி வரிச்சலுகை நீடிக்கப்படுவதற்கு தொழிலாளர் உரிமைகள் பேணப்படவேண்டும்

### அமெரிக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர் அமைப்புக்களின் சுதந்திரமான நடவடிக்கைகள் மற்றும் உரிமைகளின் தரம் என்பன ஆராயப்பட்ட பின்னரே ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை நீடிப்பு செய்யப்படும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இலங்கையில் உள்ள தொழிற்சங்க அமைப்புக்கள் மிரட்டப்படுவது மற்றும் தொழிலாளர்களின் உரிமைகள் பறிக்கப்படுவது போன்ற காரணிகளை ஆராய்ந்த பின்னரே ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையின் நீடிப்பு குறித்து முடிவுகள் மேற்கொள்ளப்படும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

எனினும் இதுகுறித்து அமெரிக்க அரசுக்கு முறைப்பாடுகளை மேற்கொண்ட அமெரிக்க தொழிற்சங்க மற்றும் தொழிலாளர் காங்கிரஸ் அமைப்பு கருணா குழுவினர் மற்றும் சிறார் படைச் சேர்ப்பு தொடர்பாகவும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தது எனவும் ஆனால் அவற்றை நீக்கிவிட்டு தொழிலாளர் உரிமைகளை மையப்படுத்தி முறைப்பாட்டை மீண்டும் சமர்ப்பிக்குமாறு அமெரிக்கா தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6)

## கோபாலபுரம்,காயாங்கேணி பகுதிகள் தொல்பொருள் வலயமாக அறிவிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டம் வாகரைப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட காயாங்கேணி மற்றும் கோபாலபுரம் பகுதிகள் இலங்கை அரசாங்கத்தினால் பாதுகாக்கப்பட்ட தொல்பொருள் வலயமாகப் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது, புராதன கட்டடச் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதையடுத்து பொலநறுவைப் பிராந்திய தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் அங்கு சென்று பார்வையிட்டனர்.

இதன் பின்னர் காயாங்கேணி மற்றும் கோபாலபுரம் பகுதிகள் பாதுகாக்கப்பட்ட புராதன தொல்பொருள் வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு மாதகாலம் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் அங்கு தங்கியிருந்து ஆய்வுகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளனர்.

சுமார் 75 ஏக்கர் நிலப்பரப்பில் இந்தப் புராதன சின்னங்கள் இருக்கலாமென கருதப்படுகின்றது. 1856 ஆம் ஆண்டு பிரித்தானியா ஆய்வாளர் ஒருவர் எழுதிய மட்டக்களப்பு தொடக்கம் சிலாபம் வரை என்ற பயணக் கட்டுரையில் இந்தப் பகுதியில் வன்னிச்சியார் என்ற ராணி ஆட்சி செய்த அரண்மனை இருந்ததாகக் கூறியுள்ளதுடன் இவை அனுராதபுர - பொலநறுவை இராசதானிகளின் எச்சங்களாக இருக்கலாம் என்று சிங்கள ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (6)

15.விற்பனை வில்லயில் 20% சதவித இலாபம் பெற அலகொன்றை விற்க வேண்டிய விலை
1.ரூபா 700 2. ரூபா 840 3.ரூபா 475 4.ரூபா 875 5.ரூபா 340

6.எவ்வித உடன்படிக்கையுமின்றி நடாத்தும் கபில விஜய பங்குடமையின் முடிவுற்ற ஆண்டிற்கான பங்காளர் நடைமுறை கணக்கு வருமாறு,

பங்காளர் நடைமுறைக்கணக்கு

| விபரம் | கபில | விஜய | விபரம் | கபில | விஜய |
|---|---|---|---|---|---|
| மீதிவந்தது | | 30000 | மீதி வந்தது | 20000 | - |
| எடுப்பனவுகள் | 45000 | 28000 | மூலதன வட்டி | 68000 | 72000 |
| நடைமுறைக் கணக்கு வட்டி | | 6000 | பங்காளர் சம்பளம் | | 120000 |
| மீதி/சென்றது | 73000 | 158000 | இலாபம் | 30000 | 30000 |
| | 118000 | 222000 | | | |
| | | | மீதி வந்தது | 118000 | 222000 |
| | | | | 73000 | 158000 |

நடப்பாண்டுக்கான பகிர்வுக்கு முற்பட்ட இலாபமாக அமைவது,
1. ரூபா 241000
2. ரூபா 300000
3.ரூபா 314000
4.ரூபா 304000
5.ரூபா 231000

17. பங்குடமை சட்டத்திற்கமைய மேற்கொண்டிருக்க வேண்டிய இலாப பகிர்வுக்கு மேற்கொள்ள வேண்டிய இறுதி சீராக்கப்பதிவாக அமைவது, நாட்குறிப்பு பதிவாக அமைவது,
1.பங்காளர் நடைமுறை கணக்கு-கபில வரவு ரூபா59000,விஜயவரவு 59000
2.பங்காளர் நடைமுறை கணக்கு-கபில வரவு ரூபா59000,விஜய செலவு 59000
3.பங்காளர் நடைமுறை கணக்கு-கபில செலவு ரூபா59000,விஜயவரவு 59000
4.பங்காளர் நடைமுறை கணக்கு-கபில செலவு ரூபா 54000,விஜயவரவு 54000
5.பங்காளர் நடைமுறை கணக்கு-கபில செலவு ரூபா 120000,விஜய வரவு120000

18.பொதுபேரேட்டில் கட்டுப்பாட்டு கணக்கினை பராமரிக்கும் ஸ்தாபனத்தில் ஏடுகளில் பின்வரும் தவறுகளில் திருத்தத்திற்குட்படாதவை,
1.விற்பனை தினசேரியின் கூட்டல் தவறு
2.வாடிக்கையாளர் தர்ஷனின் கணக்கில் இடம்பெற்ற கூட்டல் தவறு
3.கொடுக்கல் வாங்கலொன்று முழுமையாக ஏடுகளில் விடுபடல்
4.பரீட்சை நிலுவைக்கு மாற்றப்படாத தளபாட கணக்கு
5.மூலதன கணக்கில் பதியவேண்டிய ஒன்று விற்பனை வருமான கணக்கில் பிரதிபலித்தல்

19.கணக்காய்வின் போது பின்வரும் திருத்தப்பதிவு மேற்கொள்ளப்பட்டது.
அலுவலக சம்பளமும் கூலியும் கணக்கு-வரவு
வாடிக்கையாளர் நாதன் கணக்கு-செலவு
இச் சீராக்க பதிவுக்கு ஏதுவாய் அமையும் காரணம்,
1. ஊழியருக்கு செலுத்திய சம்பளம் தவறுதலாக வாடிக்கையாளன் நாதன் கணக்கில் வரவு வைத்தமை
2. ஊழியருக்கு செலுத்திய சம்பளம் தவறுதலாக வாடிக்கையாளன் நாதன் கணக்கல், செலவு வைத்தமை
3.வாடிக்கையாளன் நாதன் கணக்கில் தவறுதலாக சம்பளதொகை செலவு வைக்கப்பட்டமை
4. சம்பளக்கணக்கிலும், வாடிக்கையாளன் நாதன் கணக்கிலும் கூட்டல் தவறும இடம்பெற்றிருத்தல்.
5.வாடிக்கையாளன் நாதன் கடனுக்கு பண்டங்கள் வாங்கியிருத்தல்.

20.நிலையான தவணைக்கட்டணமுறையில் தேய்விடப்பட்ட ஆதனமொன்று இலாப நட்டமின்றி குறித்த காலத்தின் பின் விற்கப்பட்டது. இவ் ஆதனம் தேறிய புத்தகபெறுமதியில் தேய்விடப்பட்டிருக்குமாயின் ஆதன முடிவுறுத்தலால்,
1.இலாபமோ அல்லது நட்டமோ ஏற்படாது
2.நட்டம் ஏற்பட்டிருக்கும்
3.இலாபம் ஏற்பட்டிருக்கும்
4.இலாபம் அல்லது நட்டம் ஏதேனும் ஒன்று கட்டாயம் ஏற்படலாம்
5.உறுதியாக எதனையும் கூறமுடியாது.

வினா இலக்க 21 தொடக்கம் 30 வரையாவற்றுக்கு சுருக்கமாக விடையளிக்க.

21. இலங்கை கணக்கீட்டு நியமம் 05ற்கிணங்க இருப்பு என்பதனை வரையறுத்து கூறுக.

22. இருப்பு தேறக்கூடிய நிகரபெறுமதியில் கணிப்பதற்கான சமன்பாட்டை தருக.

23.கணக்கீட்டின் பணக்கணியம் சாராத பணப்புச்சார் சிறப்பியல்புகள் நான்கினை குறிப்பிடுக.

24. இலங்கை கணக்கீட்டு நியமம் 18இற்கிணங்க ஆதனம், பொறி உபகரணம் என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.

25.இலங்கை கணக்கீட்டு நியமம் 18ற்கிணங்க ஆதனம் பொறி. உபகரணம் தொடர்பான வெளிப்படுத்தல்கள் இரண்டை குறிப்பிடுக.

26. பங்குடமையில் சஜீனா, பரீனா இலாபட்டங்களை 3/5: 2/5 என புகிர்வர் இப் பங்குடமையில் கரீமா 2/5 பங்கு இலாபநட்டத்துடன் சேர்க்கப்பட்டார். கரீமா தனது இலாபங்கினை சஜீனா, பரீனா ஆகியோரிடமிருந்து சமமாக பெறுவாராயின் புதிய இலாபநட்ட விகிதம் யாது.

27.பங்குடமையில் முரளி,வினய், குமார் இலாபநட்டங்களை 5: 3: 2 என பகிர் வர். குமார் ஓய்வு பெறுவதால் அவருக்கான நன்மதிப்பு தொகை ரூபா 60000 கடனாக பிரதிபலிப்பதென முரளி, வினய் முடிவுசெய்ததுடன் தத்தமது இலாபநட்டங்களை சமமாக பகிர முடிபு செய்தனர். நன்மதிப்புக்கான நாட்குறிப்பு பதிவை தருக.

28.பங்குடமையில் விக்டர், சலீம் சந்தோஷ்,லலித் இலாபநட்டங்களை 5:4:3:2 என பகிர்வர். சந்தோஷ் - ஆண்டு பங்கிலாபமாக ரூபா 68000ற்கு குறையாது பெறுவாரெனவும், லலித்-ஆண்டு பங்கு இலாபமாக ரூபா 50 ஆயிரத்திற்கும் குறையாது பெறுவார் எனவும் விக்டர்,சலீம் உத்தரவாதமளித்துள்ளனர். ஆண்டிறுதிபங்கிலாபம் ரூபா 280000 ஆயின், ஒவ்வொருவருக்குமான இறுதி இலாப பகிர்வு தொகையினை கணிக்க.

29.பங்குடமையில் ஒப்பந்தபிரகாரம் பங்காளர் பற்றுக்களுக்கு ஆண்டிற்கு 20%சதவீத வட்டி அறவிடப்படும். பங்காளர்கள் பின்வருமாறு பற்றுக்களை மேற்கொண்டிருந்தனர்.
அரவிந்தன்- ஒவ்வொரு மாத துவக்கத்திலும் மாதம் ரூபா 6000படி கணக்காண்டு முழுவதும்
மாலிக் -ஒவ்வொரு மாத நடுப்பகுதியிலும் மாதாந்தம் ரூபா 5000 படி கடைசி 06 மாதங்களுக்கு
தேவைப்படுவது
ஒவ்வொரு பங்காளருக்குமான பற்று வட்டியை கணிக்க
அரவிந்தன்:- ..............................................................................
மாலிக்:- ..............................................................................

30. பங்குடமையில் நடைமுறையல்லாத சொத்துக்கள் மீள விலைமதிப்பதன் முக்கியத்துவம் யாது?

**கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்பதம் கொண்டு நிரப்புக.**

31.பங்காளர் மூலதனவட்டியானது...........................................கணக்கில் வரவிலும், ......................................... கணக்கில் செலவிலும் பதியப்படும்.

32.சகல சீராக்கத்திற்கும் பின்னர் தொங்கல் கணக்கு வரவு நிலுவையை கொண்டிருக்குமாயின் ...................................................யில்..................................... பக்கம் பிரதிபலிக்கப்படும்.

33.மாற்றப்படாத காசோலை காரணமாக காசேட்டின் படி வங்கி நிலுவை.... .................................. வும், வசூலிக்கப்படாத காசோலை காரணமாக வங்கிக் கூற்றின் நிலுவை...........................................................காட்டும்.

34.செயற்திட்டத்திற்கென பெறப்படும் நன்கொடை செயற்றிட்டம் நிறைவேறும் வரை..........................................................பொறுப்பாகவும்,நிறைவேறிய பின்னர் சேர்க்கப்படும்.

35.ஆதனம், பொறி,உபகரணங்களின்............................................ அதிகமாயின் பெறுமானத் தேய்வு தொகை அதிகமாகவும்,.......................................... அதிகமாயின் பெறுமானத் தேய்வு தொகை குறைவாகவும் காணப்படும்.

**வினா இலக்கம் (36) தொடக்கம் (40) வரையான கூற்றுக்கள் சரியா அல்லது தவறா என குறிப்பிடுக.**

36.இருப்பு தொடர்பாக கிரயம் அல்லது தேறக்கூடிய நிகரபெறுமதியில் எது குறைவோ அதனையே நிறுவன இருப்பாக பிரதிபலித்தல் வேண்டுமென பொருண்மை எண்ணக்கரு குறிப்பிடுகின்றது. ( )

37.பங்குடமை சட்டத்தில் 1890ஆம் ஆண்டு 24ஆம் பிரிவின் படி ஓய்வு பெறும பங்காளருக்கு செலுத்தவேண்டிய தொகை செலுத்தி தீர்க்கும் வரை ஆண்டுக்கு 5% சதவீத வட்டியில் கடனாக பிரதிபலிக்கப்படும். ( )

38.பங்காளர் சேரல் அல்லது விலகல் இடம்பெறுகையில் எப்பொழுதும் நன்மதிப்பு ஏடுகளில் பதியப்படும் ( )

39. இலங்கை கணக்கீட்டு நியமம் 03 ற்கிணங்க சொத்து எதிர்கால பொரு ளாதார நலன்களை பெற்றுத் தருவதும், சட்டத்தின் பிரகாரம் நிறுவனத் திற்கு சொந்தமானதாகும். ( )

40.சங்கமொன்றின் சந்தாவருமானம் தொடர்பாக அட்டுறு அடிப்படையிலான கணக்கு வைப்புமுறையிலும் பார்க்க காசு அடிப்படையில் கணக்கு வைத்தலே பொருத்தமானதாகும். ( )

# எதற்கும் விலை போகாத தலைவர் அமிர்தலிங்கம்

அமிர்தலிங்கம் அவர்கள் 1927 ஆம் ஆண்டு ஆவணிமாதம் 26 ஆம் திகதி வட்டுக் கோட்டைத் தொகுதியிலுள்ள பண்ணாகத்திற் பிறந்தவர். 1945 ஆம் ஆண்டிலே இலங்கைப் பல்கலைக் கழகம் புகுந்து பி.ஏ பட்டம் பெற்று இப்பரீட்சையில் முதல் வகுப்பில் சித்தி பெற்றார். பின்னர் 1951 இல் வழக் கறிஞருக்கான சட்டப்படிப்பிலும் முதல் வகுப்பில் சித்தியடைந்து சட்ட அறிஞரானார். அப்போது தான் நமது பல்கலைக்கழகங்களை 'மாக்சிச' சித்தாந்தங்கள் ஆக்கிரமித்த காலம். இளம் அமிர்தலிங்கம் இவற்றைத் தமது கற்கை நெறியோடு கற்றது மட்டுமன்றி இவை பற்றி அக்காலத்திற் புகழ்பெற்ற மாக்சிசத் தலைவர் களிடமும் பாடம் கற்றார்.



எனினும் பல்கலைக்கழகத்தில் தமது தமிழ் ஆர்வத்தால் தமிழ்ச் சங்கத்தை நிறுவி அதன் முதல் தலை வராக விளங்கிய இவரைத் தமிழ் ணர்வு தான் கவர்ந்தது. தமிழ் மக்களின் விடிவுக்காக 1949 இல் தந்தை செல் வாவினால் உருவாக்கப்பட்ட தமிழர சுக்கட்சியில் மிக இளமைக்காலத் தில் இணைந்துகொண்டார். மாறாக அன்று அவர் சட்டத்துறையில் மட்டும் கவனஞ் செலுத்தியிருந்தால் முது பெரும் வழக்கறிஞராக ஒரு கோடீஸ் வரனாக வாழ்ந்திருப்பார்.

நமது தலைவர்கள் எல்லாம் தத்தம் துறைகளில் ஈடுபட்டுத் தமது வாழ் வுக்கென நல்ல பொருளாதாரப் பின்னணிகளை உருவாக்கிய பின்னர் தான் அரசியலில் நுழைந்தவர்கள். ஆனால் தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் இதற்கு விதிவிலக்காக அமைந்தவர். மாணவனாகச், சட்டக் கல்லூரியிலிருந்து வெளியேறியதும் தந்தையின் இயக்கத்தில் இணைந் ததால் தமது அரசியல் வாழ்வுக்கு ஏற்றவாறு ஒரு பொருளாதாரப் பின்னணியை இவரால் உருவாக்க முடியவில்லை. இருந்தும், அவர் ஒரு தூய்மையானவர். எத்தகைய ஊழல் குற்றச்சாட்டுகளுக்கும் அப்பாற்பட்டவர். தலைவன் என்பவனின் வாழ்க்கை, அவனின் நடத்தை தொண்டர்களுக்கு முன்மாதிரியாக இருக்கும்படி வாழ்ந் தவர்.

தம்மை மட்டுமன்றித் தம் குடும்பத் தையே இன விடுதலைக்காக அர்ப் பணித்தவர். இவரது தியாகத்தினா லும் அப்பழுக்கற்ற தலைமையி னாலும், வாழ்க்கையினாலும் தலைமை அவரையே தேடி வந்தது. மக்களின் கருத்துக்கு மதிப்பளித்து அவர்களின் பணியே தம்பணி எனக் கொண்டு செயற்பட்ட இவரை மக்கள் தமது தலைவர் எனச்சொல்லிப் பெரு மைப்பட்டனர். பூரிப்படைந்தனர், கொண்டாடினர். இதய சுத்தியுடன் உடல், பொருள், ஆவி அத்தனையையும் தமிழின் விடுத லைப்போர் என்ற வேள்வித் தீக்கு ஆகுதி ஆக்கிய தலைவர் அமிர்த லிங்கம் போன்றோரின் வாழ்க்கையை நினைக்கும் போது மெய்சிலிர்க்கிறது.

பெருமை அமிர்தலிங்கம் அவர்களுக் குத்தான் உண்டு. இத்தகைய எதிர் பார்ப்புத் தந்தை செல்வாவுக்கு இருந் ததை 1951 இல் திருகோணமலையில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் முதலாவது தேசிய மகாநாட்டில் அவர் ஆற்றிய பின்வரும் உரை காட்டி நிற்கின்றது.

## அமிரின் நினைவுதினம் நாளை

**உரிமைப் போரில் தந்தையும் தனயர்களும்**

தந்தை செல்வாவின் தீர்க்க தரிசனத்துடன் தமிழர் தேசியம், தாயகம், சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாடுகளுடன் இலங்கைத் தமிழரசுக்கட்சி இயக்கம் இதன் ஆரம்பகாலத்தில் (அகில இலங்கைத் தமிழ் காங்கிரசிலிருந்து பிரிந்து செயற்பட்ட தால்) பல்வேறு சவால்களை எதிர்நோக்க வேண்டி யிருந்தது. தந்தையின் சிந்தனைகள் வட கிழக்கு மாகாணங் களில் பட்டி தொட்டிகளிலும், பட்டி னங்களிலும் எதிரொ லிக்கத் தொடங்கின. கருத்துக்குக் கருத் தல்ல, கல்மாரியும் கிடைத்தது. பல இடங் களில் தமிழினம் செல்ல வேண்டிய பாதை கல் லும் முள்ளும் நிறைந்து காணப் பட்டது. ஆயினும் பல்வேறு சவால்கள் மத்தியிலும் சளைக்காது தந்தையும், தனயர்களும், தொண்டர் களும் தமது பணிகளில் ஈடுபட்டனர். எனினும் அக்காலப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இன்று அரசாங்கத் தால் அளிக்கப்படும் வாகனச் சலுகை யோ அன்றிப் பிற சலுகைகளோ இருக்க வில்லை. இதனால் பலர் பொருளாதார ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டாலும் துணிந்து தந்தையோடு துணைநின்று போராடிய இவர்களை என்றென்றும் நன்றியுடன் நினைவு கூருவது நமது கடமையாகின்றது.

**இளைஞர்களும் இணைந்தனர்**

1950 களில் தலைவர் அமிர்த லிங்கம் உருவாக்கிய தமிழரசுக் கட்சி வாலிப முன்னணி நாளடைவில் வலுப்பெற்ற முன்னணியாக வளர்ச்சி கண்டதோடு 1970 களில் உருவாகிய தமிழ் இளைஞர் பேரவைக்கும் முன்னோடியாகத் திகழ்ந்தது. மூத்த பரம்பரையுடன் இணைந்து செயலாற் றிப் பின்னர் அவர்களிடமிருந்து தலை மைப் பொறுப்பை ஏற்று இளைஞர் பரம்பரையினரையும் இதில் இணைத்த

“இவ்வியக்கத்தில் பணிபுரியும் ஊழியர்களாகிய நாம் நம் தலை முறையிலேயே நமது கோரிக்கை கைகூடுமென்று விசுவாசிக்கின்றோம். எம் தலைமுறையிற் கைகூடாவிடினும் நாம் இப்போரை நடாத்தி எமக்குப் பின்வரும் சந்ததியினரின் கையிற் கொடுப்பது நமது கடன். எம் பின்னே அரும்பெரும் வீரர்களை எம்மினம் பெறக் கூடும். குறைந்த பட்சத்தில் அவர் களுக்கு அணிவகுப்பவர்களாகவாயி னும் இருப்போமாக”

தலைவர் அமிர்தலிங்கத்தின் மேடைப் பேச்சுத் தனிரகமானது. உண்மையிலே 'நாவலராகிய' இவரின் பேச்சில் தமிழ் விளையாடியது. தமிழில் மட்டுமல்ல ஆங்கிலத்திலும் சிறப் பாகப் பேசும் ஆற்றல் படைத்த தலை வரும் இவர்தான். இவரது கட்டுப் பாடான வாழ்க்கை, நாவன்மை, அஞ் சாமை, உள்ளத்தூய்மை ஆகியவற் றுடன் இவரது வாழ்க்கைத்துணையாக அமைந்த மங்கையர்க்கரசியின் உணர்ச்சி மிக்க தமிழ்த் தேசிய கீதங் களும் வடகிழக்கு மாகாணங்கள் எங்கணும் ஒலிக்க மூத்தோரும் இளை ஞரும் இயக்கத்தில் இணைந்தனர்.

**முன்னணியில் தமிழரசுக் கட்சி**

தந்தையினதும் அவருடன் இணைந்த தலைவர்களதும் அர்ப்ப ணிப்பான செயற்பாட்டால் 1956 ஆம் ஆண்டு முதல் வட கிழக்கு மாகாணங் களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முதன்மைக் கட்சியாகத் தமிழரசுக் கட்சி முதல் நிலை பெற்றது. இத னால் தமிழர் பிரச்சினை தொடர்பாகப் பேசுவதற்குரிய உரிமை இவர்க ளுக்குக் கிடைத்தது.

இதனால் விரும்பியோ விரும்பா மலோ மாறி மாறி வந்த அரசுகள் தமிழரசுக்கட்சியுடன் உடன்பாட்டுக்கு வருவது தவிர்க்க முடியாத நிகழ் வாயிற்று. இப் பின்னணியிற்றான் 1957 இல் பண்டா-செல்வா ஒப்பந்தமும், 1965 இல் டட்லி-செல்வா ஒப்பந்தமும் உருவாகின. இவ்வொப்பந்தங்களை அன்றைய அரசுகள் அமுல் நடத்தா விட்டாலும் தமிழர் பக்கக் கோரிக் கையின் அம்சங்கள் பலவற்றை உள் ளடக்கி இவை காணப்பட்டதுமன்றிப் பின்வந்த ஒப்பந்தங்களுக்கும் முன்


*'அமிரும்' எஸ்.ஜே.வியும்*

*மிகவும் கண்டிப்பாக மனித உரிமைகளையும், ஜனநாயகப் பாரம்பரியத்தையும் பேணிக்காத்த தந்தை செல்வா அவர்கள் அமிர்தலிங்கத்தையோ அன்றி வேறு எவரையோ தமது வாரிசாகச் சிபார்சு செய்யவில்லை. அன்று (1974) அமிர்தலிங்கம் பற்றிக் கூறிய கருத்து இதுதான்.*

*“தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்று இப்போது அதைக்கொண்டு நடத்தும் அமிர்தலிங்கத்திடம் நான் காணும் முக்கிய சிறப்பியல்பு அவருடைய அஞ்சாமையாகும். மிகப்பலம் வாய்ந்த எமது எதிரியாக இலங்கை அரசாங்கத்தை எதிர்த்து நாம் போராடுவதற்கு அஞ்சா நெஞ்சம் படைத்தவர்களே வேண்டும்.*

*அமிர்தலிங்கத்திடம் பல சிறப்பியல்புகள் இருக்கின்றன. தமிழிலும் ஆங்கிலத்திலும் அவர் திறமையாகப் பேசும் ஆற்றல் படைத்தவர். தலைவன் ஒருவனுக்கு வேண்டிய குணங்கள் அவரிடம் உண்டு. ஈழத்தமிழ் மக்களின் விடுதலைக்குப் போராடுவதற்கு அவருக்குப் போதிய காலம் இருக்கின்றது. வயதைப் பொறுத்த வரையில் அவரை ஒரு இளைஞர் என்று தான் சொல்ல வேண்டும்.”*

*(சுதந்திரன் 22.12.1974)*



னோடியாக அமைந்ததோடு தமிழர் பக்க நியாயங்களையும் பிரதிபலிப் பனவாகவும் இவை அமைந்தன.

ஒற்றுமையின் அடிப்படையில் தமிழ்க் காங்கிரசுடன் உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமாகத் தலைவர் அமிர்தலிங்கம் திகழ்ந்ததோடு, பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் இவரைச் சென்றடைந்தது. அப்போது தமிழர் பிரச்சினை சம்பந்தமாக இவர் ஆற்றிய உரைகள் அரசினால் கொண்டு வரப்பட்ட மசோதாக்கள் மீது இவர் ஆற்றிய உரைகள் இவரை ஒரு முதிர்ச்சியான அரசியல்வாதியாக உயர்த்தி விட்டது.

பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்
(சிரேஷ்ட துணைத்தலைவர், இலங்கைத் தமிழரசுக்கட்சி)

1983 இல் ஏற்பட்ட இனக் கல வரமும், தமிழர் விடுதலைக்கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினரது பாராளு மன்றப்பதவி புதிதாக ஜே.ஆர். ஜெய வர்த்தனவினால் உருவாக்கப்பட்ட தனிநாட்டுக் கொள்கைக்கெதிரான சட்ட மூலத்தின் மூலம் பறிபோனது. இக்காலத்தில் இந்தியாவுடன் நெருங்கி உறவாட வேண்டிய கட்டாயமிருந்தது. மாறுவேடத்தில் இலங்கையை விட்டு டெல்கி சென்ற தலைவர் அமிர்தலிங் கத்தினதும் அன்றைய இந்தியப் பிரதமரான இந்திராகாந்தியினதும் சந்திப்பு தமிழர் பிரச்சினையில் ஒரு திருப்புமுனையாகின்றது. இரண்டே இரண்டு மணித்தியாலங்களில் ஈழத் தமிழர் பிரச்சினையையும் அவலங் களையும் 'அமிர்' தமது ஆங்கிலப் புலமையினால் இந்தியப்பிரதமருக்கு விளக்கியபோது அவர் இவரது திறமை யால் பெரிதும் கவரப்பட்டார். தமிழ் நாட்டவரோடு மட்டும் பேசிப் பழகிய அம்மையாருக்கு ஈழத்திலும் இப்படிப் பட்ட தலைவர் ஒருவர் இருப்பதைக் கண்டு பிரமித்ததோடு அடுத்த நாள் டெல் கியில் நடைபெற இருந்த இந்தியக் குடியரசு தின விழாவுக்கு வருகை தந்த ரஷ்யத் துணை ஜனாதிபதி போன்ற பிரமுகர்களுக்கும் 'அமிர்' அறிமுகஞ்செய்து வைக்கப்பட்டார். இக்காலங்களில் தமிழகத்திலும் இந்தியாவிலும் உள்ள முக்கிய அரசியற்கட்சித் தலைவர்களைச் சந்தித்து எமது பிரச்னை பற்றி விளக் கியதன் மூலம் இந்தியாவை எமது பிரச்சினையில் அக்கறை கொள்ள வைத்தார். அதுமட்டுமன்றி வெளிநாடு களுக்கும் சென்று எமது பிரச்சினை யை உலகின் கவனத்துக்குக் கொண்டு வந்த பெருமையும் 'அமிருக்கு' உண்டு. (தொடரும்)

3. காணியினை கொள்வனவு செய்வது தொடர்பாக கணக்காண்டின் துவக்கத்தில் 12% சதவீத வங்கிகடன் ரூபா 500000 பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் கணக்காண்டின் இறுதியில் ரூபா 110000 கடன் தவணைக்கட்டணம் செலுத்தப் பட்டிருந்தது. இத்தொகை கடனுக்குரிய ஒரு முழுவருட வட்டியினையும் கடனின் உரு பகுதியினை திருப்பிச் செலுத்துவதற்கு உரியதாகும்.

4.2009 நவம்பர் 01 இல் 04கு மாத தவணையிட்டு விற்க அல்லது திருப்புக எனு மடிப்படையில் ரூபா 80000 கிரயமுடைய பண்டங்கள் பட்டியல் விலையில 12%. சதவீத இலாபம் சேர்த்து பட்டியலிட்டு அனுப்பியிருந்தது. முழுவதும் விற்பனையாகியிருக்கவில்லை.

தேவைப்படுவது

2009 ஜனவரி 01 இல் உள்ளபடி நிதிநிலமை கூற்று
(03 புள்ளிகள்)

2009 டிசம்பர் 31 இல் உள்ளபடி நிதிநிலமை கூற்று
(05 புள்ளிகள்)

2009 டிசம்பர் 31 இல் உழைத்த தேறிய இலாபத்தை கணிக்கும் கூற்று
(02 புள்ளிகள்)
(10 புள்ளிகள்)

06.விஜய் ரசிகர் மன்ற கொழும்பு கிளையின் 2009 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டிற்கான பெறுவனவு கொடுப்பனவு கணக்கின் பொழிப்பு வருமாறு பெறுவனவு கொடுப்பனவு கணக்கு

| விபரம் | தொகை | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 2009.01.01 இல்காசுமீதி | 25000 | மதுபான வழங்குனரிட்கு செலுத்தியது | 1068000 |
| பெற்ற உறுப்புரிமை கட்டணம் | 168000 | மதுசாலை வாடகை | 80000 |
| பெற்ற நன்கொடைகள் | 300000 | மின்கட்டணம் | 75000 |
| மதுபான விற்பனை | 1578000 | பத்திரிகை கொள்வனவு | 65000 |
| | | மதுசாலை ஊழியர் சம்பளம் | 100000 |
| | | விளையாட்டு உபகரணம் | 175000 |
| | | ஒன்றுகூடல் வைபவச்செலவு | 138000 |
| | | விளையாட்டு பயிற்றுவிப்பு | 540000 |
| | | நடன இரவு | 200000 |
| | | பிறகழக செலவு | 60000 |
| | | | 56000 |
| | 2071000 | 2009.12.31இல் காசுமீதி | 2071000 |

மேலதிக தகவல்

1. பெற்ற உறுப்புரிமை கட்டணத்தில் 12 உறுப்பினர்களுக்குரிய 2008ஆம் ஆண்டு கட்டணமும், 06 உறுப்பினர்களின் 2010 ஆம் ஆண்டுக்குரிய கட்ட ணமும் அடங்கும் கழகத்தில் 2009ஆம் ஆண்டில் 96 உறுப்பினர்கள் அங்கத்துவம் பெற்று ருந்தனர். அங்கத்தவர் ஒருவருக்கான ஆண்டுச் சந்தா ரூபா 20000 ஆகும்.

2. பெற்ற நன்கொடையில் ரூபா 250000 கழகத்திற்கான நடன மணிமண்டபம் அமைப்பதற்கானது

3. மின்கட்டணத்தில் 1/3 பங்கு கழகத்திற்குரியது.

4.2009 01.01.இலும்,2009.12.31. இலும் கழகத்தின் சொத்துக்களும், பரிப்புக்களும் வருமாறு?

| விபரம் | | 2009.01.01. | 2009.12.31 |
|---|---|---|---|
| கழக விளையாட்டு உபகரணங்கள் (தேறியது) | | 200000 | 325000 |
| மதுபான வழங்குனர்கள் | | 368000 | 425000 |
| மதுபான கையிருப்பு | | 355000 | 381000 |
| வருமதி அங்கத்துவ கட்டணம் | -2008 | 30000 | ? |
| | 2009 | - | ? |
| முற்பணமாக பெற்ற அங்கத்துவக்கட்டணம் | -2009 | 10000 | - |
| | -2010 | - | 12000 |

தேவப்படுவது

1:2009ஆம் ஆண்டுக்கான பின்வரும் அங்கத்துவ கட்டணகணக்கு
-முற்பணமாக பெற்ற அங்கத்துவ கட்டண கணக்கு (2009,210)
-வருமதி அங்கத்துவ கட்டணகணக்கு (2008,2009)
-பெற்ற அங்கத்துவ கட்டண கணக்கு
2.2009.12.31 முடிவுற்ற ஆண்டிற்கான மதுபான வியாபார இலாபநட்ட கணக்கு
3.2009.12.31.இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமான செலவு கணக்கு
(10 புள்ளிகள்)

# கணக்கீடு II-I

## 01 மணித்தியாலங்கள்

சலக வினாக்களுக்கும் வினாத்தாளிலேயே விடை தருக.

01. பின்வருவனவற்றுள் ஐந்தொகை தினத்திற்கு பிந்திய நிகழ்வுகளுள் நிதியறிக் கையில் சீராக்கப்படும் நிகழ்வுகளுள் ஒன்றாக கருதப்படுவது?
1.முதலீடுகளின் சந்தைப் பெறுமதிகளிலேற்படும் வீழ்ச்சி.
2.உரிமை பங்குதாரர்களான சாதாரணபங்குதாரருக்கு இயக்குனர் சபையினால் பிரே ரிக்கப்படும் இறுதிப் பங்கிலாபம்.
3.அரசினால் அறிமுகப்படுத்தப்படும் புதியவரிக் கொள்கை
4.ஐந்தொகை தினத்தில் கடன்பட்டோர் ஒருவர் வகையற்றவராதல்
5.புதிய சொத்துக்கள் மீதான மூலதன செலவினங்கள்

02. இலங்கைக் கணக்கீட்டு நியமம் 18 இற்கிணங்க மீளவிலைமதித்தல் தொடர் பான கூற்றுக்களில் தவறானது
1.மீளவிலைமதித்தல் மிகை உரிமை மூலதன அசைவுக் கூற்றில் ஒதுக்கமாக பிரதிபலிக்கப்படும்
2.மீளவிலைமதித்தல் நட்டம் வருமானக் கூற்றுக்கு தாக்கல் செய்யப்படும்
3.மீள விலைமதித்தல் இலாபமோ அல்லது நட்டமோ எதுவாகிலும் வருமானக் கூற்றுக்கு எதிராக தாக்கல் செய்யப்படும்.
4.மீளவிலை மதித்தல் நட்டம் துவக்க மீளவிலை மதித்தல் ஒதுக்கத்தில் கழிக்கப்படும்
5.மீளவிலைமதித்தல் மிகை துவக்க மீளவிலைமதித்தல் ஒதுக்கத்துடன் சேர்க்கப்படும்.

03. பொதுக்கம்பனிகள் பங்கு வழங்களிற்கான ஒரு பிரதிபலானக ஏற்றுக் கொள்ளாத ஒன்றாக அமைவது,
1.காசும் காசோலைகளும்
2.வாக்குறுதிப்பத்திரம்
3.நடைமுறையல்லாத ஆதனங்கள்
4.எதிர்கால சேவைகள்
5.நீண்டகால பொறுப்புகள்

04.பின்வருவனவற்றுள் காசு உட்பாய்ச்சல் நடவடிக்கையொன்றாக கருதப்படு வது
1.கையிருப்பு குறைவு, கடன்படுனர் அதிகரிப்பு, ஐயக்கடன் எற்பாட்டுமிகை
2.கையிருப்புக், குறைவு, கடன்கொடுனர் அதிகரிப்பு, முற்பணக் கொடுப்பன விலான குறைவு.
3.கையிருப்புக் குறைவு , கடன்படுனர் அதிகரிப்பு, கடன்கொடுனர் குறைவு
4.பெறுமானத்தேய்வு,ஆதனமுடிவுறுத்தல் இலாபம், மிகை ஐயக்கடன் ஏற்பாடு
5.குறை ஐயக்கடன் ஏற்பாடு, பெறுமானத் தேய்வு, ஆதன முடிவுறுத்தல் இலாபம்.

05. சுரேகா கம்பனி 2009 ஏப்ரல் 01இலும் 2010 மார்ச் 31 இலும் நடை முறையல்லா ஆதன விபரம் வருமாறு,

| | 2009.04.01 | 2009.03.31 |
|---|---|---|
| நடைமுறையல்லா ஆதனம் (கிரயம்)ரூபா | 7800,000 | 8100,000 |
| ஆதன திரண்ட தேய்வு | 3080,000 | ? |

2010 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான தரவுகள்.
கணக்காண்டில் ரூபா 40,000 நட்டத்தில் விற்பனை செய்யப்பட்டது. புதிய ஆதனம் காசுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.நடப்பாண்டுக்குத் தாக்கல் செய்த பெறுமானத் தேய்வுத் தொகை ரூபா 740,00 மூதலீட்டு நடவடிக்கை யால் தேறிய காசு?

1. ரூபா 1.1 மில்லியன் காசு உட்பாய்ச்சல்
2.ரூபா 1.3. மில்லியன் காசு உட்பாய்ச்சல்
3.ரூபா 1.2மில்லியன் காசு உட்பாய்ச்சல்
4.ரூபா 1.2.மில்லியன் காசு உட்பாய்ச்சல்
5.ரூபா 1.1. மில்லியன் காசு வெளிப்பாய்ச்சல்

06.2009 மார்ச் 31 இல் இறுதி இருப்பினை அதிகமாக பெறுமதியிடலானது 2008/.09, 2009/10 ஆண்டுக்ளுக்கான தேறிய இலாபத்தில் ஏற்படுத்தும் தாக்க மானது,

| 2008 / 09 | 2009 / 10 |
|---|---|
| 1.குறைக்கும் | குறைக்கும் |
| 2.அதிகரிக்கும் | குறைக்கும் |
| 3.அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 4.குறைக்கும் | அதிகாரிக்கும் |
| 5.அதிகரிக்கும் | மாற்றமில்லை. |

07. பின்வருவனவற்றுள் மொத்த இலாபவீத வீழ்ச்சிக்கு காரணமென குறிப்பிட முடியாத ஒன்று
1. இறுதி கையிருப்பின் பெறுமதி குறைவாக மதிப்பிடுதல்
2.இறுதியிருப்பின் பெறுமதி அதிகமாக மதிப்பிடுதல்
3.இலாப எல்லையில் ஏற்படும் வீழ்ச்சி
4.விற்பனை விலையில் ஏற்படும் வீழ்ச்சி
5.கொள்வனவுக்கான நேரடிச் செலவினங்கள் அதிகரிக்கும்

**வினா இலக்கம் 08,09 என்பவற்றுக்கு விடையளிக்க கீழ்வரும் தரவுகளைப் பயன்படுத்துக.**

கம்பனியொன்றின் குறித்த கணக்காண்டு தொடர்பான தரவுகள்
சாதாரண பங்குகளின் எண்ணிக்கை 200,000 பங்குகள்
15 வீத அடகுக்கடன் ரூபா 1.5 மில்லியன்
வட்டிக் காப்பு விகிதம் 08மடங்கு
நடப்பாண்டுக்கான வருமானவரி ரூபா 175,000
பங்கொன்றின் விலை உழைப்பு விகிதம் 05 மடங்கு

08. நடப்பாண்டுக்கான தேறிய இலாபம் (வரிக்குமுன், வரிக்குப்பின்) பங்கொன்றுக்கான உழைப்பு விகிதமாக அமைவது,

| தேறியலாபம் | | பங்கொன்றுக்கான உழைப்பும் விகிதம் |
|---|---|---|
| வரிக்கு முன் | வரிக்குப்பின் | |
| ரூபா 2025,0000 | ரூபா 1850,000 | ரூபா 9.25 |
| ரூபா 1800,0000 | ரூபா 1625000 | ரூபா 0.13 |
| ரூபா1575000 | ரூபா 1400,000 | ரூபா7 |
| ரூபா 1575,000 | ரூபா 1750,000 | ரூபா 8.75 |
| ரூபா 1525,000 | ரூபா 1350,000 | ரூபா 6.75 |

09.பங்கொன்றின் சந்தை விலையாக அமைவது,
1.ரூ 43.75 2.ரூபா 35 3.ரூபா. 56 . ரூபா 42
5.ரூபா 46.25

(தொடரும்)


# தனியார்துறை ஊக்குவிப்புக்கு ஒபாமா அரசாங்கம் முன்னுரிமை

(வோஷிங்டன்)

பொருளாதாரத்தை சரிவிலிருந்து மீட்கவும் தனியார் துறைவளர்ச்சிக்கும் தனது அரசு நடவடிக்கைகள் எடுத்து வருவதாக அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா கூறினார்.

ஒபாமா, தனியார் தொழில்களுக்கு எதிராகச் செயல்படுகிறார் என்ற குற்றச்சாட்டு இருந்தது. அதை முற்றிலுமாக மறுத்துள்ள ஒபாமா, தனது அரசின் கொள்கைகளால் பொருளாதார மீட்சி ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார். அத்துடன் தனியார் துறைகளும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எட்டியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தனியார் நிறுவனங்களின் பங்களிப்பு கணிசமாகவுள்ளது. பொருளாதார சரிவில் சிரமப்படும் தனியார் நிறுவனங்களை மீட்க தனது அரசு சிறப்பு செயல் திட்டங்களை உருவாக்கி வருவதாகவும் அமெரிக்காவின் பொருளாதார வெற்றியில் தனியார் துறைக்கு முக்கிய பங்கு உண்டு. தனியார் மயம் தான் அமெரிக்காவின் மிகப் பெரிய சொத்து. இந்நிலையில் தனியார் துறைக்கு எதிராக அரசு ஒருபோதும் செயல்படாது என்றும் அவர் தெரிவித்தார்.



மேலும் ஓராண்டுக்கு முன்பிருந்த சூழ்நிலை தற்போது முற்றிலுமாக மாறியுள்ளது. கடினமான நடவடிக்கைகள் பொருளாதார மீட்சிக்காக எடுக்கப்பட்டன. அது தற்போது மாறிபொருளாதாரம் வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளது. தனியார் துறையில் வேலை வாய்ப்புகள் கடந்த 6 மாதங்களில் உருவாகத் தொடங்கியுள்ளன.

மிகவும் கடினமான சூழலில் அரசு தலையிட்டு அதை சரிசெய்வதுதான் ஒரு அரசின் கடமை. அதைத்தான் தனது நிர்வாகம் மேற்கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டார். (6-4)



ஜப்பானில் நடைபெறவிருக்கும் தேர்தலுக்காக டோக்கியோ நகரில் அந்நாட்டுப் பிரதமர் நவோடோ கான் (வலது) மற்றும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் டோஸ்ஹியோ ஒகாவா ஆகியோர் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

# பாகிஸ்தானில் மனித வெடிகுண்டு தாக்குதல்; பலியானோர் எண்ணிக்கை 104 ஆக உயர்வு

(பெஷாவர்)

பாகிஸ்தானில் வடமேற்கு எல்லைப்புற மாநிலத்தில் பழங்குடி இன மக்கள் வசிக்கும் பகுதியில் உள்ள மொகமந்த் என்ற இடத்தில் உள்ள அரசாங்க அலுவலகத்தில் தீவிரவாத நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

இந்த உதவிகளை பெறுவதற்காக 100க்கும் மேற்பட்டவர்கள் அங்கு கூடியிருந் தனர்.

அப்போது தற்கொலை தீவிரவாதி ஒருவர் மோட்டார் சைக்கிளில் அங்கு வந்தார். அவர் தன் உடலில் கட்டி இருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தார். இதில் 56 பேர் அந்த இடத்திலேயே பலியாகியதுடன் 70க்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்தனர்.

அவர்கள் சிகிச்சைக்காக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

நேற்றுமுன்தினம் இறந்தவர்களின் எண்ணிக்கை 104 ஆக உயர்ந்தது. பலியானவர்களில் 5பேர் சிறுவர்கள் எனவும் அவர்கள் 5முதல் 10வயதுக்கு உட்பட்டவர்களாவர் .பல பெண்களும் பலியானார்கள்.

இந்தத் தாக்குதலுக்கு பாகிஸ்தான் தலிபான் பொறுப்பு ஏற்றுக்கொண்டு உள்ளது. தலிபான்களுக்கு எதிராகச் செயல்படும் பழங்குடி இன முதியவர்களை குறிவைத்து தான் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக பாகிஸ்தான் தலிபான் செய்தி தொடர்பாளர் இக்ரமுல்லா முகமது தெரிவித்தார்.

அவர்மேலும்கூறுகையில், பல்வேறுஅமைதி குழுக்களை சேர்ந்த பழங்குடி இன முதியோர் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிக்கு வந்து இருந்தார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (6)

# சீனாவில் வெள்ளப் பெருக்கு; 50க்கும் மேற்பட்டோர் பலி



தெற்கு மற்றும் மத்திய சீனா பகுதிகளில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கன மழையால் நதிகளில் வெள்ளப் பெருக்கும், பல இடங்களில் நிலச்சரிவும், மண் அரிப்பும் ஏற்பட்டுள்ளது. இந்த மழை வெள்ளத்தில் சிக்கி இது வரை 50க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் 15பேரை தேடும் பணி நடைபெற்று வருகிறது.ஜுலை 1 ஆம்திகதி முதல் 10 ஆம்திகதி வரை சுமார் 17.2 மில்லியன் மக்கள் வீடுகளை இழந்து தவித்து வருகின்றனர். 5இலட்சத்து 97 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என சீன பாதுகாப்புத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சுமார் 9 இலட்சத்து 46 ஆயிரத்து 500 ஹெக்டேயர் விளை நிலங்கள் இந்த மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. ஜுன் மாதம் பெய்த மழைக்கு 260 பேர் பலியாகி உள்ளது குறிப்பிடத்தக்கது. (6-4)




# செல்ல நாய்க்குட்டிகளுக்கு ஆடம்பர வீடு



அமெரிக்காவில் வசிக்கின்ற ரம்மி கஸ்ஸிஸ் என்ற பெண் தனது செல்ல நாய்க் குட்டிகளுக்காக 20 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் (சுமார் 22 இலட்சம்) செலவில் ஆடம்பர வீடொன்றைக் கட்டிக்கொடுத்துள்ளார்.

11 அடி உயரம் கொண்ட இந்த ஆடம்பர வீட்டில் செல்ஸியா, டார்லா மற்றும் கொகோபப் ஆகிய தனது செல்ல நாய்க்குட்டிகளுக்கு எல்லாவிதமான வசதிகளையும் செய்து கொடுத்திருக்கிறார்.

கீற்றர், ஏசி, விளையாட்டுப் பொருட்கள் தொலைக்காட்சி என அனைத்து வசதிகளும் இந்த ஆடம்பர வீட்டில் இருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (6-4)

# பட்வா எனப்படும் இஸ்லாமிய தண்டனைகளை ஏற்கமுடியாது

## பங்களாதேஷ் நீதிமன்றம் தீர்ப்பு

(டாக்கா)

பட்வா என்ற பெயரில் பிரம்படி கொடுப்பது, கசையடி கொடுப்பது போன்ற இஸ்லாமிய தண்டனைகளை யார் விதித்தாலும் அது கிரிமினல் குற்றம் ஆகும். அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று பங்களாதேஷ் மேல் நீதிமன்றம் தீர்ப்பு கூறி உள்ளது.

இந்த நீதிமன்றத்தின் நீதிபதிகள் சையத் முகமது உசேன், கோவிந்த சந்த்ர தாகுர் ஆகிய 2 நீதிபதிகள் இந்தத் தீர்ப்பை கூறினார்கள்.

பெண்களுக்கு எதிராக இதுபோன்ற பட்வாக்களை விதிப்பது அரசியல் சட்டத்துக்கு எதிரானது. இதுபோன்ற பட்வாக்களை விதிக்கும் தனிநபர்கள் மீது உள்ளூர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

அரசாங்கம், சட்டத்தை நடைமுறைப் படுத்தும் அதிகாரிகள், உள்ளூர் ஆட்சி அமைப்புகள், நகரசபைகள் ஆகியவை இதுபோன்ற இஸ்லாமிய தண்டனைகளை விதிக்கும் நபர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அந்த நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (6-4)



அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலத்தில் உள்ள டெலாவர் சுற்றில் சுற்றுலாப் பயணிகள் சென்ற படகு கவிழ்ந்ததால் 2 பேர் மூழ்கினர். 31 பேர் தத்தளித்தனர். அவர்களை கடற்படை மற்றும் கடலோரப் பாதுகாப்புப் படையினர் காப்பாற்றுவதைப் படத்தில் காணலாம்.

# ஐ.நா. அமைதிப்படை தலைமை அதிகாரியாக இந்திய இராணுவ அதிகாரி நியமனம்

(நியூயோர்க்)

கொங்கோ நாட்டுக்கான ஐ.நா. அமைதிப் படையின் தலைமை அதிகாரியாக இந்திய இராணுவத்தின் லெப்டினன்ட் ஜெனரல் சந்தர் பிரகாஷ் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் தலைவர் பான்கீ மூன் இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளார். தற்போது, இந்தியாவுக்கான ஐ.நா. அமைதி நடவடிக்கைக் குழுவின் பொறுப்பாளராக உள்ளார் பிரகாஷ். இந்திய இராணுவத்தில் 1973 ஆம் ஆண்டு பணியில் சேர்ந்த பிரகாஷ், கடந்த 37 ஆண்டுகளாக பல்வேறு பொறுப்புகளை வகித்து வந்துள்ளார்.

ஈரான் - ஈராக் நாடுகளுக்கான ஐ.நா. இராணுவ கண்காணிப்புக் குழுவில் உயர் அதிகாரியாகவும் பிரகாஷ் பணியாற்றியுள்ளார்.

கொங்கோவில் தற்போது 18 ஆயிரத்து 884 இராணுத்தினரும், ஆயிரத்து 233 பொலிஸாரும் பணியில் உள்ளனர். இதில் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் மற்றும் நேபாள நாடுகளைச் சேர்ந்த வீரர்களும் உள்ளடங்குவர்.

இதுவரை கொங்கோவில் ஐ.நா. அமைதிப்படை தலைமை அதிகாரி செனகல் நாட்டைச்சேர்ந்த பபாகர்கயே பணியாற்றி வந்தார்.

கொங்கோவில், சுகாதார மேம்பாடு, பாலம் கட்டுதல் உள்ளிட்ட பணிகளில் இந்திய வீரர்கள் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (6-4)

கந்தலாலும்,கிழிசலாலும் தவறுகளை மறைக்க முடியாது.ஆனால் பட்டாடை மறைக்கும்போது சட்டத்திற்கு கண் தெரிவதில்லை. ~ ஷேக்ஸ்பியர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# யுத்தத்தின் போது சட்டங்களை முழுமையாக பாதுகாக்க முடியாது

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாத இயக்கமான விடுதலைப்புலிகளுடன் போர் நடத்தியபோது போர்ச் சட்டங்களை முழுமையாக பாதுகாக்க முடியாதென அரசாங்கம் அறிவித்துள்ளது.

பொதுமக்களை மனித கேடயமாக பயன்படுத்தி விடுதலைப் புலிகள் யுத்தத்தை முன்னெடுத்ததாகவும் அவ்வாறான ஓர் பின்னணியில் ஜனநாயக அரசாங்கமொன்று வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்க முடியாதென அரசாங்கம் பான் கீ முனுக்கு விளக்கியுள்ளது. போர் குற்றச் செயல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பினால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் வகையில் இலங்கை அரசாங்கம் இதனைத் தெரிவித்துள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரசாங்கம் தெரிவித்துள்ள இக்கருத்தானது பொதுமக்களை அரச படைகள் படுகொலை செய்த போர்க் குற்றச்சாட்டுக்களை மறைமுகமாக ஒப்புக்கொள்வதாக அமைகின்றது.தற்போதும் கூட அமெரிக்க மற்றும் நேட்டோ படையினர் இந்த அணுகு முறையை ஆப்கானிஸ்தானில் பின்பற்றி வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகத்தினால் உருவாக்கப்பட்டுள்ள நிபுணர் குழு ஐக்கிய நாடுகளின் 100 ஆம் பிரகடன சட்டத்திற்கு அப்பாற்பட்ட வகையில் அமையப் பெற்றுள்ளதாக அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது. (6)

# விமலின் நாடகத்தை ஜனாதிபதி நிறைவு செய்து வைத்துள்ளார்

## ஐ.தே.க.எம்.பி.தெரிவிப்பு

விமல் வீரவன்சவை வைத்து அழகாக நகைச்சுவை நாடகத்தை தயாரித்த தயாரிப்பாளரான ஜனாதிபதி மஹிந்த, அதனை நல்ல முறையில் நிறைவு செய்து வைத்துள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் ஊடகப் பேச்சாளருமான கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே சகல மக்களும் எதிர்பார்த்தபடியே ஜனாதிபதி நடத்திய நாடகத்தின் முடிபு அமைந்துள்ளதாக குறிப்பிடும் அவர் இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை எனவும் இந்த நாடகத்தின் மூலம் விமல் வீரவன்ச தான் விடுத்த சவாலில் தோல்வி கண்டுள்ளதுடன் இந்த அரங்கேற்றத்தினால் இலங்கைக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆகவே இவ்வாறான பிரச்சினைகளுக்கு இப்படி பொய்யான முறையில் தீர்வுகாண முற்படுவதைத் தவிர்த்து இராஜதந்திர ரீதியில் தீர்வு காண முற்படவேண்டும் எனவும் இலங்கை அரசு அவ்வாறு இராஜதந்திர ரீதியில் தீர்வுகாண முற்படுமாயின் அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தமது முழுமையான ஆதரவை வழங்கும் எனவும் அவர் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது கூறினார். (6)

# மருத்துவ மாதுவின் மர்ம மரணம் உண்மையை வெளிப்படுத்த வேண்டும்

வேலணை அரசினர் வைத்தியசாலையில் குடும்பநல பெண் உத்தியோகத்தர் தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் யாழ். குடாநாட்டை அதிர்ச்சிக்கு ஆளாக்கியுள்ளது.

வேலணை அரசினர் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியான சிங்கள டாக்டர் ஒருவரின் இம்சை தாங்கமுடியாமல் பிரஸ்தாப இளம் மருத்துவமாது சிரமப்பட்டதாகப் பரவலாகப் பேசப்படும் நிலையில்,

குறித்த சம்பவம் யாழ்.குடாநாட்டு மருத்துவப் பணியாளர்களிடம் பேரதிர்ச்சியை தோற்றுவித்துள்ளது.

தங்களின் சக பணியாளர் ஒருவருக்கு ஏற்பட்ட துயரநிலை குறித்து எந்த வித நட்வடிக்கைகளும் எடுக்கப்படாமை ,எங்கள் அதிகாரிகளின் ‘ பதவியைக் காக்கும்’ பக்குவத்தையே காட்டிநிற்கின்றது.

வேலணைப் பகுதிக்கு சிங்கள டாக்டர் ஒருவரை நியமிக்கும்போது அவரின் இயல்பு பற்றி சற்றுச் சிந்திப்பது பொறுப்புள்ளவர்களின் கடமையாக இருந்திருக்கவேண்டும்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிங்கள டாக்டர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் கடமையாற்றுவதும்,

வேலணை போன்ற இடங்களில் தனித்து சிங்கள டாக்டரை பணிக்கு அமர்த்துவதும் ஒத்த தன்மையுடைதல்ல.

எனினும் எங்கள் அதிகாரிகள்,சிங்கள அரச அதிகாரிகளிடம் நல்ல பெயர் எடுப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பது எங்கள் இனத்துக்கு வாழ்மானமாக அமைந்து விடுகிறது.

வேலணை வைத்தியசாலை விடுதியில் கடமையில் இருந்த இளம் மருத்துவமாது சீருடை அணிந்தவாறு கயிற்றில் சடலமாகத் தொங்குவதை எங்ஙனம் ஜீரணிக்க முடியும்.

இது தொடர்பில் உரியவர்கள் எடுத்த நடவடிக்கை, விடுத்த அறிக்கை எதுவுமில்லை.

மருத்துவர்கள் தவிர்ந்த ஏனைய மருத்துவப் பணியாளர்களுக்கு என்ன நடந்தாலும் அது பற்றி நடவடிக்கை எடுக்காமல் விடும் மனநிலை யாழ்ப்பாணத்தில் பெரும்பாலான மருத்துவர்களிடம் உண்டு.

டாக்டர்களுக்கு தீங்கென்றால் அவர்கள் வேலை நிறுத்தம் செய்வர்.சட்டத்தரணிகளுக்கு ஆபத்தென்றால் அவர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவர்.ஆனால் ஏழைப்பணியாளர்களின் உயிர் போனாலும்,அவர்களுக்காக குரல்கொடுக்க யாருமே இல்லை.

இந்த படுபாதகமே தமிழ் இனத்தை அழிக்கின்றது.எனவே வேலணை வைத்தியசாலையில் இளம் மருத்துவ மாதுவின் மரணம் தொடர்பில் உரிய விசாரணை செய்யப்பட வேண்டும்.நீதி கிடைக்க வேண்டும்.பிரஸ்தாப டாக்டரை காப்பாற்றுவதில் மட்டுமே கண்ணும் கருத்துமாக இருந்தால்,

அதற்குரிய பழியை சொந்த வாழ்க்கையில் அனுபவிக்க வேண்டி வரும் என்ற இறைதத்துவத்தை ஒரு கணம் ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

உண்மை வெளி வரட்டும்.யார் குற்றம் இழைத்தாலும் அவர்கள் அதற்குரிய தண்டனையை அநுபவிக்கட்டும் அதுவே நீதி.

# றம்புட்டான் விளைச்சல் வீழ்ச்சியடைந்துள்ளது

இவ்வாண்டு றம்புட்டான் விளைச்சலானது வீழ்ச்சியடைந்து காணப்படுவதாக றம்புட்டான் செய்கையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். இதனாலேயே மல்வானை றம்புட்டானுக்கான கேள்வி சந்தையில் அதிகரித்துள்ளதைக் காணமுடிகிறது.

தற்போது சந்தையில் மல்வானை றம்புட்டான் ஒன்று ஆறு ரூபாவுக்கு விற்பனையாகும் அதேவேளை மலேசியன் றம்புட்டான் ஒன்று ஐந்து ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. றம்புட்டானுக்கான கேள்வி அதிகரித்துள்ளமையே இந்நிலைக்கு காரணமாகும்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள றம்புட்டான் ஏற்றுமதியாளர்கள், கடந்த காலங்களில் கண்டிராத அளவுக்கு இம்முறை றம்புட்டான்கள் அதிகம் விலையேறியுள்ளதாக கூறுகின்றனர். அத்துடன் நாட்டில் யுத்தம் முடிபுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதால் வடக்கு கிழக்கு பகுதிகளுக்கும் பெருமளவிலான றம்புட்டான்கள் ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தவிர டுபாய், சவூதி அரேபியா போன்ற அரபு நாடுகளுக்கும் கனடா, ஐக்கிய இராச்சியம், சுவிஸ்லாந்து, பிரான்ஸ் மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கும் றம்புட்டான்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அகதிகளுக்கு குடியுரிமை வழங்காதது ஏன்?

## சுதர்சன நாச்சியப்பன் பதில்

கோவை அரசு கலைக் கல்லூரியில் மாணவர்களுடனான கலந்தாய்வுக் கூட்டத்தில் நாடாளுமன்ற நிலைக்குழு தலைவர் சுதர்சன நாச்சியப்பன் பங்கேற்றார்.

அப்போது மாணவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதில் அளித்த அவர் ஆசாத் காஷ்மீரைச் சேர்ந்தவர்களுக்கு குடியுரிமை அளிக்கப்படும்போது இலங்கையில் இருந்து அகதிகளாக வந்தவர்களுக்கு குடியுரிமை ஏன் வழங்கக்கூடாது எனக் கேட்கிறீர்கள்.

காஷ்மீர் இந்தியாவின் ஓர் அங்கம். அது ஒருங்கிணைக்கப்பட்ட இந்தியாவின் ஒரு பகுதி .இந்தியா -பாகிஸ்தான் பிரிவினையின் போது பாகிஸ்தானால் ஆக்கிரமிக்கப்பட்ட காஷ்மீரே ஆசாத் காஷ்மீர் ஆகும்.

ஆனால் இலங்கை தனி நாடு. அங்கிருந்து அகதிகளாக வந்தவர்கள் தற்காலிகமாக இங்கு வசிக்கலாம் என்றார். (6)

# மீனவர்கள் மீதான தாக்குதலை தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

## மார்க்சிஸ்ட் கட்சி கோரிக்கை

(சென்னை)

மீனவர்கள் மீது தாக்குதலை உடனடியாக தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மார்க்சிஸ்ட் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பாக அக்கட்சியின் மாநில செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் கொடுஞ்செயலை தொடர்ந்து நிகழ்த்தி வருகின்றனர். இதனை உடனடியாக தடுத்து நிறுத்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் மீனவர்கள் வழக்கம் போல் எவ்வித அச்சமுமின்றி இந்திய கடற்பகுதிகளில் மீன்பிடிப்பதற்கு முழுபாதுகாப்பு ஏற்பாடுகளை செய்ய வேண்டும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

மேலும் தமிழக அரசு இறந்த மீனவர் செல்லப்பன் குடும்பத்திற்கு அறிவித்துள்ள நிவாரண தொகையை ரூ.5இலட்சமாக உயர்த்திவழங்க வேண்டுமென்றும் சேதமடைந்துள்ள மீன்பிடி உபகரணங்களுக்கு உரிய நிவாரணத்தை தொகை வழங்க வேண்டுமெனவும் தமிழக அரசை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வற்புறுத்துகிறது.இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்படுகிறது. (6-4)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## மதம்



எப்போது ஆன்மா அன்பான இறைவனின் தேவையை, ஆசையை, ஏக்கத்தை, உணருமோ அப்போதுதான் மத உணர்வே ஆரம்பிக்கிறது.அதற்கு முன்பு அல்ல.

மதத்தின் ரகசியம் கொள்கைகளில். இல்லை செயல் முறையில்தான் உள்ளது நல்லவனாக இருப்பது, நன்மை செய்வது இதுதான் மதத்தின் முழுப்பரிமாணம்.

புலன்களுக்கு அடிமையாவதை தடுக்கும் ஆசை தோன்றும் போதுான் மனிதனின் இதயத்தில் மத உணர்வு உதயமாகிறது. ஆகவே மனிதன் புலன்களுக்கு அடிமையாகாமல் தடுப்பதும் அவர் தன் சுதந்திரத்தை வலியுறுத்த உதவி செய்வதும்தான் மதத்தின் முழுநோக்கம்.

என்னென்ன தீமைகளுக்கும் மதம் காரணம் என்று சொல்லுகிறார்களோ அவை எதற்கும் மதம் காரணம் அல்ல.

# சீமான் கைது செய்யப்படுவாரா? வீட்டுக்கு முன் பொலிஸ் குவிப்பு

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மீது சென்னை பொலிஜார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். மூன்று பிரிவுகளின் கீழ் அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து சென்னையில் உள்ள சீமான் வீடு மற்றும் அலுவலகம் முன்பு பொலிஸ் குவிக்கப்பட்டுள்ளது.

இதனால் சீமான் எந்த நேரத்திலும் கைதாகலாம் என்று பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழக மீனவர்கள் சிங்கள மீனவர்களால் தொடர்ந்து தாக்கப்படுவதைக் கண்டித்து நாம் தமிழர் இயக்கத்தின் சார்பில் சென்னை ஆணையாளர் அலுவலகம் முன்பு நேற்று ஆர்ப்பாட்டம் நடந்தது.

அப்போது சீமான் தமிழகத்தில் சிங்களவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று நாம் தமிழர் கட்சி கணக்கெடுத்து வைத்திருக்கிறது. இனி ஒரு முறை தமிழக மீனவர்கள் தாக்கப்பட்டால் இங்குள்ள சிங்களவர்களை உயிருடன் விடமாட்டோம். அவர்கள் யாரும் உயிருடன் இலங்கை திரும்பமுடியாது என்று எச்சரிக்கிறேன் என்று ஆவேசமாகப் பேசினார்.

சீமானின் இந்தப் பேச்சு வன்முறையை தூண்டும் விதமாக இருக்கிறது என்று தான் பொலிசார் வழக்குப்பதிவு செய்து அவரை தேடிவருகின்றனர். (6-4)

# நடிகை த்ரிஷா திடீர் மாயம்; படக் குழுவினர் பதற்றம்

(சென்னை)

கமல்ஹாசன், மாதவன், த்ரிஷா நடிக்கும் படம், "மன்மதன் அம்பு" என்ற படத்தை கே. எஸ். ரவிக்குமார் இயக்குகிறார். இதன் படப்பிடிப்பு ஐரோப்பிய நாடுகளில் கடந்த 2 வாரமாக நடந்து வருகிறது. தற்போது இத்தாலியில், 18 அடுக்குகள் கொண்ட பிரமாண்ட கப்பல் படப்பிடிப்பு நடந்து வருகிறது. இந்தக் கப்பலில் ஒரு தளத்திலிருந்து மற்றொன்றுக்கு செல்ல எலிவேட்டர், லிப்ட் வசதிகள் உள்ளன.

மேலும், படகுக் குழுவினருக்கு கப்பல் வரைபடமும் கொடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட ஒரு இடத்தில் கமல், த்ரிஷா நடித்த காட்சிகள் படமாக்கப்பட்டு, பின்னர் இடம் மாற்றப்பட்டது. படக்குழுவினர் இடம் மாறினர். த்ரிஷாவுடன் அவரது அம்மா உமாவும் இருந்தார். இருவரும் படக்குழுவினரை பின்தொடர்ந்து சென்றனர்.

அப்போது கூட்டம் அதிகமாக இருந்தது. நெரிசலில் திடீரென்று த்ரிஷாவை காணவில்லை. அவரது அம்மா சுற்றும் முற்றும் தேடினார். த்ரிஷா வழிதவறி வேறு பக்கம் சென்றுவிட்டது. தெரியவந்தது. படக்குழுவினருக்கும் பாதுகாவலர்களுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. அனைத்து அடுக்குகளுக்கும் ஆட்கள் அனுப்பப்பட்டனர்.



இரண்டுமணி நேர தேடுதலுக்குப் பின்பே த்ரிஷாவை கண்டுபிடிக்க முடிந்தது. அதன் பின்பு படக் குழுவினர் நிம்மதி பெருமூச்சு விட்டனர்.

இத்தாலியிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை சென்னை திரும்பிய த்ரிஷாவின் அம்மா, இத்தகலை தெரிவித்தார். அவர் மேலும் கூறும்போது, " இந்த பிரமாண்ட கப்பலில் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனையை அடைய நீண்டதூரம் செல்ல வேண்டும். கூட்டத்தில் த்ரிஷாவும், நானும் பிரிந்து சென்றுவிட்டோம் கையடக்கத் தொலைபேசி இயங்கவில்லை. நான் பயந்து விட்டேன். படக் குழுவினரும், பாதுகாவலர்களும் நீண்ட நேரம் தேடி, த்ரிஷாவை அழைத்து வந்தனர். இதுபோல் சம்பவம் 2முறை நடந்துவிட்டது. அதன்பின்பு எங்கு சென்றாலும் படக் குழுவினருடனே சென்றோம்" என்று தெரிவித்தார். (6-4)

# சென்னை விமான நிலையத்தில் 2 இலங்கை இளைஞர்கள் கைது

இலங்கையில் இருந்து சென்னைக்கு கடத்தி வரப்பட்ட ரூ.28 இலட்சம் மதிப்புள்ள தங்கக் கட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் இரு இலங்கை இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பில் இருந்து ஒரு விமானம் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் வந்தது. இதில் வந்த பயணிகளை சுங்கத் துறை அதிகாரிகள் சோதனை இட்டனர். அப்போது கொழும்பில் இருந்து சுற்றுலா விசாவில் வந்திருந்த 2 இளைஞர்களின் பெட்டிகளை சோதனை செய்தனர். அதில் ஒன்றும் இல்லாததால் அவர்களை செல்ல அனுமதித்தனர்.

அந்த 2 இளைஞர்களும் விமான நிலையத்தை விட்டு வெளியே நடந்து சென்றபோது அவர்களின் நடை வித்தியாசமாக இருந்தது. இதை பார்த்த அதிகாரிகளுக்கு அவர்கள் மீது சந்தேகம் ஏற்பட்டது. உடனே அவர்கள் இருவரையும் கைதுசெய்து தனி அறையில் சோதனை செய்தனர்.

அப்போது அவர்கள் இருவரும் தலா 5 தங்கக் கட்டிகளை ஆசன வாயில் வைத்து கடத்தி வந்தது தெரிய வந்தது. உடனடியாக விமான நிலைய மருத்துவ குழுவினர் விரைந்து வந்து அவர்களிடமிருந்து 1 1/2 கிலோ எடையுள்ள 10 தங்க கட்டிகளை ஆசனவாயில் இருந்து எடுத்தனர். இவற்றின் மொத்த மதிப்பு ரூ.28 இலட்சமாகும்.

பிடிபட்ட அந்த இலங்கை இளைஞர்களிடம் அதிகாரிகள் தீவிரமாக விசாரணை நடத்தியபோது இலங்கையில் வேலை இல்லாமல் சுற்றி திரிந்ததாகவும் அப்போது ஒருவர் தங்கக் கட்டிகளை கொடுத்து இதை ஆசன வாயில் வைத்து சென்னைக்கு எடுத்து செல்லுங்கள். உங்கள் புகைப்படங்களை நாங்கள் மெயிலில் சென்னையில் உள்ள ஒருவருக்கு அனுப்பிவிடுவோம். அவர் விமான நிலையத்தில் வந்து உங்களை சந்திப்பார். இதற்காக உங்களுக்கு தலா. ரூ.10 ஆயிரம் தருவார்கள் என்று கூறியதால் தங்கத்தை கடத்தி வந்ததாக தெரிவித்தனர்.

பிடிபட்ட இலங்கை இளைஞர்களின் பெயர்களை அதிகாரிகள் வெளியிட மறுத்துவிட்டனர். இந்த தங்க கடத்தலில் ஈடுபட்ட சென்னை கும்பலை பிடித்த பின் இதுபற்றிய முழு விவரங்களை வெளியிடுவோம் என்று அவர்கள் தெரிவித்தனர். தங்க கடத்தல் கும்பலை பிடிக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதே விமானத்தில் வந்த 8 பேர்களிடம் விமான நிலைய பொலிசார் சோதனை நடத்தியபோது அனுமதி இல்லாமல் அவர்கள் ரூ.40 இலட்சம் மதிப்புள்ள மெமரிகார்டுகளை கடத்தி வந்தது தெரியவந்தது. இதற்காக அவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

இதேபோல கடந்த வெள்ளிக்கிழமை இரவு சென்னையில் இருந்து கொழும்பு செல்லும் விமானத்தில் செல்ல இருந்த முகமது ஆரிப் வயது (36) என்பவரை அதிகாரிகள் சோதனை இட்டபோது அவரிடமிருந்து 6 ஆயிரத்து 500 அமெரிக்க டொலர் பிடிபட்டது. இவற்றின் இந்திய மதிப்பு ரூ.3 இலட்சமாகும். இதை தொடர்ந்து முகமது ஆரீப்புக்கு அபராதம் விதிக்கப்பட்டது. (6)




# தமிழக மீனவர்களின் அவல நிலைக்கு காரணம் கருணாநிதியும் காங்கிரசும்தான்

## விஜயகாந் சாடல்

(சென்னை)

இந்தியா - இலங்கை இடையிலான இன்றைய உறவு கோடீஸ்வர நிறுவனங்களுக்கு மட்டும்தான் பயன்பட வேண்டுமா? என தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல் நடத்துவதை கண்டித்து தே.மு.தி.க. சார்பில் 13 ஆம் திகதி சென்னையில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அவர் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த 7 ஆம் திகதி அன்று இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் கச்சதீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த போது அவர்களை மீன் பிடிக்க விடாமல் இலங்கை கடற்படையினர் விரட்டி அடித்துள்ளதாக செய்தி வந்துள்ளது.

கடந்த வருடம செப்ரெம்பர் மாதம் 29 ஆம் திகதி அன்று டெல்லியில் தே.மு.தி.க. சார்பில் இந்த வாழ்வுரிமையை வற்புறுத்தி தமிழக கடலோர மீனவர்கள் பிரதிநிதிகளுடன் தே.மு.தி.க.சார்பில் உண்ணாவிரதம் இருந்தேன். தமிழக - இலங்கை கடல் பகுதியில் இரு தரப்பு மீனவர்களும் சுதந்திரமாக மீன் பிடிக்கும் உரிமையை 1974 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்ததைப் போல மீண்டும் கொண்டுவர இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தியப் பிரதமர் அவர்களுக்கு கடிதமும் கொடுத்தேன்.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி இந்தியப் பிரதமர் அவர்கள் எனக்கு அனுப்பிய பதில் கடிதத்தில் தமிழக மீனவர்கள் இலங்கை கடல் பகுதிக்கு செல்வதால் தான் இத்தகைய நிலைமை ஏற்படுகிறது என்றும் இருப்பினும் அவர்கள் சாதாரண அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டுமே தவிர தாக்கப்படக் கூடாது என்று குறிப்பிட்டுள்ளார். எனினும் தமிழக மீனவர்கள் மீது தாக்கப்படுவது முடிவுக்கு கொண்டுவரப்படவில்லை.

ஐ.நா. மனித உரிமை கமிஷன் முன்பு இரண்டு முறை இலங்கை அரசு தமிழினப் படுகொலை சம்பந்தமாக குற்றவாளியாக நிறுத்தப்பட்டபொழுது இந்திய அரசுதான் தலையிட்டுக் காப்பாற்றியது.

சர்வதேச நிதி உதவி நிறுவனம் இலங்கை அரசுக்கு பண உதவி செய்ய மறுத்தபொழுது இந்திய அரசின் உத்தரவாதத்தின் பேரில் தான் இலங்கைக்கு நிதி உதவி கிடைத்தது.

இப்பொழுதும் இலங்கை அதிபர் ராஜபக்ஷ போர்க் குற்றவாளி என்று குற்றம்சாட்டப்பட்ட நிலையில் ஐ.நா. மன்றம் அமைத் துள்ள நிபுணர் குழு வை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்திய அரசு ஐ.நா. வை வற்புறுத்துவதாக அறிகிறேன்.




இலங்கை அரசுக்கு இராணுவ ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் இந்திய அரசு பெயர ளவுக்கு உதவி புரிந்து வருகிறது. இலங்கை யில் முதலீடு செய்யும் முக்கிய 5 நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இந்தியன் எண்ணெய் கூட்டுத்தாபனம், தாஜ் விடுதி, ஏர்டெல் அல்ட்ரா டெக் மற்றும் அம்பிகா சிமெண்ட், சியாட் டயர், அசோக் லேலண்ட், அரசு மற்றும் தனியார் வங்கிகள் போன்ற இந்திய கோடீஸ்வர நிறுவ னங்கள் இலங்கையில் முதல் இட்டு பெரு மளவிற்கு இலாபம் சம்பாதிக்கின்றன.

ஆனால் தினந்தோறும் கடலில் மீன் பிடித்து உயிர்வாழ வேண்டிய மீனவர்களுக்கு வாழ்க்கையே பிரச்சினை ஆகிவிட்டது. நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்கும் ஆங்கே பொசிவதைப் போல இந்திய - இலங்கையின் இன்றைய உறவு கோடீஸ்வர கம்பனிகளுக்கு மட்டும்தான் பயன்பட வேண்டுமா? ஏழை மீனவர்களின் உரிமையை மட்டுமல்ல, உயிரையும் பறிக்க வேண்டுமா?

இன்றைய மீனவர்களின் அவல நிலைக்குக் காரணம் கருணாநிதியும் காங்கிரசும் தான். 1974 ஆம் ஆண்டில் கச்சதீவை விட்டுக்கொடுத்து விட்டு இன்று இலங்கைத் தூதரகம் முன் கருணாநிதி ஆர்ப்பாட்டம் நடத்துகிறார். என்றால் இதைவிட மக்களின் காதில் பூச்சுற்றும் வேலை ஏது?

இலங்கை சம்பந்தமான இந்திய அரசின் இத்தகைய பிற்போக்குத் தனத்தைக் கண்டித்து தே.மு.தி.க. சார்பில் வரும் நாளை காலை 10 மணியளவில் பண்ருட்டி ராமச்சந்திரன் தலைமையில் சென்னை சைதாப்பேட்டை பனகல் மாளிகை முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று விஜயகாந்த் தனது அறிக்கையில் கூறியுள்ளார். (6)



ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து 5 செயற்கைக் கோள்களுடன் ஏவுகணை ஒன்று இன்று ஏவப்படவுள்ளது. இந்தஏவுகணையில் அல்ஜீரியா, கனடா, சுவிற்சர்லாந்து நாடுகளைச் சேர்ந்த செயற்கைக் கோள்கள் ஆந்திரா மற்றும் கர்நாடக மாநிலங்களைச் சேர்ந்த 7 கல்லூரி மாணவர்கள் உருவாக்கிய சிறிய ரக செயற்கைக் கோள்களும் இடம்பெற்றுள்ளன.

# ஜேர்மனி மூன்றாம் இடத்தைப் பிடித்தது

# போராடித் தோற்றது உருகுவே அணி




(போர்ட் எலிசபெத்)

உலகக்கிண்ண கால்பந்தாட்ட தொடரில் ஜேர்மனி அணி மூன்றாவது இடம் பிடித்து வெண்கலப்பதக்கம் கைப்பற்றியது.

நேற்று முன்தினம் நடந்த பரபரப்பான போட்டியில் அபாரமாக ஆடிய ஜேர்மனி அணி உருகு வேயை 3:2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

தென்னாபிரிக்காவில் 19ஆவது உலகக் கிண்ண கால்பந்து தொடர் நடக்கிறது. அதன் இறுதிப் போட்டிக்கு ஸ்பெயின், நெதர்லாந்து அணிகள் தகுதிபெற்றன.

நேற்று முன்தினம் போர்ட் எலிசபெத்தில் நடந்த மூன்றாவது இடத்துக்கான போட்டியில் முன்னாள் சம்பியன்களான ஜேர்மனி, உருகுவே அணிகள் மோதின.

**குளோஸ் இல்லை**

ஜேர்மனி அணியில் குளோஸ், பிலிம் லாம், கோல் காப்பாளர் மானுவேல் நூயர் ஆகிய முன்னணி வீரர்களுக்கு ஓய்வு அளிக்கப்பட்டது.

இதனால் பிரேசிலின் றொனால் டோவின் அதிக கோல் (15) அடித்த சாதனையை குளோஸ் (14) முறியடிக்க இயலவில்லை.

**முல்லர் கோல்**

ஆரம்பத்தில் ஜேர்மனி அசத்தலாக ஆடியது. ஆட்டத்தின் 13ஆவது நிமிடத்தில் இந்த அணியின் ஓசில் அடித்த பந்து இலக்குத் தவறி பறந்தது பின் தோமஸ் முல்லர் கலக்கினார்.

ஆட்டத்தின் 19ஆவது நிமிடத்தில் அணித் தலைவர் ஸ்கிவன்ஸ்டீகர் அடித்த பந்தை உருகுவே கோல்காப்பாளர் முஸ்லேரா பிடித்து வெளியே தள்ளினார்.

அதனை சாமர்த்தியமாக அப்படியே கோல் கம்பத்துக்குள் அடித்தார் முல்லர். இது இத் தொடரில் இவர் அடிக்கும் 5ஆவது கோல். இதன் மூலம் ஜேர்மனி 1:0 என முன்னிலை பெற்றது.

**உருகுவே பதிலடி**

இதற்கு பதிலடி கொடுக்கும் வேகத்தில் உருகுவே வீரர்கள் அதிரடியாக ஆடினர். ஆட்டத்தின் 28ஆவது நிமிடத்தில் மத்திய களத்தில் வைத்து ஸ்கிவன்ஸ்டீகரிடம் இருந்த பந்தை தட்டிப்பறித்தார் உருகுவே வீரர் சாரெஸ். இதனை சகவீரர் கவானிக்கு அருமையாக பாஸ் செய்தார்.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி கவானி மின்னல் வேகத்தில் கோல் அடிக்க உருகுவே ரசிகர்கள் உற்சாகம் அடைந்தனர்.

முதல் பாதி முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோல் அடிக்க போட்டி 1:1 என சமனிலையில் இருந்தது.

**ஜேர்மனி வெண்கலம்**

இரண்டாவது பாதியில் கொட்டும் மழையிலும் இரு அணி வீரர்களும் விட்டுக்கொடுக்காமல் போராடினர்.

ஆட்டத்தின் 51ஆவது நிமிடத்தில் உருகுவே அணியின் நட்சத்திர வீரரான போர்லான் சுப்பர்கோல் அடித்து அசத்தினார்.

பின் 56ஆவது நிமிடத்தில் ஜேர்மனியின் இயான்சன் தலையால் முட்டி ஒரு அற்புத கோல் அடிக்க போட்டி 2:2 என்ற கணக்கில் மீண்டும் சமனிலையை எட்டியது.

அடுத்து 82ஆவது நிமிடத்தில் கோணர்கிக் வாய்ப்பில் ஓசில் பந்தை அடித்தார். அதனை உருகுவே தற்காப்பு பகுதி வீரர்கள் முறையாக தடுக்கத்தவறினர்.

இந்த நேரத்தில் பந்தை அப்படியே தலையால் முட்டி ஜேர்மனியின் கதிரா ஒரு கோல் அடித்து அசத்தினார்.

கடைசிக் கட்டத்தில் உருகுவே வீரர் போர்லாண்ட் அடித்த பந்து பாரில் பட்டு செல்ல வெற்றி கனவு தகர்ந்தது. இறுதியில் ஜேர்மனி 3:2 என்ற கோல் கணக்கில் வென்று, மூன்றாவது இடத்துக்கான வெண்கலப்பதக்கத்தை பெற்றது.

ஆட்ட நாயகனாக ஜேர்மனி வீரர் தோமஸ் முல்லர் தேர்வு செய்யப்பட்டார்.

**சுப்பர் ஒக்டோபஸ்**

பால் ஒக்டோபஸுக்கு மீண்டும் வெற்றி. இது கணித்ததுபோலவே ஜேர்மனி அணி மூன்றாவது இடம் பிடித்துள்ளது. இத்தொடரில் ஜேர்மனி அணியை பொறுத்தவரை ஒக்டோபஸ் கணிப்பு 100 சதவீதம் சரியாக அமைந்துள்ளது.

---

# பாடசாலை மட்ட 17 வயதுப்பிரிவு கிரிக்கெட் போட்டி

## சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை கொக்குவில் இந்து அணி வென்றது

(யாழ்ப்பாணம்)

பங்குஜனின் சகலதுறை ஆட்டமும், டிலோசனின் துடுப்பாட்டமும் கைகொடுக்க சென். ஜோன்ஸ் கல்லூரியினை 10 விக்கெட்களால் வென்றது கொக்குவில் இந்துக் கல்லூரி அணி.

இலங்கை கிரிக்கெட் சங்கத்தின் ஏறபாட்டில் யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவு அணிகளுக் கிடையில் 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி தற போது நடைபெற்று வருகின்றது.

மேற்படி சுற்றுப் போட்டியின் ஆட் டம் ஒன்று கொக்குவில் இந்துக் கல் லூரி மைதானத்தில் நடைபெற்ற போது கொக்குவில் இந்துக் கல்லூரி அணி யினை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற கொக்குவில இந்துக் கல்லூரி முதலில் சென. ஜோன்ஸ் கலலூரி அணியினை துடுப்பெடுத்தாடப் பணித்தது.

பங்குஜனின் சிறப்பான பந்துவீச் சினால் தொடக்கம் முதல் விக்கெட்டினை இழந்து தவித்து வந்த சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 45.4 ஓவர்களில் 106 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் ரஹ்மான், தனுசன் முறையே 25,20 ஓட்டங்களைப் பெற்றுக கொடுத்தனர். பந்துவீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி சாாபாக பங்குஜன் 4 விக்கெட்களையும், ஆதித்தன் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

107 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கு ஆரம்ப விக்கெட் இணைப்பாட்டமே சிறந்த அடித தளம் இட்டது.

12 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கை அடைந்தது கொக்குவில் இந்துக் கல லூரி அணி. பங்குஜன் 50 ஓட்டங்களுடனும், டிலோசன் 49 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல களத்திலிருந்தனர்.

## யாழ்ப்பாணக் கல்லூரி-மத்தியகல்லூரிக்கு இடையிலான போட்டி சமனிலையானது

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல் லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

இலங்கைக் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ.மாவட்டப் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவு அணிகளுக் கிடையில் 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி நடைபெற்று வருகின்றது.

இதில் யாழ்ப்பாணம் மத்திய கல் லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல லூரி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற யாழ்ப் பாணக் கல்லூரி முதலில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை துடுப் பெடுத்தாடப் பணித்தது. அதற்கிணங்க முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் துடுப்பாட்ட வீரர்கள் அணியைக் கைவிட்டனர். வதூஸனன் மட்டும் அதிரடியாகவும் சிறப்பாகவும் துடுப்பெடுத்தாடினார்.

29.2 ஓவர்களில் 151 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழநதது. துடுப்பாட்டத்தில் வதூஸனன் 66 பந்துகளில் 75 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் பெஞ்ஜமின் 4 விக்கெட் களையும், மதூஸன், கவீந்திரன், செபிநாத் தலா 2 விக்கெட்களைக் கைபபற்றினர்.

151 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு ஆரம்ப விக்கெட் இணைப்பாட்டம் சிறப்பான அடித்தளம் இட்டது. எனினும் பின்வரிசை வீரா களின் பொறுப்பற்ற ஆட்டத்தினால் அடுத்தடுத்து விக்கெட்களை இழந்து தவித்தது.

இறுதி விக்கெட் ஜோடி வெற்றிககாக கடுமையாகப் போராடினர். போட்டியின் ஓட்ட எண்ணிக்கையை சமநிலையை அடைந்த போது இறுதி விக்கெட்டும பறிபோனது.

இதனால் ஆட்டம் சம நிலையில் முடிபுற்றது.

துடுப்பாட்டத்தில் பெஞ்ஜமின், தனஞ்சயன் முறையே 34, 24 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சார்பாக டார்வின், கிருசாந், கிசோந்தன் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

---

## பல்கலைக்கழக மாணவர்...

ஐக்கிய தேசிய கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் யாழ்.அலுவலகத்தில் நடைபெற்ற இப் பத்திரிகையாளர் சந்திப்பில், பிரதிஅமைச்சர் மேலும் தெரிவித்ததாவது,

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் கோரிக் கைக்கு அமைவாக இரு பிள்ளைகளின் தாயாரான சுரேஷ் வனிதா (வயது 40) மற்றும் யாழ்.பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகியுள்ள புதுமுக மாணவன் ஒருவரையும் உடனடியாக அவர்களது குடும்பத்தினரிடம் ஒப்படைக்குமாறு புனர்வாழ்வு ஆணையாளருக்குப் பணித்துள்ளேன். இவ் இருவரும் இன்று அவர்களது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்படுவர் என்றார்.

இதேவேளை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் ஏற்பாட்டில் பம்பைமடு புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது தாயாரை விடுவிக்குமாறு இரு சிறுவர்கள் நேற்று புனர்வாழ்வு மற்றும் சிறைச் சாலைகள் பிரதி அமைச்சர் விஜிதமுனி சொய்சாவை நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்தனர்.

மாதகலில் பேர்த்தியாருடன் வசித்துவரும் சுரேஷ் சாதுரியன் (வயது 08), சுரேஷ் சாரங்கன் (வயது 4) ஆகிய இருவருமே தமது தாயாரான சுரேஷ் வனிதாவை விடுவிக்குமாறு பிரதி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர். இதனை கவனத்திலெடுத்த பிரதி அமைச்சர் பிரஸ்தாப தாயாரை உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு புனர்வாழ்வு ஆணையாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் இரு சிறுவர்களுக்கும் கல்விச் செலவுக்காக பிரதி அமைச்சர் சிறுதொகை பண உதவியை வழங்கிவைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இச் சிறுவர்களின் தந்தை வன்னியில் இடம் பெற்ற இறுதி யுத்தத்தில் உயிரிழந் ததாகவும் தாயார் புனர்வாழ்வு முகாமில் நோய்வாய்ப்பாட்டு தவிப்பதாகவும் பிரதி அமைச்சரிடம் தெரிவிக்கப் பட்டது. இந்நிலையில் அவர் இன்று விடுதலை செய்யப்படவுள்ளார். (ச-5)

## அணிசேரா நாடுகளின் ஒத்து...

ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளும் முனைப்புக்களில் ஈடுபட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

அமைப்பில் அங்கம் வகிக்கும் 118 உறுப்பு நாடுகளையும் இணைத்துக் கொண்டு ஐக்கிய நாடுகளின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்க அரசாங்கம் முயற்சி மேற்கொண்டு வருகின்றது.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புக்கு பேரவை, மனித உரிமை பேரவை மற்றும் இலங்கையின் அனுமதியின்றி நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அணிசேரா நாடுகள் குற்றம் சுமத்தி யிருந்தன.

ஐக்கியநாடுகள் அமைப்பின்நிபுணர்கள்குழுவின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பை வெளியிடுமாறு அணிசேரா நாடுகள் அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளிடம் இலங்கை மீண்டும் கடிதம் ஊடாக கோரியுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி கலாநிதி பாலித கோஹணே இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் திருத்தங்களையும் ஆலோசனைகளையும் உறுப்பு நாடுகள் மேற்கொள்ள முடியும் என சுட்டிக்கட்டப்பட்டுள்ளது. (ச-5)

# ஸ்பெயின் அணி 'உலக சம்பியன்'

(ஜோகனஸ்பேர்க்)

உலகக்கிண்ண கால் பந்தாட்டத் தொடரில் ஸ்பெயின் அணி சம்பியனாகி வரலாறு படைத்தது 19ஆவது உலகக்கிண்ண கால் பந்தாட்ட தொடரில் நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஸ்பெயின் அணி 1:0 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்து அணியை வீழ்த்தியது.

தென்னாபிரிக்காவில் கடந்த ஒரு மாத காலமாக நடைபெற்று வந்த 19ஆவது உலகக்கிண்ண கால்பந்தாட்ட தொடரின் இறுதிப் போட்டி நேற்று ஜோனஸ் பேர்க் சாக்கர் சிட்டி மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் முழு நேரம் வரை எந்த அணியும் கோல் போடவில்லை இதையடுத்து கூடுதல் நேரம் வழங்கப்பட்டது.

இதில் ஆட் டத்தின் 116ஆவது நிமிடத்தில் ஆன்ட்ரஸ் இனியஸ்டா அட்டகாச மாக ஒரு கோல் அடித்து ஸ்பெயின் அணிக்கு முன்னிலை பெற்றுக் கொடுத்தார்.

இதன் மூலம் ஸ்பெயின் அணி 1:0 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்து அணியை வீழ்த்தி உலக சம்பியன் ஆகியது.

உலகக் கிண்ண கால்பந்தாட்ட வரலாற்றில் முதல் முறையாக ஸ்பெயின் அணி சம்பியனாகி வரலாறு படைத்தது.

கடைசிவரை போராடிய நெதர்லாந்து தோல்வியடைந்து இரண்டாம் இடத்தைபெற்றது.

**ஒக்டோபஸ் வெற்றி**

இந்த உலகக் கிண்ண கால் பந்தாட்டத் தொடரில் ஸ்பெயின் அணி சம்பியனாகும் என ஜேர்மன் வாழ் கடல் உயிரினம் ஒக்டோபஸ் அறிவித்தது.

இது நடைபெற்றதால் ஒக்டோபஸின் கணிப்பு இத் தொடரில் 100 வீதம் வெற்றி பெற்றுள்ளது.



## வண்ணமயமான நிறைவு விழா

உலகக்கிண்ண கால்பந்தாட்டத்தொடர் பிரமாண்டமான கலை நிகழ்சிகளுடன் நேற்று நிறைவடைந்தது. நிறைவு விழாவில் தென்னாபிரிக்க முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா கலந்து கொண்டார்.

உலகக்கிண்ண கால் பந்து தொடர் நிறைவு விழா நிகழ்ச்சி நேற்று சாக்கர் சிட்டி மைதானத்தில் நடந்தது. நிறைவு விழா மற்றும் அதைத் தொடர்ந்து நடந்த இறுதிப் போட்டியை பார்க்க 88ஆயிரம் ரசிகர்கள் திரண்டிருந்தனர்.

பல நாட்டுத் தலைவர்களும் சாக்கர் சிட்டியில் முகாமிட்டிருந்தனர். இதனால் அங்கு வரலாறு காணாத பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

போட்டிக்கு முன்னதாக பிரமாண்ட கலை நிகழ்ச்சிகள் நடந்தன இதில் பிரபல கொலம்பிய பாடகி ஷகிரா, வாகா வாகா ஆபிரிக்கா என்ற உலகக்கிண்ண தீம் பாடலை பாடி அசத்தினார்.

பின்னர் லேசர் விளக்குகளால் உலகக் கிண்ண தொடர்களில் விளையாடிய 32 நாட்டு அணிகளின் கொடிகளும் மைதானத்தில் உருவாக்கப்பட்டது ரசிகர்களை கவர்ந்தது. அவ்வப்போது நடந்த வாணவேடிக்கைகளும் கண்களைப்பறித்தன. தொடர்ந்து மைதானத்தில் அழகிய குளம் ஒன்று உருவாக்கப்பட்டது. அதைச்சுற்றி ஏராளமான ஆபிரிக்க யானைகள் கூட்டம் கூட்டமாக நிற்பது போலவும் தண்ணீர் குடிப்பது போலவும் தத்தருவமான உருவாக்கி காட்டப்பட்டது.

இவர்கள் தவிர ஆபிரிக்க கண்டத்தின் பாரம்பரியத்தை விளக்கும் விதமாக ஏராளமான இசை மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடந்தன.

இறுதியில் தென்னாபிரிக்கா முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா பலத்த கரகோசத்துக்கிடையே மைதானத்துக்கு அழைத்து வரப்பட்டது சிறப்பாக அமைந்தது.

கறுப்பு நிற கோட் அணிந்து முன்னாள் மனைவி வின்னி மண்டேலாவுடன் அவர் மைதானத்துக்குள் வந்தார். அவரை பார்த்ததும் சாக்கர்சிட்டியில் பலத்த ஆரவாரம் ஏற்பட்டது. இத்துடன் நிறைவு விழா நிகழ்ச்சிகள் முடிபடைந்தன.

# யாழிலிருந்து புறப்பட்ட ஹயஸ்வான் லொறியுடன் மோதி விபத்தானது!

## ஒருவர் பலி; சிலாபத்தில் சம்பவம்

(சிலாபம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் சென்ற ஹயஸ் வான் ஒன்று சிலாபம் பகுதியில் நேற்று அதிகாலை லொறி ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார்.

மேலும் சுமார் 7 பேர் படுகாயமடைந்த தாக தெரிவிக்கப்பட்டது. இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

கொழும்பு மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெறுவதற்காக வான் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி 7 பேர் நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்டனர்.

இவர்களில் இரு சாரதிகளைத் தவிர ஏனைய அனைவரும் சிகிச்சை பெறுவதற்காகப் புறப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் சென்று கொண்டிருந்தபோது சிலாபத்துக்கு அண்மையில் நேற்றுக்காலை 5.30 மணியளவில், லொறி ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது. இதில் யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த இ.எல்.எஸ். மரியாம் பிள்ளை(வயது 76) என்பவர் உயிரிழந்தார். அவரது மனைவி அந்தோனி யம்மா (வயது 66) உட்பட 7 பேர் படுகாய மடைந்தனர். படுகாய மடைந்த அனைவரும் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (ச-39)

## தமிழ் அரசியல் கைதிகளை...

பாதிப்புக் கொடூரமானது. வன்னியில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது பல நூற்றுக் கணக்கான இராணுவத்தினரின் சடலங்கள் மொனராகலை மாவட்டத்திற்கு வந்த வண்ணம் இருக்கும்.

அதேநேரம் வடபகுதியில் அதனைவிட பல மடங்கு அதிகளவான மக்கள் யுத்தத்தினால் கொல்லப்பட்டிருப்பர். அதனை நான் உணர்வேன். சரணடைந்து புனர்வாழ்வு பெற்றுவரும் முன்னாள் போராளிகள் 12 ஆயிரம் பேரையும் அவர்களது குடும்பத்துடன் இணைப்பதற்கான பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. இவ்வாறு புனர்வாழ்வு வழங்கப்பட்டுவரும் முன்னாள் போராளிகள் தொடர்பான விபரங்கள் ஐ.ஓ.எம் அமைப்பிடம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் புனர்வாழ்வு முகாம்களிலும் பார்வையிடலாம்.

வடமாகாணத்தில் புதிதாக 9 நீதிமன்றங்கள் அமைக்கப்படவுள்ளது. இதனால் யாழ்ப்பாணத்தில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தின் உதவியுடன் புதிய சிறைச்சாலை அமைக்கப்படவுள்ளது.

நீர்கொழும்பு, வெலிக்கடை, பூசா ஆகிய சிறைச்சாலைகள் மிகமோசமாக உள்ளது. ஆனால் யாழ். சிறைச்சாலை சுகாதாரத்துடன் சிறப் பாக இருக்கிறது. அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலி உறுப்பினர்களைச் சந்தித்து கலந்துரையாடினேன். எங்களுடன் இருந்த எமக்கு மேலான வர்கள் பாராளுமன்றத்தில் இருக்கிறார்கள்.

நாங்கள்மட்டும் சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கவேண்டுமா என அவர்கள் என்னிடம் கேட்டார்கள். சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளின் விடுதலைக்கான தாமதம் நீதிமன்ற நடவடிக்கைகள் தான் பொலிசார் ஏற்படுத்தும் தாமதங்களால் நீதிமன்ற விசாரணைகள் பின்தள்ளப்பட்டுப் போகின்றன. இதனை நிவர்த்திசெய்து தமிழ் அரசியல் கைதிகளை விரைவில் விடுவிக்க பிரதம நீதியரசர், நீதியமைச்சு, சட்டமா அதிபர் ஆகியோர் இணைந்து நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

யாழ் மாவட்டத்தில் துடிப்புமிக்க பெண் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் யாழ்ப்பாண மக்களுக்கு பல்வேறு திட்டங்களை வழங்கவேண்டும் என எம்மிடம் கேட்டுள்ளார்.

இவர் போன்ற அரசியல்வாதிகள் சுதந்திரமாக வீதியில் இறங்கி மக்களுக்கு சேவையாற்றுவதற்கான சூழல் ஏற்படவேண்டும் என்பதனையே ஜனாதிபதி விரும்புகின்றார் என பிரதியமைச்சர் விஜிதமுனி சொய்சா தெரிவித்தார். (ச-5)

## கூட்டமைப்பின் கோரிக்கை...

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

இலங்கையில் போர் முடிபுற்ற பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து செயற்பட வேண்டுமென்று ஒரு முடிபினை எடுத்தது. அந்த முடிபின் அடிப்படையில் வடக்கு-கிழக்கு இணைப்பு தொடர்பான ஒரு தீர்மானத்துக்கு இரு கட்சிகளும் தற்போது எதுவும் பேசுவதில்லையென முடிபெடுக்கப் பட்டது.

வடக்கு, கிழக்கு மக்களின் அடிப்படை தேவைகள் மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் தொடர்பில் இணைந்து செயற்படுவது என்று முடிபெடுக்கப்பட்டது.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அண்மையில் இந்திய விஜயத்தின்போது இரு கட்சிகளும் இணக்கம் கண்ட விடயங்களுக்கு மாறாக வடக்கு, கிழக்கு இணைக்கப்பட வேண்டுமென்று கோரியுள்ளனர். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

தமிழ், முஸ்லிம் சமூகம் ஒன்றிணைந்து ஒரு பொதுவான இணக்கப்பாட்டின் அடிப்படையில் ஒரு தீர்வினை முன்வைக்க வேண்டுமென்று இணங்கியிருந்தோம். இந்த நிலையில் வடக்கு, கிழக்கு இணைக்கப்பட வேண்டுமென்ற, கூட்டமைப்பின்ஒரு தலைப்பட்ச கோரிக்கையை நாம் எதிர்க்கின்றோம்.

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு நியமனம், ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை நிறுத்தம் போன்ற விடயங்களில் இலங்கையைக் காப்பாற்ற வேண்டிய ஒரு நிலைமை இந்தியாவுக்கு உண்டு.

அத்துடன் இலங்கை அரசு அரசமைப்பில் திருத்தம் மேற் கொள்வதற்கான நடவடிக்கையில் மிக வேகமாக ஈடுபட்டுள்ளனர். இந்த நிலைமையை இந்தியா சாதகமாக பயன்படுத்தி வடக்கு கிழக்கு மீண்டும் இணைக்கப்பட்டு ஒருதீர்வுத் திட்டத்தையும் சேர்த்து அரசியலமைப்பை திருத்துமாறு கோருகின்றது. இதனை ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒரு கட்டாயநிலையில் இலங்கையுண்டு என்றும் அவர் கூறினார். (ச-5,9)

## வேலணையில் மருத்துவ...

காப்பாகத் தங்குவதற்காகவே இங்கு அனுப்பப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் கூறி, நிலைமையை சமாளித்ததாக தெரியவருகிறது. தற்போது டாக்டர் செனவிரட்ன மந்திகை வைத்திய சாலை விடுதியில் தனி அறை ஒன்றில் தங்கியுள்ளார். அவருக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (ந)

## ஜனாதிபதியின் பாரியா...

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கண் சத்திரசிகிச்சை நிலையத்தில் சத்திர சிகிச்சை மேற்கொண்ட 15ஆம் இலக்க நோயாளர் விடுதியின் நோயாளர்களையும் பார்வையிட்ட இவர்கள், மக்களுடன் உரையாடினர். இதனைத் தொடர்ந்து யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலை பணிப் பாளருடன் சந்திப்பு ஒன்றினையும் மேற்கொண்டனர். கண் சத்திரசிகிச்சை நிலையம் நவீன முறையில் அமைக்கப்பட்ட பின்னர் 3 நாட்களில் 110 பேருக்கு கண் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச் சந்திப்பில் மேலும் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நிதியுதவி மற்றும் வசதிகள் செய்யப்படும் என நாடாளுமன்ற உறுப்பினரும் வைத்திய நிபுணருமான சுதர்சினி பெர்ணான்டோ பிள்ளை ஆகியோர் உறுதியளித்தனர். தென்னிந்திய நடிகை அசினும் மேலும் உதவிகள் செய்வதாக உறுதியளித்தார். (ச-5)

உடன் தேவை

❁ கணனி ரைப்பிங்-தமிழ்
(Computer Typing)
❁ கணனி பக்கவடிவமைப்பு
(PageMaker)
❁ போட்டோ சொப்
(Photoshop)

என்பவற்றில் தகைமையுடைய இருபாலாரும் நேரில் வரவும்.

பொது முகாமையாளர்,
வலம்புரி
இல.3,இரண்டாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி ,யாழ்ப்பாணம்.

பதவி வெற்றிடம்

❁ ஓவ்செற் இயந்திர இயக்குநர் (ஆண்கள்)
❁ ஓவ்செற் இயந்திர பயிலுநர்கள் (ஆண்கள்)
❁ பத்திரிகை மடிப்பவர்கள் (ஆண்கள், இரவுக் கடமை)

யாழ்.நகரில் இருந்து 6 KM தூரத்திற்குள் வதியும் தகைமையுடையவர்கள் நேரில் வரவும்.

இல.3,இரண்டாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி ,
யாழ்ப்பாணம்.

பொது முகாமையாளர்,
வலம்புரி

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.